www.padippakam.com

Eathuvarai Sep. - Oct. 2009

# எதுவரை?

மரணத்திலிருந்து வாழ்விற்கு...

செப்டம்பர்-அக்டோபர் 2009



உலகம் ஞானமின்றி பெருந்திறமை அடைந்திருக்கிறது,
மனசாட்சியின்றி அதிகாரத்தைப் பெற்றிருக்கிறது.

உலகம் பேரழிவு ஆயுத ஆதிக்கத்தில் இராட்சத முன்னேற்றத்தையும்
அறவியலில் குழந்தையின் அறிவையும் கொண்டது.

நமக்கு சமாதானத்தைவிட போரைப்பற்றிய பாடமே தெரியும்,
வாழ்க்கையைவிடக் கொலையைப் பற்றியே அதிகம் தெரிந்துவைத்திருக்கிறோம்.

- உமர் பிராட்லி

படிப்பகம்

# குறுந்திரைபட விழா 2009

VIMBAM TAMIL SHORT FILM FESTIVAL

## விம்பம் - 2009

இப் போட்டியில் கலந்துகொள்ள
கட்டணம் எதுவும் செலுத்தவேண்டியதில்லை.

31. 10. 2009 திகதிக்கு முன்பு
உங்கள் படைப்புகளை **DVD** யில் பதிவுசெய்து
கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

படைப்புகள் யாவும் 20 நிமிடங்களுக்குக்
குறைவாக இருத்தல் வரவேற்கத்தக்கது.

Trinity Centre
East Avenue
Eastham
London E12 6SG

**28 NOVEMBER 2009**
சனி மாலை
6.00 மணி

VIMBAM

தொடர்புகளுக்கு:
VIMBAM, 4 Burges Road, London E6 2BH, UK
Tel: 020 8581 9328, 07956 490 694, 07984 136 160
E-mail: vimbam@aol.com

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

Eathuvarai
Bi-Monthly ■ Sep. Oct. 2009

02

எதுவரை?
இருமாத இதழ்
செப்டம்பர்-அக்டோபர் 2009






நிர்வாக ஆசிரியர்:
M.Fauzer

சஞ்சிகையை தொடர்ச்சியாக கொணர்வதற்கு பங்காற்றும் கூட்டு முயற்சி இது.

தொடர்புகளுக்கு:
**eathuvarai@gmail.com**
**Tel: 0044-7912 324 634**

02, Langley Walk,
Crawley,
RH11 7LR,
U.K

இணையதளம்:
http://eathuvarai.wordpress.com

இதழ் வடிவமைப்பு: ஜீவமணி

அச்சுப்பதிப்பு &
இந்திய விற்பனை

புலம்

**அலைபேசி: 9789864555, 9840603499**
pulam2008@gmail.com

Private Circulation Only

**நேர்காணல்:**

7 நான் எப்போது அடிமையாயிருந்தேன்...
**புஸ்பராணி**

42 நல்லாட்சி வெகு வேகமாக வீழ்ச்சியடைந்து வருகின்றது
**பேராசிரியர் ஜயந்த செனவிரத்ன**

**திரைமொழி:**

47 கைவிடப்பட்ட நிலம் விமுக்தி ஜயசுந்தர

**பத்தி:**

18 கதியிழந்த மக்கள் அல்லது கடவுளர்களிடமிருந்து நம்மைக் காப்பாற்றிக்கொள்ளுதல்
**இளமொட்டைச் சிறுபுழுதி**

**கட்டுரை:**

31 ஒரு மைய உலகமும் தேசிய இன விடுதலையும்
**எஸ்.வி. ராஜதுரை**

55 இலங்கை அரசியல்: தேசிய வாதங்களும் அதன் தோல்விகளும்
**வி. சிவலிங்கம்**

65 இந்தியா - சீனா முரண்பாடு: அபாயகரமான புரிதல்கள்
**பாஸ்கர்**

**அஞ்சலி:**

23 மரிலீன் பிரெஞ்ச் (1929 - 2009)
**ஜி.ரி. கேதாரநாதன்**

**நுண்கலை:**

61 வாஸ்லி கன்டநிஸ்க்கி
**கோ. கையிலாசநாதன்**

**சிறுகதை:**

26 மூன்று படுகளத்துடன் தேடுபவன்
**த. மலர்ச்செல்வன்**

**நிகழ்வு பதிவு:**

45 இலங்கை விவகாரம், நிலவரம் தொடர்பான மாநாடு

**நூல் மதிப்புரை:**

53 இப்படியாயிற்று ஒவ்வொரு தடவையும்
**யாதவன்**

**கவிதை:**

- **த.அகிலன்**
- **சலனி**
- **நவாஸ் சௌபி**
- **மகேஷ் முனசிங்க**
- **வசீம் அக்ரம்**
- **பஹீமாஜஹான்**
- **கல்லூரன்**
- **ஆனந்த பண்டார**
- **றஸ்மி**
- **பக்கிரி**

படிப்பகம்

www.padippakam.com



# அதிகாரத்தை நோக்கிய மாற்றுக் குரல்கள் தொடர்க...

இலங்கை இன்று மிக மோசமான அரசியல், இராணுவச் சூழலுக்குள் தள்ளப்பட்டு நிற்கிறது. உள்நாட்டளவில் தீர்க்கப்பட வேண்டிய பல்வேறு பிரச்சினைகள் விசுவரூபம் கொண்டுள்ள அதேவேளை, உலகின் பல்வேறு நாடுகளின் ஆதிக்கப் போட்டியும் இலங்கை மீது அழுத்தமாய் கால்பதித்து வருகிறது.

தேசிய இனப்பிரச்சினை, யுத்தத்தின் பின்விளைவாய் தோன்றியுள்ள அகதிகள், பொருளாதார நெருக்கடி, ஜனநாயக மறுப்பு, மனித உரிமை மீறல்கள், புனர்வாழ்வு புனரமைப்பு, அரசியல் தீர்வு போன்ற விடயங்கள் உள்நாட்டளவில் முக்கியத்துவமாக உள்ளன.




சர்வதேச ரீதியாக உலக ஆதிக்கப் போட்டியின் காரணமாக தெற்காசியாவின் பகடைக்காயாக இலங்கை மாற்றப்பட்டுள்ளது. இந்தியா, சீனா, ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பா நாடுகளின் நலன்களுக்கான அரசியல் போட்டிக் களமாக இலங்கை மாறியும் விட்டது.

இந்த நிலையில், நாம் இலங்கை அரசை முற்றுமுழுதாக ஆதரிப்பதோ, தமிழ்த் தேசியவாதத்தை ஆரத்தழுவி நிற்பதோ இந்த நெருக்கடியை சரியாக அணுகுவதில் பாரிய குறைபாடுகளையும், தவறான அர்த்தப் பாடுகளையும் கொண்டுவந்து சேர்க்கும் என்பது உறுதியானது! நாம் இந்த விடயங்களை அணுகுவதற்கு நமக்குள் பரந்துபட்டதும், பன்மைத்துவமானதுமான சிந்தனைகளைக் கொண்டு தெளிவான அடித்தளத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டியுள்ளது.

## தேசிய இனப்பிரச்சினை

காலனித்துவ ஆட்சியின் காரணமாக உருவான தேசிய இனப்பிரச்சினை, 60 வருட காலமாக நீடித்து வருகிறது. மோதல், முரண்பாடுகள், இராணுவ வழிமுறைகள் என தொடர்ந்த, தொடரும் இந்த அடிப்படைப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுவது அவசியமாகும்.

இலங்கையின் தேசிய சிறுபான்மை இனங்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு இராணுவவழி மூலம் தீர்வைக் காண முடியாது! அரசியல் தீர்வின் மூலமே இந்தப் பிரச்சினைக்கு தீர்வு கண்டாக வேண்டும். அரசியல் தீர்வை முன்வைப்பதில் இன்றைய மகிந்த ராஜபக்ச அரசு எந்த ஆர்வத்தையும் காட்டவில்லை. அரசியல் தீர்விற்கான நம்பிக்கை அரசிடமிருந்து வெளிப்படாத நிலையில், நாடு நீண்ட காலமாய் எதிர்கொள்கின்ற இனமுரண்பாடு முடிவுக்கு வந்து விடுமென நம்புவது முட்டாள்தனமின்றி வேறில்லை.

விடுதலைப் புலிகளின் இராணுவத் தோல்வி தமிழ் மக்களின் தோல்வி அல்ல. இலங்கை அரசும், விடுதலைப்புலி ஆதரவாளர்களும் இந்த விடயத்தை ஒரே பார்வையிலேயே அணுகுகின்றனர். அரசு இனப் பிரச்சினைக்கு



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் தீர்வு தேவையற்றது என்கிறது. புலி ஆதரவாளர்கள் புலிகள் அழிக்கப்பட்டுவிட்டதால் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படாது என்கின்றனர். அரசு, புலிகள் என்கிற இருவேறு அதிகார மையங்களுக்கு இடையில் இந்தப் பிரச்சினை சிக்குண்டு அலைக்கழிக்கப்பட்டது இனிப் போதும்.

யுத்தம் முடிந்துவிட்டது என்பது நம் எல்லோருக்கும் தெரியும். ஆனால், இந்த யுத்தம்/முரண்பாடு ஏற்படக் காரணமாயிருந்த அரசியல் சமூகக் காரணிகள் இன்னமும் அழிந்துவிடாமல், முன்பைக் காட்டிலும் மேலும் இறுக்கமடைந்தேயுள்ளது.

**அரசியல் தீர்விற்கான நம்பிக்கை அரசிடமிருந்து வெளிப்படாத நிலையில், நாடு நீண்டகாலமாய் எதிர்கொள்கின்ற இனமுரண்பாடு முடிவுக்கு வந்து விடுமென நம்புவது முட்டாள்தனமின்றி வேறில்லை.**

இந்த நிலைமையானது நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் இலங்கையின் அனைத்து இன மக்களையும் வெவ்வேறு வழிகளில் மோதலும் முரணுமான சூழலுக்கே கொண்டு சென்று தள்ளும். இது அரசியலின் தவிர்க்க முடியாத விதியாகவும் உள்ளது.



### யுத்தத்தின் விளைவாய் தோன்றியுள்ள அகதிகள்

உலகளவில் இன்று அதிக கவனத்தை ஈர்த்துள்ள வவுனியா இடைத்தங்கல் முகாம்களில் உள்ள அண்ணளவாக 3 லட்சம் மக்களின் நிலை மிக மோசமான மனிதத்துயரமாக நீடிக்கிறது. யுத்தத்தில் ஈடுபட்ட இரண்டு தரப்புமே வன்னிக்குள் சிக்குண்ட மக்களின் உயிர் பற்றியோ, அவர்களின் இருப்பு பற்றியோ, பாதுகாப்பு பற்றியோ எந்த அக்கறையும் கொண்டிருக்கவில்லை.

மக்கள் விரோத அரசும், மக்கள் விரோத அமைப்புமே மக்கள் இடம் பெயர்ந்து மனித சிறைக்கூடங்களுக்குள் தள்ளுப்பட காரணமானவர்கள். சொந்த மக்கள் மீது கொலைத் தாக்குதல்களை நடாத்தி மக்கள் இழப்புகளை அதிகரித்து யுத்தத்தை வெற்றி கொள்ள நினைத்தது இலங்கை அரசு. மக்களை போரின் பணயக் கைதியாக்கி இதன்மூலம் மக்கள் அழிவுகளையும், அரண்களையும் வைத்துக்கொண்டு தன்னை பாதுகாத்துக் கொள்ள தந்திரோபாயமாக செயற்பட்டதுடன் பிரச்சாரத்திலும் ஈடுபட்டது விடுதலைப்புலிகளின் தலைமை. இதன் காரணமாகவே பெருமளவிலான மக்கள் இந்த மனிதத்தடுப்பு முகாம்களுக்குள் கொண்டுவந்து தள்ளப்பட்டனர்.

அரசு என்ற வகையில் போரின் காரணமாக இடம்பெயரும் மக்களின் பாதுகாப்பினையும் அவர்களுக்கான அடிப்படை வசதிகள் கிடைக்கப் பெறுவதனையும் உறுதிப்படுத்தி இருக்க வேண்டும்
- இந்த மக்களின் இடப்பெயர்வு திடீரென ஏற்பட்டதொன்றல்ல. ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டதுதான் - அரசுதான் அந்த மக்களை தமது கட்டுப்பாட்டு பிரதேசத்திற்கு வருமாறு அழைத்தது - வந்த பொதுமக்களை கவுரவமாக நடாத்துவதிலும், பராமரிப்பதிலும் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும் அரசு முழுமையாகத் தவறிவிட்டிருக்கிறது.

முகாம்களின் நிலைமையை பார்வையிடுவதற்கு சர்வதேச நிறுவனங்களையோ, மனித உரிமை அமைப்புகளையோ, சுதந்திர ஊடகங்களையோ, எதிர்க்கட்சியினரையோ இன்னமும் அரசு அனுமதிக்கவில்லை. அனைத்துலக மன்னிப்புச் சபை இந்த முகாம்கள் தொடர்பாக தமது வன்மையான கண்டனத்தை வெளிப்படுத்தி வருகிறது.

- உணவு, உடை, சுகாதாரம், குடிநீர் போன்ற அடிப்படைத் தேவைகள் நிவர்த்தி செய்யப்படவில்லை.
- மனித உரிமை மீறல்கள் தொடர்கின்றன .
- சுதந்திரமான நடமாட்டத்திற்கு தடை



படிப்பகம்

www.padippakam.com

- குடும்ப உறுப்பினர்களை பிரித்து, ஒன்றுசேர்ந்து வாழ்வதற்கான அனுமதி மறுப்பு
- இடைத்தங்கல் முகாம்களை இராணுவ அதிகாரிகள் நிர்வகிப்பது.
- கல்வி மறுப்பு
- தொடர்ந்தும் கண்காணிக்கப்படுவது

என பல்வேறு நெருக்கடிகள் தொடர்கின்றன. இந்த விடயங்களால் இடைத்தங்கல் முகாம்களிலுள்ள மக்கள் கடுமையான உளவியல் நெருக்கடிகளுக்கு ஆளாகி வருகின்றனர். நாளொன்றுக்கு 15 தொடக்கம் 30 பேர் வரை மரணமடைந்து வருகின்றனர்.

இந்த மக்களை 180 நாட்களுக்குள் மீள்குடியேற்றுவோம் என அரசு சர்வதேச சமூகத்திற்குமுன் வாக்குறுதி அளித்துள்ள போதிலும், இக்காலப் பகுதிக்குள் மீள்குடியேற்றப்படுவதற்கான எந்தச் செயற்பாடுகளையும் கண்டுணர முடியவில்லை.

அரசு, இந்த மக்களை தொடர்ச்சியாக காலவரையறையற்ற வகையில் முகாம்களில் இருத்திவைக்க முயல்வதாகவே அதன் செயற்பாடுகள் உள்ளன. இம்மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்த பிரதேசங்களில் இலங்கை படையினரின் பாரிய முகாம்களை நிறுவுவதும், பாதுகாப்பு வலயங்களை உருவாக்குவதும், வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நிலங்களை ஒதுக்குவதும், வளங்களை கையகப்படுத்துவதும் நடந்து வருகிறது.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து அகதிகளாகியுள்ள மக்களின் பிரச்சினைகளுடன் வடக்கிலிருந்து புலிகளால் துரத்தியடிக்கப்பட்ட ஒரு லட்சம் முஸ்லிம்கள் இன்னமும் வடக்கிற்கு வெளியில்தான் வாழ்கின்றனர். யுத்தத்தின் காரணமாய் கிழக்கு மாகாணத்திலும் ஏற்பட்ட அகதிகளின் இருப்பு இன்னமும் தொடர்கிறது. யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு வலயம் என்றபோர்வையில் ஆயிரக்கணக்கானோர் இடம் பெயர்க்கப்பட்டுள்ளனர். இம்மக்கள் அனைவரையும் புனர்வாழ்வளித்து மீள்குடியேற்றம் செய்வது உடனடி அவசியமானதாகும்.

### பொருளாதார நெருக்கடி

நாட்டு மக்களில் பெரும்பான்மையோர் தமது அன்றாட வாழ்வை கொண்டு செலுத்துவதற்கான வாங்கும் சக்தியை இழந்தவர்களாகவே உள்ளனர். விலைவாசி ஏற்றம், உற்பத்தி வீழ்ச்சி, உள்ளூர் சந்தைச் சுருக்கம்,வேலையில்லாத் திண்டாட்டம், தனிநபர் கடன் சுமை அதிகரிப்பு, மக்கள் மீதான வரிச்சுமை என்பன மக்களை பாதித்து நிற்கிறது.

நாடு தழுவிய ரீதியில் போரின் காரணமாகவும், போருக்கு பிந்தியும் அதே இராணுவக் கட்டுமானத்தை தொடர்ந்தும் அரசு பேண முயல்வதால் ஏற்படும் இராணுவச் செலவீனங்கள், வெளிநாட்டுக் கடன் அதிகரிப்பு, வெளிநாட்டு முதலீட்டாளர்களின் வளச் சுரண்டல், மூலதனச் சுரண்டல் என முழு நாட்டையும் கபளீகரம் செய்யும் வகையில் பொருளாதார நெருக்கடி மோசமாக தலைவிரித்தாடுகிறது. இந்தப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அரசு, அவசர அவசரமாக செய்கின்ற வெளிநாட்டுக் கடன், பொருளாதார ஒப்பந்தங்கள், சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் ஆகியன நாட்டை திவாலாக்கி பொருளாதார நெருக்கடிக்கே இட்டுச்செல்லும்.

### ஜனநாயக மறுப்பு

இலங்கை அரசுக் கட்டமைப்பே ஒரு விதத்தில் ஜனநாயக மறுப்பை அடிப்படையாகக் கொண்டதுதான். பல்வேறு இனங்களின், பிராந்தியங்களின், அடையாளங்களின் சமத்துவத்தை மறுத்து ஒற்றைப் பரிமாணத்தில் செயற்படும் தன்மையைக் கொண்டுள்ளது. அதனுடன் சேர்த்து தற்போது மேலோங்கியுள்ள இராணுவவாத அணுகுமுறை, மோசமான ஜனநாயக மறுப்பிற்கு இட்டுச்சென்றுள்ளது. அவசர கால நிலைமை தொடர்ந்தும் நீடிக்கப்படுகிறது. ஊடகங்கள் மோசமாக அடக்கப்படுதலும் கண்காணிக்கப்படுதலும், எந்தவிதமான வரன்முறையும் இன்றி கைது செய்யப்படுதல் தடுத்து வைக்கப்படுதல் கொல்லப்படுதல், எதிர்க்கட்சிகளின் சுதந்திரமான அரசியல் செயற்பாடுகளுக்கு இடையூறு, தொழிற்சங்கங்களின் போராட்டங்களுக்கு காயடிப்பு, இன, மத, அரசியல், சமூக அடையாளங்களை இல்லாது ஒழிப்பதற்கான அரசியலமைப்பு ஏற்பாடுகள், சிவில் பதவிகளில் இராணுவ அதிகாரிகளின் நியமனம் இவைகள் மோசமான ஜனநாயக மறுப்பின் தெளிவான அடையாளங்களாகும்.

### புனர்வாழ்வு - புனரமைப்பு

பாதுகாப்பு மைய அணுகுமுறையிலான புனரமைப்பு, மீள்குடியேற்றம் நடைபெறுவது தவிர்க்கப்பட வேண்டும். கவுரவமான சிவில் வாழ்க்கை வாழ்வதற்கான அடிப்படையை உருவாக்கும் வகையில்தான் இம்மக்களின் புனர்வாழ்வு மீள்குடியேற்றங்கள் நடைபெற வேண்டும்.

போரில் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ள கைம்பெண்கள், ஆதரவற்றோர், அங்கவீனமுற்றோருக்கு சகல வாழ்வாதார வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். விவசாயிகள், மீனவர்கள், சிறு உற்பத்தியாளர்கள், கைவினைஞர்கள், வாழ்க்கையைத் தொடங்குவதற்கு ஆதாரமான உதவிகள் செய்யப்படுதல் வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

**தமிழீழம் என்பது சாத்தியமற்ற அரசியல் கோரிக்கையாகும். அதேபோல் ஒற்றையாட்சி என்பதும், சிங்கள அரசு என்பதும் ஏற்கக்கூடியதல்ல. சமஷ்டி அடிப்படையில் பிராந்தியங்களுக்கு சுயாட்சியை வழங்குவதன் மூலமே இலங்கையின் ஒருமைப்பாட்டையும், இனத்துவ, பிராந்திய சமத்துவத்தையும் உறுதிப்படுத்த முடியும்.**

### இனப்பிரச்சினைக்கு தீர்வு

இலங்கைவாழ் அனைத்து மக்களும் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளுக்கான தீர்வும், சமூக இணக்கமிக்க வாழ்வுக்கான வாசல் திறப்பும், தேசிய இனப் பிரச்சினைகளுக்கு நியாயமான அரசியல் தீர்வு காண்பதில்தான் தங்கியுள்ளது. மோதலற்ற வாழ்வு, பொருளாதார வளர்ச்சி, மனித உரிமையும் சமத்துவத்தையும் நிலைபெறச்செய்தல், நல்லாட்சி என்பன மலர்வதற்கு இலங்கையின் அரசியலமைப்பில் உரிய ஏற்பாடுகள் செய்யப்படுவது அவசியமாகும்.

தமிழீழம் என்பது சாத்தியமற்ற அரசியல் கோரிக்கை என்பதுடன் தோல்வியுற்ற, மக்கள் மீது அழிவுகளை கொணர்ந்த அரசியல் வழிமுறையுமாகும். அக்கோரிக்கை தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களிடையே மேலும் முரண்பாடுகளை ஏற்படுத்திய நிலைபாடுமாகும். அதேபோல் ஒற்றையாட்சி என்பதும், சிங்கள அரசு என்பதும் ஏற்கக்கூடியதல்ல. சமஷ்டி அடிப்படையில் பிராந்தியங்களுக்கு சுயாட்சியை வழங்குவதன் மூலமே இலங்கையின் ஒருமைப்பாட்டையும், இனத்துவ, பிராந்திய சமத்துவத்தையும் உறுதிப்படுத்த முடியும்.

இதன் முதற்கட்டமாக, 13வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கி, மாகாண சபைகளை சுயாதீனமாக இயங்கச் செய்வதுடன், சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவில் இணக்கம் கண்ட "பெரும்பான்மைக் குழுவின் அறிக்கையை அமுல்படுத்தவும் வேண்டும். இதன் தொடர்ச்சியாகவும், அடுத்தகட்டமாகவும் "சமஷ்டி"யை நோக்கி முன்செல்வதற்கான அரசியல் சூழலை ஏற்படுத்த வேண்டும்.

இந்தப் பணிக்காக அனைத்து அரசியல் நிறுவனங்களும், சமூக இயக்கங்களும், சமூகசக்திகளும், தனிநபர்களும், கூட்டாகவும், தனியாகவும் இணைந்து பணி செய்வது அவசியமாகும். சிங்கள மக்கள் மத்தியில் இதற்கான அறிவூட்டல்கள் அவசியம் செய்யப்பட வேண்டியுள்ளது. தேசிய இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வில் சிங்கள மக்களின் அரசியல் ஒருமைப்பாடும், பங்களிப்பும் மிக மிக முக்கியமானதுதாகும்.

விடுதலைப்புலிகள் அமைப்பு மிக மோசமான, மக்கள் விரோத, பாசிசப் பண்புகளை உள்ளடக்கிய அமைப்பாகவே வளர்ந்து இன்று முற்றாக அழிக்கப்பட்டு விட்டது. அதன் ஆதிக்கமும் இருப்பும் முற்றாக இல்லாமல் ஆக்கப்பட்டு விட்டது. விடுதலைப் புலிகளின் அரசியல்தோல்வி எப்போதோ எழுதப்பட்டதொன்று. அது இப்போதுதான் இராணுவ ரீதியாக தோல்வியடைந்துள்ளது. விடுதலைப்புலிகளை சர்வதேச நாடுகளின் துணையுடன் தோல்வியுறச் செய்த அரசானது மிக மோசமான பாசிச குணாம்சங்களை தனக்குள் மேலும் அதிகரித்து நாட்டு மக்களையும், சமூக அரசியல் இயக்கங்களையும், செயற்பாடுகளையும் மோசமாக நசுக்கி வருவது நமக்கு முன்னுள்ள அடுத்த சவாலாக இன்று எழுந்துள்ளது.

ஏற்கனவே, நாம் சுட்டிக்காட்டியதுபோல், ஜனநாயக மறுப்பு, மனித உரிமை மீறல்கள், பௌத்த-சிங்களத் தேசியவாதம், சிறுபான்மையினரின், இன, மத அடையாளங்களை மறுத்தல், அவர்களது அரசியல் உரிமைகளை நிராகரித்தல், குடும்ப ஆதிக்கம், ஊழல், அதிகார துஷ்பிரயோகம் என தன்னை ஸ்திரப்படுத்தி அனைத்து மக்களின் குரல்களையும் நசுக்க முற்படுகிறது.

நாம் அனைவரும் எதிர்கொள்கின்ற ஒன்றோடொன்று தொடர்புற்ற இந்தப் பிரச்சினைகளை தெளிவாகவும், நேர்மையாகவும் அணுகுவது ஊடாகத்தான் இலங்கை மக்கள் நீண்டகாலமாய் எதிர்கொண்டு வருகின்ற நெருக்கடிகளுக்கும், முரண்பாடுகளுக்கும், தலையீடுகளுக்கும் தீர்வை கண்டுகொள்ள முடியும். இந்த முக்கியத்துவமான விடயங்கள் மீது நம் அனைவரினதும் கவனத்தை குவிப்பதும் நிலைமைகளை மாற்றியமைப்பதற்கு செயற்படுவதும் அவசியமாகியுள்ளது.

இதன் அடிப்படையில் தான் இந்த இதழில் இவைபற்றிய கவனக்குவிப்பைச் செய்யும் படைப்புகளையும் கருத்துகளையும் கூடியவரை பதிவுசெய்ய முயன்றிருக்கிறோம்.

**▣ எம்.பௌசர்**





படிப்பகம்

www.padippakam.com



த. அகிலன்

# மரணத்துக்கு முன்னும் பின்னுமான குறிப்புகள்

01

25.02.2009 (முன்)

நமது தொலைபேசி
உரையாடலை
கேட்டுக்கொண்டிருக்கின்றன
நமக்குச் சொந்தமற்ற செவிகள்.
பீறிட்டுக்கிளம்பும் சொற்கள்
பதுங்கிக் கொண்டபின்
உலர்ந்து போன வார்த்தைகளில்
நிகழ்கிறது.
நீ உயிரோடிருப்பதை அறிவிக்கும்
உன் ஒப்புதல் வாக்குமூலம்.
வெறுமனே
எதிர்முனை இரையும்
என் கேள்விகளின் போது
நீ
எச்சிலை விழுங்குகிறாயா ?
எதைப்பற்றியும்
சொல்லவியலாச்
சொற்களைச் சபித்தபடி
ஒன்றுக்கும் யோசிக்காதே
என்கிறாய்..
உன்னிடம்
திணிக்கப்பட்ட
துப்பாக்கிகளை நீ
எந்தப்பக்கமாகப் பிடிப்பாய்
வாய் வரை வந்த
கேள்வியை விழுங்கிக்கொண்டு
மௌனிக்கிறேன்.
தணிக்கையாளர்களாலும்
ஒலிப்பதிவாளர்களாலும்
கண்டுகொள்ளமுடியாத
ஒருதுளிக்கண்ணீர் புறங்கையில்
உதிர்கிறது..
தொலைபேசிகளை
நிறைக்கிறது
ஒரு நிம்மதிப்பெருமூச்சு..
நீ நிம்மதியாப் போ..



02

05.03.2009 (பின்)

அவனது பெயரில் அழகிருந்தது..
அன்பும் கூட
அவனோடு எப்போதுமிருக்கும்
அவனது மென்புன்னகையைப் போலவும்
அவனது புன்னகை ஒரு வண்டு.
மற்றவர்களின் இதயத்தை
மொய்த்துவிடுகிற வண்டு.
அவனுக்கு இரண்டு பெயர்கள் இருந்தன..
செல்லமாய் ஒன்றும்
காகிதங்களில் ஒன்றுமாய்
எதைக்கொண்டு அழைத்தாலும்
அவனது புன்னகை
ஒரே மாதிரியானதுதான்..
மாற்றமுடியாதபடி,
அவனுக்கு மூன்றாம் பெயரை
அவர்கள் வழங்கினர்
அந்த மூன்றாம் பெயர்
அவனது புன்னகையைப்
பிடுங்கிவைத்துக்கொண்டு
துவக்குகளைப் பரிசளித்தது.
அவனது விருப்புகளின்
மீதேறிநின்று பல்லிளித்தது.
அவனது தாயைப் பைத்தியமாய்த்
தெருவில் அலைத்தது.
அம்மா மூன்றாம் பெயர்
அவனைக் கொன்றுவிடுமெனப்
புலம்பியபடியிருந்தாள்.
அவனது முதலிரண்டு பெயர்களையும்
திரும்பத் திரும்பச்
சொல்லிக்கொண்டிருந்தாள்..
மந்திரங்களின் உச்சாடனம்போல..
இறுதியில் அந்த மூன்றாம் பெயர்
அவனைக் கொன்றது.
அம்மா பேச்சை நிறுத்தினாள்..
யாருமற்ற வெளியில்
அலைந்துகொண்டிருக்கிறார்கள்
முதலிரண்டு பெயர்களும்
மரணத்தால் எடுத்துச்செல்லமுடியாத
அவனது புன்னகையும்.. அம்மாவும்

(தம்பி அன்பழகனுக்கு)



படிப்பகம்

www.padippakam.com



# நான் எப்போது அடிமையாயிருந்தேன்...

**புஸ்பராணி**



ஈழப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவர் தோழியர் புஸ்பராணி. தலைமறைவுப் போராளிகளிற்குச் சோறிட்டு வீட்டிற்குள் தூங்கவைத்துவிட்டு பட்டினியுடன் வீட்டு வாசலில் காவலிருந்த ஒரு போராளிக் குடும்பத்தின் மூத்த பெண்பிள்ளை. "ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம்" தந்த மறைந்த தோழர் சி.புஸ்பராஜாவின் மூத்த சகோதரி. அறுபது வயதை நெருங்கும் பிராயத்திலும் அரசியற் கூட்டங்கள், இலக்கியச் சந்திப்புகள், பெண்கள் சந்திப்புகள், தலித் மாநாடுகள் என உற்சாகமாகத் தனது பங்களிப்பைச் செலுத்திக்கொண்டிருப்பவர். தனக்குச் சரியெனப்பட்டதை எந்தச் சபையிலும் சந்தர்ப்பத்திலும் எதற்கும் அஞ்சாமல் துணிந்து பேசிக்கொண்டிருக்கும் கலகக்காரி.

தமிழரசுக் கட்சியின் தொண்டராக ஆரம்பிக்கப்பட்ட அவரது அரசியல் வாழ்வு எழுபதுகளின் ஆரம்பத்தில் ஆயுதந் தாங்கிய இளைஞர் போராட்டக் குழுக்களின் பக்கம் அவரைக் கூட்டிவந்தது. சில வருட இயக்க அனுபவங்களிலேயே போராட்ட இயக்கங்களுக்குள் பெரும் கசப்புகளைச் சந்திக்க நேரிட்ட அவர் இயக்க அரசியலிலிருந்து ஒதுங்கிக்கொண்டாலும் தொடர்ந்தும் இலங்கை அரசின் அடக்குமுறைகளை எதிர்கொள்ள நேரிட்டது. புஸ்பராணி 1986ல் பிரான்ஸுக்குப் புலம் பெயர்ந்தார்.

ஈழப் போராட்டத்தில் தனது அனுபவங்களை நூலாக எழுதி வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் புஸ்பராணியைச் சந்தித்து "எதுவரை" இதழிற்காகச் செய்யப்பட்ட இந்நேர்காணல் அவரின் புத்தகத்திற்கான ஒரு முன்னுரைபோல அமைந்துவிட்டதில் மகிழ்ச்சியே. ஒன்றரைமணி நேரங்கள் நீடித்த இந்த நேர்காணல் பாரிஸில் 20.06.2009ல் பதிவு செய்யப்பட்டது.

**சந்திப்பு: ஷோபாசக்தி**
**படங்கள்: தியோ ரூபன்**





படிப்பகம்

www.padippakam.com

நான் யாழ்ப்பாணத்தின் கடற்கரைக் கிராமமான மயிலிட்டியில் 1950ல் பிறந்தேன். எனக்கு ஆறு சகோதரர்கள், ஆறு சகோதரிகள். குடும்பத்தில் நான் நான்காவது. மறைந்த புஸ்பராஜா எனக்கு அடுத்ததாகப் பிறந்தவர். எனக்கும் தம்பி புஸ்ப ராஜாவுக்கும் ஒருவயதுதான் இடைவெளி. வசதியான குடும்பம் இல்லையென்றாலும் வறுமையிலும் செம்மையாக வாழ்ந்த குடும்பம் எங்களது.

எங்களது கிராமத்தில் கரையார்களே ஆதிக்க சாதியினர். அவர்கள் மத்தியில் நாங்கள் ஒரேயொரு தலித் குடும்பம். என் இளமைப் பருவத்தில் எல்லா விதமான தீண்டாமைகளும் எங்கள் கிராமத்தில் நிலவின. தேநீர்க் கடைகள் ஆலயங்கள் போன்ற வற்றுக்குள் எங்களை அனுமதிப்பதில்லை. சமூகத்தி லிருந்து நாங்கள் புறமாக வைக்கப்பட்டிருந்ததால் எங்களுக்கு நாங்களே துணைவர்கள், தோழர்கள். குடும்பத்தில் எல்லாப் பிள்ளைகளும் மிகுந்த ஒற்றுமையாக இருப்போம். அரசியல் குறித்தோ புத்தகங்கள் குறித்தோ உரையாட வேண்டியிருந் தாலும் எங்களுக்குள்ளேயே உரையாடுவோம். ஆதிக்க சாதியினரின் தேநீர்க் கடைகளுக்குப் போய் போத்தலில் தேநீர் குடிக்கவோ கோயிலுக்கு வெளியில் நின்று சாமி கும்பிடவோ நாங்கள் தயாரில்லை. புறக்கணிப்புக்கு புறக்கணிப்பையே நாங்கள் பதிலாகக் கொடுத்தோம். எங்கள் காலத்தில் எங்கள் குடும்பம் சாதித் தொழிலிலிருந்து வெளியே வந்துவிட்டது. எனது தந்தையாரும் மூத்த சகோதரர்கள் இருவரும் புகையிரதத் திணைக் களத்தில் வேலை பார்த்தார்கள். வழி, தெருவில், பாடசாலையில் ஆதிக்க சாதியினரின் கிண்டல் களுக்கோ பழிப்புகளுக்கோ நாங்கள் ஆளாகும்போது வட்டியும் முதலுமாகத் திருப்பிக் கொடுப்போம்.

ஒரு ஆடு போய் அடுத்த வீட்டு இலையைக் கடித்தால் போதும் சேலையை வரிந்து கட்டிக் கொண்டு சண்டைக்கு வந்து விடுவார்கள். சண்டையின் முதலாவது கேள்வியே "எடியே உங்களுக்கு கரையார மாப்பிள்ளை கேக்குதோ" என்பதாகத்தானிருக்கும். ஆட்டுக்கும் கரையார மாப்பிள்ளைக்கும் என்ன சம்மந்தம்? நாங்கள் பதிலுக்கு எங்களைக் கலியாணம் கட்டத் தகுதியுள்ள கரையான் இங்கே இருக்கிறானா? எனத் திருப்பிக் கேட்போம்.

எங்கள் கிராமத்தில் நான் அறியாத காலத்தில் எங்களைத் தவிர வேறுஞ்சில தலித் குடும்பங்கள் இருந்தனவாம். அவர்கள் எல்லோரும் பிழைப்புக் காகவும் வேறுகாரணங்களிற்காவும் அங்கிருந்து இடம்பெயர்ந்த பின்பும் கூட எனது தந்தையார் அங்கிருந்து போக விரும்பவில்லை. எங்கள் அய்யா எங்களை ராங்கியாகத்தான் வளர்த்தார். சாவது ஒருமுறைதான் எதுவந்தாலும் எதிர்த்து நில்லுங்கள் என்று சொல்லிச் சொல்லித்தான் எங்களை வளர்த்தார்.

நாங்களும் அப்படித்தான் வளர்ந்தோம். வாயால் பேச வேண்டிய இடங்களில் வாயாலும் கையால் பேச வேண்டிய இடங்களில் கைகளாலும் பேசினோம். எங்கள் குடும்பமே ஒரு தீண்டாமை ஒழிப்பு இயக்கம் போலத்தான் இயங்கி வந்தது.

நான் பத்தாவது வரைக்கும் மயிலிட்டி கன்னியர் மடத்தில் படித்தேன். பொதுவாக இந்துக்கள் கன்னியர் மடங்களில் படிப்பதற்கு வருவதில்லை. இந்துப் பாடசாலைகளிலோ அப்போது தலித்துகள் வேண்டாப் பிள்ளைகளாக நடத்தப்பட்டார்கள். கன்னியர் மடத்திலும் நான் சாதிக் கொடுமைகளை அனுபவித்தேன். அங்கிருந்த ஓரிரு கன்னியாஸ்திரி களைத் தவிர மற்றவர்கள் எல்லோருமே சாதிய உணர்வுடனேயே நடந்துகொண்டார்கள். அந்தக் கன்னியாஸ்திரிகள் பணக்காரர்களுக்குப் பல்லிளித்து ஏழை மாணவிகளைத் துரும்பாக மதித்தார்கள். நான் படிப்பில் கெட்டிக்காரியாயிருந்த போதும் உயர் கல்வியைத் தொடர இளவாலை கன்னியர் மடத்தில் எனக்கு இடம் கிடைத்தபோதிலும் குடும்பச் சூழ்நிலையால் என்னால் பத்தாவதுக்கு மேல் படிக்க முடியவில்லை.

அப்போது கிராமங்கள் தோறும் பெண்களிற்கு விழிப்புணர்வைத் தூண்டும் வண்ணம் மாதர் சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டிந்தன. எங்கள் கிராமத்திலும் அவ்வாறான ஒரு மாதர் சங்கத்தை ஆரம்பிக்க வேண்டுமென எனக்கு ஆர்வமிருந்த போதிலும் ஆதிக்க சாதிப் பெண்கள் என்னுடன் இணைந்து பணியாற்ற மறுத்ததால் அந்த எண்ணம் நிறைவேறவேயில்லை. நான் தமிழரசுக் கட்சியில் ஈடுபாடு காட்டத் தொடங்கினேன்.

- [ ] **அறுபதுகளில் தலித் மக்கள் மத்தியில் கொம் யூனிஸ்ட் கட்சிகள்தான் செல்வாக்கோடு திகழ்ந் தன. நீங்கள் எப்படித் தமிழரசுக் கட்சியிடம் ஈர்க்கப்பட்டீர்கள்?**

எங்களது தந்தையார் நீண்டகாலமாகவே தமிழரசுக் கட்சியின் ஆதராவாயிருந்தார் என்பது ஒரு காரணமாயிருந்தாலும் அன்றைய காலத்தில் கொம்யூனிஸ்ட் கட்சிகள் சிறிமாவின் கூட்டர சாங்கத்தில் சேர்ந்திருந்ததாலும் அந்தக் கட்சிகளின் தலைமையில் சிங்களவர்களே இருந்ததாலும் எனக்குக் கொம்யூனிஸ்ட் கட்சிகளிடம் எதுவித ஈர்ப்புமிருக்கவில்லை. தமிழரசுக் கட்சியின் கூட்டங்களைப் பார்க்கப் போவது என்றளவில்தான் முதலில் என்னுடைய அரசியல் ஈடுபாடு இருந்தது. எழுபதுகளின் தொடக்கத்தில் புஸ்பராஜா யாழ்ப் பாணத்திற்குப் படிக்கச் சென்றபோது அவருக்குப் பத்மநாபா, வரதராஜப் பெருமாள், பிரான்ஸிஸ் (கி.பி.அரவிந்தன்) போன்றவர்களுடன் தொடர்பு ஏற்படுகிறது. இந்த இளைஞர்கள் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவார்கள். தனிநாடு குறித்து இவர்கள்



படிப்பகம்

www.padippakam.com

தீவிரமாகப் பேசிக்கொண்டும் விவாதித்துக் கொண்டுமிருப்பார்கள். தமிழர் கூட்டணயினரின் செயலற்ற தன்மையில் அதிருப்தியடைந்த இவர்களைப் போன்ற இளைஞர்கள் இணைந்து 1973ல் புஸ்பராஜாவின் தலைமையில் தமிழ் இளைஞர் பேரவையை உருவாக்கினார்கள். தவராஜா, சரவணபவன், வரதராஜப்பெருமாள், பத்மநாபா, பிரான்ஸிஸ் (கி.பி. அரவிந்தன்) போன்றவர்கள் இளைஞர் பேரவையைத் தொடக்கியதில் முக்கிய மானவர்கள்.

புஸ்பராஜாவை என்னுடைய தம்பி என்பதை விட என்னுடைய அரசியல் தோழர் என்று சொல்வதே பொருந்தும். ஒரு சிறந்த திரைப்படத்தைப் பார்த்தாலோ ஒரு நாவலை வாசித்தாலோ அவர் என்னோடு அதுகுறித்துத் தீவிரமாக உரையாடுவார். அதுபோலவே அரசியல் குறித்தும் என்னோடு ஆழமாக விவாதிப்பார். புஸ்பராஜாவின் வழியாகத் தமிழ் இளைஞர் பேரவையில் நானும் இயங்கத் தொடங்கினேன்.

□ ***தமிழர் கூட்டணியின் பாராளுமன்ற நாற்காலி அரசியலுக்கு மாற்றாக தமிழ் இளைஞர் பேரவை உருவாக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டாலும் பேரவையின் அரசியல் திட்டங்களும்கூட கூட்டணியை அடிபொற்றிய வெறும் தேசியவாத மாகத்தானேயிருந்தது. சாதியம், யாழ்மையவாதம் போன்ற உள்முரண்களை அவர்களும் கண்டு கொள்ளவில்லையே?***

இப்போது அந்தத் தவறை நான் உணர்கிறேன். ஆனால் அப்போது எங்களுக்குத் தமிழர்கள் என்ற ஒற்றையடையாளமும் தனிநாடு என்ற இலட்சியமுமே முக்கியமானதாகப்பட்டது. அந்த இலட்சியத்தை அடைந்துவிட்டால் மற்றைய முரண்களைத் தீர்த்துவிடலாம் என்றே கருதினோம். நாங்கள் அமைக்கப்போகும் தமிழீழம் சாதிமத பேதமற்ற நாடாகவிருக்கும் என நம்பினோம். இன முரண் பாடுக்கே நாங்கள் முக்கியத்துவம் அளித்தோம்.

□ ***அப்போது நீங்கள் தமிழர்கள் சிங்களவர்களோடு இணைந்து ஒருபோதும் இந்த நாட்டில் வாழ முடியாது என்பதில் உறுதியாயிருந்தீர்களா?***

ஆம் மிகவும் உறுதியாயிருந்தேன். யாழ்ப் பாணத்துத் தமிழர்கள்தான் அரசின் சேவைத் துறைகளில் நிறைந்திருந்தார்கள் என்றொரு பேச்சு உண்டு. உண்மையில் காலனிய காலத்தில்தான் அரச சேவைத் துறைகளுக்குள் தமிழர்கள் நிறைந் திருந்தார்கள். நாடு சுதந்திரம் பெற்ற பின்பு சிங்களத் தேசியவாதம் வீரியத்துடன் உருவாகிவந்தபோது தமிழர்கள் வேலைவாய்ப்புகளில் புறக்கணிக்கப் பட்டார்கள். இராணுவத்திலும் பொலிஸ்துறையிலும் தமிழர்கள் அரிதாகவே சேர்த்துக்கொள்ளப்பட்டார் கள். நடந்த இனக் கலவரங்களும் இத்தகைய புறக்கணிப்புகளும் முக்கியமாகத் தரப்படுத்தல் முறையும் எங்களை அந்த முடிவை நோக்கித் தள்ளின.

> **விசாரணை என்ற பெயரில் நான் உயிரோடு தூக்குக்கு அனுப்பப்பட்டேன். நான் பொதுவாக பாவாடை - சட்டை அணிவதுதான் வழக்கம். பொலிஸ் நிலையம் போவதற்காகத் தெரிந்த ஒருபெண்ணிடம் சேலை இரவல் வாங்கி உடுத்திப் போயிருந்தேன். விசாரணையின் ஆரம்பமே எனது சேலையை உரிந்தெடுத்ததில்தான் தொடங்கியது. மிருகத்தனமாக நான் தாக்கப்பட்டேன். தொடர்ந்து இருபத்துநான்கு மணிநேரம் வதைக்கப்பட்டேன்.**

□ ***தரப்படுத்தல் திட்டம் ஒரு இனவாதத் திட்டம் என இப்போதும் கருதுகிறீர்களா?***

இல்லை. பின்தங்கிய பகுதிகளுக்கு முன்னுரிமை என்றவாறு தரப்படுத்தல் திட்டம் சீரமைக்கப்பட்ட போது இலங்கையின் பின்தங்கிய பிரதேச மாணவர்களுக்கு முன்னுரிமைகள் கிடைத்திருக் கின்றன. யாழ்ப்பாணம் தவிர்ந்த பிற தமிழ் மாவட்டங்கள் இந்தத் திட்டத்தால் முன்னுரிமையும் நன்மையும் பெற்றிருக்கின்றன. ஆனால் அதையும் யாழ்ப்பாணத்தான் இயன்றளவு தட்டிப்பறிக்க முயன்றதுதான் சோகம். யாழ்ப்பாணத்து மாணவர்கள் பின்தங்கிய பிரதேசங்களில் பதிவுசெய்து அங்கிருந்து பல்கலைக் கழக அனுமதியைக் குறுக்கு வழியில் பெற்றுக்கொண்டதும் நடந்தது. ஆனால் கடந்த இருபத்தைந்து வருடங்களாக நடந்த போரால் யாழ் மாவட்டம் வெகுவாகப் பாதிப்புற்றிருக்கிறது. சகல உள்கட்டுமானங்களும் நொறுங்கியுள்ளன. எனவே இப்போது யாழ் மாவட்டத்தையும் பின்தங்கிய பகுதியாக அறிவித்துக் கல்வியில் முன்னுரிமை வழங்குவது அவசியமானது. வெறுமனே கல்வியில் மட்டுமல்லாமல் வேலைவாய்ப்புகள் நாடாளுமன்ற உறுப்புரிமை போன்ற சகல துறைகளிலும் ஒடுக்கப்பட்டவர்களிற்கும் பின்தங்கியவர்களிற்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

□ ***தமிழ் இளைஞர் பேரவை ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டம் என்பதில் உறுதியா யிருந்ததா?***





படிப்பகம்

www.padippakam.com

ஆம். அது மேலுக்கு உண்ணாவிரதம்; பேரணிகள் என்று அறப் போராட்டங்களை நடத்திக் கொண்டிருந்தாலும் ஆயுதப் போராட்டம் ஒன்றைத் தொடக்குவதற்கான முயற்சியில் அது ஈடுபட்டிருந்தது. ஆனால் அதற்கான வசதி அதனிடமில்லை. யாழ்ப்பாணத்தில் தங்குவதற்கு இடம் பெறுவதிலிருந்து தபாற் செலவுகள், பயணச் செலவுகள் போன்றவற்றிற்கும் அது தமிழர் கூட்டணியையே நம்பியிருந்தது. தமிழர் கூட்டணியோ இந்தத் துடிப்பான இளைஞர்களை தங்களது பாராளுமன்ற அரசியல் நலன்களுக்காகப் பயன்படுத்த முயன்று கொண்டிருந்தது. புஸ்பராஜா, பத்மநாபா, தங்க மகேந்திரன் போன்ற இளைஞர்கள் கைகளில் துருப்பிடித்த துப்பாக்கியும் ஈழக் கனவுமாகத் திரிந்து கொண்டிருந்தார்கள்.

**□ ஒருசில இளைஞர்களையும் துருப்பிடித்த துப்பாக்கிகளையும் வைத்துக்கொண்டு ஆயுதப் போராட்டத்தின் மூலம் இலங்கை அரசை வெற்றிகொள்ள முடியும் என்ற நம்பிக்கையை உங்களுக்கு எது கொடுத்தது?**

அது அரசியல் சித்தாந்தப் பலமற்ற ஒரு வீரதீர மனநிலையும் பொறுப்பற்ற முட்டாள்தனமும் என்பதை நான் இப்போது ஒப்புக்கொள்வேன். ஆனால் அன்றைய நிலையில் வெகு சுலபமாகத் தனிநாட்டுக் கோரிக்கையின் பின்னால் தமிழர்களை அணிதிரட்டி ஆயுதப் போராட்டத்தின் மூலம் ஈழத்தை வென்றெடுக்கலாம் என்று நாங்கள் நினைத்தோம். 1975ல் நான் ஹட்டன் நகரில் ஒரு கூட்டத்தில் பேசியபோது எப்போது தமிழீழத்தை அடைவீர்கள் என்று என்னிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு நான் இன்னும் அய்ந்து வருடங்களில் நாங்கள் ஈழத்தை வென்று விடுவோம் எனப் பதில் கூறினேன். அது உண்மையென்றும் நினைத்தேன். அந்தக் கூட்டத்தில் என்னிடம் இன்னொரு கேள்வியும் கூட்டணியின் ஆதரவாளர்களால் கேட்கப்பட்டது. தமிழரசுக் கட்சியாலும் பின்பு தமிழர் கூட்டணியாலும் வளர்க்கப்பட்ட, ஆதரிக்கப்பட்ட இளைஞர்கள் கூட்டணியினருக்கு எதிராகவே திரும்புவது என்ன நியாயம் எனக் கேட்டார்கள். “நல்லாசிரியன் எல்லாக்காலமும் தவறிழையான் என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை, இப்போது கூட்டணியினர் பாராளுமன்றப் பதவிகளிற்காகத் தமிழர்களின் உரிமைகளை அடைவு வைக்கத் தயாராகி விட்டார்கள்” என்றேன் நான். இந்த இடத்தில் நான் இன்னொன்றையும் பதிவு செய்ய விரும்புகிறேன். கூட்டணியினர் தமது அப்புக் காத்து மேட்டுக் குடிக் குணங்களை எந்த இடத்திலும் விட்டுக் கொடுத்தார்களில்லை. கூட்டணித் தலைவர்களில் பலர் மேட்டுக்குடிச் செருக்கும் திமிரும் கொண்டவர்கள் என்பதே எனது அனுபவம்.

**□ ஆனால் தமிழ் இளைஞர் பேரவை கூட்டணியின் ஒரு பிரிவுபோல, அடியாட்கள் போல செயற்பட்டதாக ஒரு கருத்துள்ளதே?**

இல்லை. அது தவறான கருத்து. தமிழ் இளைஞர் பேரவை எக்காலத்திலும் கூட்டணிக்குக் கட்டுப் பட்டதாக இருக்கவில்லை. இந்த உண்மையை புஸ்பராஜா தனது நூலிலும் பதிவு செய்துள்ளார். சொல்லப்போனால் மாணவர்களினதும் இளைஞர்களினதும் தன்னெழுச்சியானதும் அமைப்பு ரீதியானதுமான போராட்டங்களின் முன்பு கூட்டணிதான் தனது செல்வாக்கை மக்களிடம் மெதுமெதுவாக இழந்து கொண்டிருந்தது. இளைஞர்களின் நிழல்களில் நின்றுதான் கூட்டணி அதற்குப் பின்பு தனது அரசியலைத் தொடர வேண்டியிருந்தது. நாங்கள் அய்ம்பது இடங்களில் நடத்திய தொடர் உண்ணாநிலைப் போராட்டங்களில் கூட்டணியினர் தங்களை வலியப் புகுத்த வேண்டியிருந்தது.

**□ நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டு அனர்த்தங்களின் போது நீங்கள் அங்கிருந்தீர்களா?**

ஆம். நான் அங்குதானிருந்தேன். மேடையில் நயினார் உரையாற்றிக்கொண்டிருந்தபோது, தமிழகத்திலிருந்து மாநாட்டுக்காக யாழ்ப்பாணம் வந்திருந்த உலகத் தமிழர் இளைஞர் பேரவைத் தலைவர் இரா. ஜனார்த்தனன் மேடையில் தோன்றி மக்களைப் பார்த்துக் கையசைத்தார். அப்போது, பொலிசார் மாநாட்டைக் குழப்பினார்கள். துப்பாக்கிச் சூடுகளும் கண்ணீர்புகை வீச்சுகளும் நடந்தன. மக்கள் கலைந்து ஓடத்தொடங்கினார்கள். துப்பாக்கிச் சூட்டால் மின்சாரக் கம்பிகள் அறுந்து சனங்கள்மீது விழுந்தன. அன்று ஒன்பதுபேர்கள் கொல்லப்பட்டார்கள். ஒரே துப்பாக்கி வெடிச்சத்தமும் ஓலக்குரல்களுமாய் தமிழாராய்ச்சி மாநாடு சீர்குலைந்தது. அப்போது பொன். சிவக்குமாரன் தமிழாராய்ச்சி மாநாட்டுத் தொண்டர்படையில் பணியாற்றிக் கொண்டிருந்தார். இந்த அனர்த்தம் எங்கள் எல்லோரையும் விட சிவக்குமாரனைத்தான் அதிகம் பாதித்திருந்தது. அவருடைய போராட்ட முனைப்புகள் அதிதீவிரம் பெற்றன. ஆறு மாதங்களிற்குள்ளாகவே தோல்வியில் முடிந்த கோப்பாய் வங்கிக் கொள்ளையின் போது தப்பிக்க முடியாமல் எப்போதும் சிரித்த முகத் தோடும் எள்ளளவும் சுயநலமுமில்லாத உள்ளத்தோடும் இயங்கிய சிவக்குமாரன் சயனைட் அருந்தி இறந்து போனார்.

**□ அரசியற் பிரச்சினைகளைத் தனிநபர்களை அழித்தொழிப்பு செய்வதன் மூலம் அணுகும் கொலைக் கலாச்சாரத்தை சிவக்குமாரன் தொடக்க முயன்றாலும் அல்பிரட் துரையப்பாவைக் கொலை செய்ததன் மூலம் பிரபாகரன் தொடக்கி வைத்தார். துரையப்பாவின் கொலையை நீங்கள் எவ்விதமாகப் பார்த்தீர்கள்?**



படிப்பகம்

www.padippakam.com

நாங்கள் அந்தக் கொலைச் செய்தியைக் கேட்டதும் மகிழ்ந்தோம். நான் குலமக்கா வீட்டுக்குச் சென்றபோது எனது சக இயக்கத்தோழி கல்யாணி என்னைக் கட்டிப்பிடித்து மகிழ்ச்சியைத் தெரிவித்தார். துரையப்பா ஒன்றும் இலேசுப்பட்ட ஆளல்ல. தமிழர் கூட்டணியின் ஆதரவாளர்களைத் தேடித் தேடித் தனது நகரபிதா பதவியின் மூலம் அவர் தொல்லைகள் கொடுத்தார். குலமக்காவின் வீட்டு மதிற்சுவர் கூட துரையப்பாவின் உத்தரவின் பேரில் இடித்துத் தள்ளப்பட்டது. ஆனால் இன்று சிந்திக்கும் போது அரசியல் முரண்களைத் துப்பாக்கியால் தீர்க்கும் அந்தக் கலாச்சாரம் இன்று தனது சொந்த இனத்துக்குள்ளேயே துரையப்பாவில் தொடங்கி சபா லிங்கம் வரைக்கும் ஆயிரக் கணக்கானவர்களை அழித்து விட்டதையும் என்னால் உணர முடிகிறது.



- **இந்தப் பதற்றமான கால கட்டத்தில் உங்களின் அரசியற் செயற்பாடுகள் எதுவாயிருந்தன?**

துரையப்பா கொல்லப்படுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னதாகவே தமிழ் இளைஞர் பேரவை பிளவு பட்டுப் போயிற்று. அப்போது மக்கள் மத்தியில் வேகமாகச் செல்வாக்குப் பெற்றுவந்த இளைஞர் பேரவையைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரக் கூட்டணியினர் முயன்றனர். மங்கையற்கரசி அமிர்தலிங்கம் மேடைக்கு மேடை இது மாவை சோனாதிராசாவால் தொடங்கப்பட்ட அமைப்பு என்று பிரச்சாரம் செய்தார். ஆனால் உண்மையில் மாவை சேனாதிராசா தமிழ் இளைஞர் பேரவையில் இருக்கவேயில்லை. இளைஞர் பேரவைக்குள்ளும் கனக மனோகரன், மண்டூர் மகேந்திரன், மதிமுகராஜா, மன்னார் ஜெயராஜா போன்ற கூட்டணியின் ஆதரவாளர்கள் குழப்பங்களைத் தொடங்கினர். இறுதியில் இளைஞர் பேரவை பிளவுற்று தங்கமகேந்திரன், சந்திரமோகன், புஸ்பராஜா, பிரான்ஸிஸ், வரதராஜப்பெருமாள், முத்துக்குமாரசாமி போன்றவர்கள் தமிழீழ விடுதலை இயக்கத்தைத் (TELO) தொடங்கினார்கள். துரையப்பா வின் கொலையைத் தொடர்ந்து புஸ்பராஜா உட்பட பெரும்பாலான தமிழீழ விடுதலை இயக்க உறுப்பினர்கள் சிறையிலடைக்கப்பட்டார்கள். புலோலி வங்கிக் கொள்ளையைத் தொடர்ந்து நானும் கைதுசெய்யப்பட்டேன்.

- **புலோலி வங்கிக் கொள்ளையில் உங்கள் பங்கு என்ன? இயக்கம் வங்கிக் கொள்ளைகளில் ஈடுபடுவதை நீங்கள் ஏற்றுக்கொண்டிருந்தீர்களா?**

இயக்கத்தை வளர்ப்பதற்கான நிதியாதாரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக இவ்வாறான கொள்ளைகள் அவசியம் என்றுதான் நான் கருதினேன். தங்க மகேந்திரன், சந்திரமோகன், வே.பாலகுமாரன் (முன்னைய ஈரோஸ் தலைவர்), கோவை நந்தன் போன்றவர்களின் திட்டமிடலிற்தான் புலோலி வங்கி கொள்ளையிடப்பட்டது. கொள்ளைப் பொருட்களை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கு இரகசியமாக கடத்திச் செல்வதற்கு அவர்களிற்கு நானும் கல்யாணியும் உதவி செய்தோம். வங்கிக் கொள்ளையைத் துப்புத் துலக்கிக்கொண்டிருந்த பொலிஸாருக்கு பிரதீபன் என்றொருவர் துப்புக்களை வழங்கிக் கொண்டிருந்திருக்கிறார். பிரதீபன் அப்போது இயக்க ஆதரவாளராக நடித்து தங்கமகேந்திரனின் நட்பைப் பெற்றிருந்தார். இயக்கத்தின் முக்கிய தலைவர்கள் துரையப்பா கொலையைத் தொடர்ந்து சிறைப்பட்டிருந்த நிலையில் தங்கமகேந்திரனும் சந்திரமோகனும்தான் இயக்கத்தை தலைமைதாங்கி வழிநடத்திக் கொண்டிருந்தார்கள்.

அந்த உளவாளி பிரதீபன் தன்னை தங்க மகேந்திரனின் நண்பர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டு என்னிடம் வந்தார். தங்கமகேந்திரனும் அவர் தனது நண்பரென்றும் இயக்க ஆதரவாள ரென்றும் என்னிடம் உறுதிப்படுத்தினார். முடிவில் அந்த உளவாளி கொடுத்த தகவல்களின் அடிப் படையில் பொலிஸார் என்னைத்தேடி வீட்டுக்கு வந்தபோது நான் வீட்டின் பின்புறத்தால் ஓடித் தப்பித்துக்கொண்டேன். பொலிஸார் எனது பெற்றோர்களையும் எனது தம்பி, தங்கைகளையும் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள். எனது பெற்றோர்களும் சகோதரனும் சகோதரிகளும் பொலிஸ்நிலையத்தில் வதைக்கப்பட்டனர். எனது தம்பி வரதன் அனுராதபுரம் சிறைக்கு அனுப்பப் பட்டார். தங்கை ஜீவரட்ணராணி வெலிகடைச் சிறைக்கு அனுப்பப்பட்டார்.

அடுத்து என்ன செய்வது என்று ஆலோசனை கேட்க நான் தங்கமகேந்திரன், சந்திரமோகன் போன்ற தலைமைத் தோழர்களைத் தேடிப் போனேன்.





படிப்பகம்

www.padippakam.com

அவர்கள் குருநகரில் ஒரு வீட்டில் பதுங்கியிருந்தார்கள். பொலிஸார் என்னை வேறுகாரணங்களிற்காகத் தேடியிருக்கலாம் எனவும் வங்கிக் கொள்ளை குறித்துப் பொலிஸாருக்குத் துப்புத் தெரிந்திருக்க வாய்ப்பில்லையெனவும் கூறி அந்த அதிபுத்திசாலித் தோழர்கள் என்னைப் பொலிஸாரிடம் சரணடையுமாறு சொன்னார்கள். நான் ஒரு வழக்கறிஞர் மூலம் யாழ் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தேன். நான் பொலிஸ் நிலையத்திற்குள் கால் வைத்ததுமே பொலிஸார் கேட்ட கேள்விகளிலிருந்து புலோலி வங்கிக்கொள்ளை குறித்து எல்லாத் தகவல்களையும் பொலிஸார் ஏற்கனவே திரட்டி வைத்திருக்கிறார்கள் எனப் புரிந்துகொண்டேன். நான் எனது வழக்கறிஞரிடம் இரகசியமாகச் சொன்னேன்: "தங்கமகேந்திரனிடம் போய்ச் சொல்லுங்கள், அவர்கள் என்னைத் தூக்கு மேடைக்கு அனுப்பியிருக்கிறார்கள்".

விசாரணை என்ற பெயரில் நான் உயிரோடு தூக்குக்கு அனுப்பப்பட்டேன். நான் பொதுவாக பாவாடை - சட்டை அணிவதுதான் வழக்கம். பொலிஸ் நிலையம் போவதற்காகத் தெரிந்த ஒருபெண்ணிடம் சேலை இரவல் வாங்கி உடுத்திப் போயிருந்தேன். விசாரணையின் ஆரம்பமே எனது சேலையை உரிந்தெடுத்ததில்தான் தொடங்கியது. மிருகத்தனமாக நான் தாக்கப்பட்டேன். தொடர்ந்து இருபத்துநான்கு மணிநேரம் வதைக்கப்பட்டேன். எனது அலறல் பொலிஸ் குவாட்டர்ஸ்வரை கேட்டதாகப் பிறகு சொன்னார்கள். கல்யாணியும் கைதுசெய்யப்பட்டுக் கொண்டுவரப்பட்டார். இரண்டு நாட்களில் தங்கமகேந்திரன், சந்திரமோகன் போன்றவர்களும் கைதுசெய்யப்பட்டார்கள்.

என்னை அடித்த தடிகள் என்கண் முன்னேயே தெறித்து விழுந்தன. நான் அரைநிர்வாணமாக அரைமயக்க நிலையில் கிடந்தேன். அடித்த அடியில் எனக்குத் உரிய நாளுக்கு முன்னமே மாதவிடாய் வந்துவிட்டது. வழிந்துகொண்டிருந்த உதிரத்தைத் தடுப்பதற்கு எந்த வழியுமில்லை. ஒரு பொலிஸ்காரர் அழுக்கால் தோய்ந்திருந்த ஒரு பழைய சாரத்தை என்னிடம் கொண்டுவந்து தந்தார். அதில் துண்டு கிழித்து நான் கட்டிக்கொண்டேன். கல்யாணி என்னிடம் அந்தத் துணியைப் பத்திரமாக வைத்திருக்குமாறும் தனக்கு மாதவிலக்கு வரும்போது அது தேவைப்படும் என்றும் கேட்டுக்கொண்டார். அந்தத் துணியைத் துவைத்துத்தான் பின்பு கல்யாணி உபயோகிக்க வேண்டியிருந்தது.

குறிப்பாக எங்கள் இயக்கத்தோடு தொடர்புடைய பெண்கள் குறித்தே என்னிடம் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். வங்கிக்கொள்ளை குறித்த தகவல்கள் எதுவும் அவர்களிற்குத் தேவையாயிருக்கவில்லை. ஏனென்றால் அவற்றை எனது தோழர்கள் முன்னமே படம் போட்டுப் பொலிஸாருக்கு விபரித்திருந்தார்கள்.

**□ உங்கள்மீதான விசாரணைக்குப் பொறுப்பாயிருந்தவர் சித்திரவதைகளிற்கு பேர்போன இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை என்று அப்போது செய்திகள் வந்தன. அவர்தானா உங்களை விசாரணை செய்தார்?**

இல்லை. என்னை இன்ஸ்பெக்டர் பத்மநாதன் தலைமையிலான குழுவே விசாரணை செய்தது. அந்த பஸ்தியாம்பிள்ளையும் இந்தப் பத்மநாதனும் பின்னர் புலிகளால் கொலைசெய்யப்பட்டனர். என்னை சித்தரவதை செய்ததில் சண்முகநாதன், கருணாநிதி, ஜெயக்குமார் போன்ற அதிகாரிகளுக்கும் முக்கிய பங்கிருந்தது. இவர்களும் அடுத்தடுத்த வருடங்களில் கொல்லப்பட்டனர். இதில் இன்னொரு கொடுமை என்னவென்றால் விசாரணை அதிகாரிகள் எல்லோரும் வெள்ளாளர்களாகவேயிருந்தனர். அவர்களிடம் சிக்கிய நானும் கல்யாணியும் தலித்துகளாக யிருந்தோம். நாங்கள் தாக்கப்பட்ட ஒவ்வொரு முறையும் பள்ளி, நளத்தி என்று எங்கள் சாதிப் பெயர்களால் இழிவு செய்யப்பட்டே தாக்கப்பட்டோம். பத்மநாதனைப் பொறுத்தவரை இந்த வழக்கை முடித்துவைத்து பதவி உயர்வு பெற வேண்டும் என்ற அதீத துடிப்பு அவரிடம் காணப்பட்டது. ஆனாலும் நானும் கல்யாணியும் பெண்கள் என்ற வகையில் அவர் எங்களை ஓரளவு கண்ணியமாகவே நடத்தினார். மற்றைய பொலிஸாரிடமிருந்து பாலியல்ரீதியான தொந்தரவுகள் வந்தபோது அவரே எங்களை அவற்றிலிருந்து காப்பாற்றினார். ஆனால் சித்திரவதைகளில் அவர் குறை வைக்கவில்லை. என்னைக் குப்புறப்படுக்கப் போட்டுவிட்டு அவர்கள்; பொல்லுகளால் என்னைத் தாக்கியபோது நான் "அடியுங்கடா என்னை! கொல்லுங்கடா என்னை" என்று அலறினேன். அந்தச் சத்தம் முழு யாழ்ப்பாணத்திற்கும் கேட்டிருக்கும். அதைப் பார்த்துக்கொண்டிருந்த செல்வரத்தினம் என்ற பொலிஸ்காரர் கண்ணீர்விட்டு அழுததை என்னால் மறக்க முடியாது. செல்வரத்தினம் இப்போது பிரான்ஸில்தான் வாழ்கிறார். எனது போராட்ட அனுபவங்களை நூலாக எழுதி வெளியிடும் முயற்சியில் நான் இப்போது ஈடுபட்டிருக்கிறேன். எனது நூலை செல்வரத்தினத்தைக் கொண்டுதான் நான் வெளியிடுவேன்.

**□ எப்போது வெலிகடைச் சிறைக்கு அனுப்பப்பட்டீர்கள்?**

யாழ்ப்பாணப் பொலிஸ்நிலையத்திலிருந்து அழைத்துச்செல்லப்பட்டு முதலில் யாழ் கோட்டைக்குள்ளிருந்த கிங் ஹவுஸில் அடைத்து வைக்கப்பட்டோம். இரண்டு வாரங்களில் அங்கிருந்து வெலிகடைச் சிறைக்கு அனுப்பிவைக்கப்பட்டோம். வெலிகடைச் சிறையில்தான் நான் ஜே.வி.பி கிளர்ச்சியில் ஈடுபட்டு தெனியாயச் சண்டையில் தலைமை வகித்துப் போராடிய தோழிகளான புத்த கோறளையையும் சந்திரா பெரேராவையும் சந்தித்தேன்.



படிப்பகம்

www.padippakam.com



☐ **அவர்களுக்கும் உங்களுக்குமான உறவுகள் எப்படியிருந்தன?**

அவர்கள் அற்புதமான தோழிகள். அவர்கள் எங்களிடம் தமிழ் படித்தார்கள். நான் அவர்களிடம் சிங்களம் படித்தேன். நாங்கள் அரசியல் விவாதங் களையும் உரையாடல்களையும் மனம்விட்டுச் செய்தோம். அந்தச் சிங்களத் தோழிகள் என்னையும் கல்யாணியையும் சிறைக்குள் தாய் மாதிரிப் பாதுகாத்தார்கள். அப்போது சிறைக் கண்காணிப் பளாராயிருந்த சைமன் சில்வாவும் அருமையான மனிதர். அவரின் நற்பண்புகள் குறித்து அந்தச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த காசி. ஆனந்தன் ஒரு கவிதையே எழுதியிருக்கிறார். எனவே சிறை வாழ்க்கையில் பெரிய துன்பங்கள் எதையும் நான் எதிர்கொள்ளவில்லை. நான் சிறையிலிருந்த காலங்களில் நிறையவே வாசித்தேன். சிறை நூலகத்திலிருந்து புத்தகங்கள் கிடைக்கும். அந்த நூல்கள் ஆண்கள் சிறையிலிருந்த எங்களது இயக்கத் தோழர்களுடன் நாங்கள் இரகசியமாகத் தகவல் களைப் பரிமாறவும் எங்களுக்கு உதவின. நாங்கள் நூலகத்திற்குத் திருப்பியனுப்பும் புத்தகங்களை அவர்களும் அவர்கள் அனுப்பும் புத்தகங்களை நாங்களும் பெற்றுக்கொள்வோம். புத்தகங்களின் பக்கங்களில் மெல்லிய கோடுகளிட்டும் ஓரங்களில் எழுதியும் சங்கேதங்களாய் நாங்கள் செய்திகளைப் பரிமாறிக்கொண்டோம்.

☐ **புகழ்பெற்ற வழக்கறிஞர்களால் நிரம்பியிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி உங்களின் விடுதலைக்காக ஏதாவது முயற்சி எடுத்ததா?**

அப்போது நாடாளுமன்ற உறுப்பினராயிருந்த என். நவரத்தினம் நாடாளுமன்றத்தில் நான் கைது செய்யப்பட்டது குறித்த பிரச்சினையை எழுப்பி யிருந்தார். அப்போது பிரதமாராயிருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கவிடம் "நீங்களும் ஒரு பெண். அந்தத் தாயுள்ளத்துடன் நீங்கள் புஸ்பராணியை விடுதலை செய்ய வேண்டும்" என அவர் கேட்டபோது சிறிமாவோ "நான் பெண் என்பதிலும்விட நான் இந்த நாட்டின் பிரதமர் என்பதே எனக்கு முக்கியமானது" என்றார். ஆறுமாதச் சிறைவாசத்திற்குப் பின்பு நான் விடுதலையானேன். வழக்குத் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. 1980ல் தீர்ப்பு வழங்கப்பட்டபோது தங்கமகேந்திரன், ஜெயக்கொடி, கோவை நந்தன், நல்லையா ஆகியோருக்குச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. நான் வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டேன். வழக்கு நடந்துகொண்டிருந்த போதே நந்தனும் நல்லையாவும் இலங்கையிலிருந்து தப்பிச் சென்றுவிட்டார்கள். தண்டனையை அனுபவித்துக்கொண்டிருந்த தங்கமகேந்திரனும் ஜெயக்கொடியும் மட்டக்களப்புச் சிறையுடைப்பில் தப்பிச் சென்றார்கள்.



**ஈழவிடுதலைக்காக உயிரையும் தருவார்கள், பொலிஸில் அகப்படும் நிலைவரின் சயனைட் தின்று வீரச்சாவடைவார்கள் என நான் நம்பியிருந்த தோழர்கள் என் கண்முன்னாலேயே பொலிசாரின் முன் மண்டியிட்டு அழுததையும் என்னைக் காட்டிக் கொடுத்ததையும் என்னால் சீரணிக்க முடியவில்லை. தம்மைச் சுற்றி வீரதீரப் படிமங்களைக் கட்டியெழுப்பி வைத்திருந்தவர்கள் அந்தப் படிமங்கள் சிதறிவிழ எதிராளியிடம் மண்டியிட்டார்கள். ஈழப் போராட்ட வரலாற்றில் இந்த அவலம் திரும்பத் திரும்ப நிகழ்ந்துகொண்டேயிருக்கிறது.**

☐ **அதற்குப் பின்னான உங்களது அரசியல் நடவடிக்கைகள் எவ்வாறிருந்தன?**

சிறையிலிருந்து வெளியில் வரும்போதே நான் இயக்கத்தின்மீது வெறுப்புற்றுத்தான் வெளியே வந்தேன். ஈழவிடுதலைக்காக உயிரையும் தருவார்கள், பொலிஸில் அகப்படும் நிலைவரின் சயனைட் தின்று வீரச்சாவடைவார்கள் என நான் நம்பியிருந்த தோழர்கள் என் கண்முன்னாலேயே பொலிசாரின் முன் மண்டியிட்டு அழுததையும் என்னைக் காட்டிக் கொடுத்ததையும் என்னால் சீரணிக்க முடியவில்லை. தம்மைச் சுற்றி வீரதீரப் படிமங்களைக் கட்டி யெழுப்பி வைத்திருந்தவர்கள் அந்தப் படிமங்கள்



படிப்பகம்

www.padippakam.com

சிதறிவிழ எதிராளியிடம் மண்டியிட்டார்கள். ஈழப் போராட்ட வரலாற்றில் இந்த அவலம் திரும்பத் திரும்ப நிகழ்ந்துகொண்டேயிருக்கிறது. நமது விடுதலை இயக்கங்களின் ஆரம்பநிலைகளிலேயே இளைஞர்களிடையே அதிகார விருப்பும் பதவிப் போட்டிகளும் தோன்றிவிட்டதையும் நான் கவனித்து வெறுப்புற்றிருந்தேன். இயக்கத்தில் என்னுடன் கல்யாணி, டொறத்தி, பத்மினி போன்றவர்கள் தீவிரமாக இயங்கினாலும் பெண்கள் என்றரீதியல் நாங்கள் இயக்கத்திற்குள் இளைஞர்களால் அலட்சியமாகவே நடத்தப்பட்டதையும் நாங்கள் உணர்ந்திருந்தோம். சிறையிலிருந்து வெளிவந்த என்னைச் சமூகமும் கொடூரமாகத்தான் எதிர் கொண்டது. பொலிஸாரால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டவள் என நான் ஒதுக்கப்படலானேன். அப்போது இயக்கம், விடுதலைப் போராட்டம் பற்றியெல்லாம் பொதுப்புத்தி மட்டத்தில் எந்த அறிவுமிருக்கவில்லை. எனக்கு கொள்ளைக்காரி என்ற முத்திரை குத்தப்பட்டது. அப்போது இருபத்தாறு வயதேயான இளம்பெண்ணாயிருந்த நான் மனதால் உடைந்துபோனேன். விடுதலை அரசியலில் எனக்கு ஈடுபாடு இருந்தபோதிலும் அந்த ஈடுபாடு இன்று வரை தொடரும்போதும் நான் இயக்கத்துடன் சேர்ந்து வேலை செய்ய விரும்பவில்லை. விடுதலைப் புலிகள் என்னை இயக்க அரசியலுக்கு அழைத்தபோதும் தோழர் பத்மநாபா போன்றவர்கள் என்னை இயக்க அரசியலுக்குத் தொடர்ச்சியாக அழைத்துக் கொண்டிருந்தபோதும் நான் இயக்க அரசியலில் ஈடுபட மறுத்துவிட்டேன்.

☐ **எப்போது பிரான்ஸுக்கு வந்தீர்கள்?**

1986ல் வந்தேன். இடையில் 1981ல் எனக்குக் கல்யாணம் நடந்தது. நான் மணம் செய்வதில் பல சிக்கல்கள் இருந்தன. சிறையில் இருந்தவள், கொள்ளைக்காரி என்று எனக்குக் குத்தப்பட்ட முத்திரையால் எனது முப்பத்தொரு வயது வரையிலும் எனக்குத் திருமணம் அமையவில்லை. கடைசியில் புஸ்பராஜாவின் நண்பர் ஒருவருடன் எனக்குத் திருமணம் ஏற்பாடு செய்யப்பட்டது. எனக்குத் திருமணத்தில் எந்த ஆர்வமும் இல்லா திருந்தபோதும் இந்தச் சமூகத்தில் திருமணமாகாத ஒரு பெண்ணாய் நான் எதிர்கொண்ட பிரச்சினை களாலும் என் பெற்றோரின் விருப்பத்திற்காவும் நான் திருமணத்துக்குச் சம்மதித்தேன். அந்தச் சம்மதம் என் வாழ்க்கையைத் துன்பத்திற்குள் தள்ளியது. என் திருமண வாழ்வு மகிழ்ச்சியாய் அமையவில்லை. பிரான்ஸ் வந்ததன் பின்பாக நான் விவாகரத்துச் செய்துகொண்டேன். எனக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களோடு வாழ்ந்துவருகிறேன். பிரான்ஸுக்கு வந்ததன் பின்னாகப் பல்வேறு இலக்கிய நிகழ்ச்சிகளிலும் பெண்கள் சந்திப்பு களிலும் தொடர்ச்சியாக் கலந்து வருகிறேன். இங்கேயும் பல்வேறு தமிழ் அரசியல் இயக்கங்கள் இயங்கிவந்த போதிலும் எவர் மீதும் எனக்கு நம்பிக்கை கிடையாது. அதனால் இயக்க வேலை களில் நான் என்னை ஈடுபடுத்தவில்லை. தனிப்பட்ட பல தோழர்கள் மீது எனக்கு நம்பிக்கையும் மரியாதையும் இருந்தபோதும் அவர்கள் சார்ந்த இயக்கங்களின் வேலைத்திட்டங்களில் எனக்கு உடன்பாடு கிடையாது. நான் ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தைச் சேராதவளாயிருந்த போதிலும் மறைந்த தோழர் பத்மாநாபாவின் மீது எனக்கு அளப்பெரிய தோழமை உணர்வும் மரியாதையும் உள்ளது என்பதை இந்த நேர்காணலில் நான் பதிவு செய்ய விரும்பு கிறேன்.

☐ **நீங்கள் ஒரு தீவிரமான இலக்கிய வாசகி என்பது எனக்குத் தெரியும், அது குறித்து?**

மிகச் சிறிய வயதிலேயே நான் வாசிப்புக்கு அடிமையாகிவிட்டேன். இன்றுவரை ஏதாவது ஒன்றைப் படிக்காமல் நான் உறங்கச் செல்வது கிடையாது. எனது சிறுவயதில்; "படிக்கிற பிள்ளை கதைப் புத்தகம் வாசிக்கக் கூடாது" என வீட்டில் கண்டிப்பு இருந்தது. நான் பாடப் புத்தகங்களுக்குள் மறைத்து வைத்துக் கதைப் புத்தகம் படிப்பேன். துப்பறியும் கதைகள், சாண்டில்யன், அகிலன் என வாசிப்புத் தொடங்கியது. நா. பார்த்தசாரதியின் குறிஞ்சிமலரை வாசித்து அரவிந்தன் இறந்தபோது இரவிரவாகக் தனிமையிலிருந்து கண்ணீர் வடித்திருக்கிறேன். ஒரு கட்டத்தில் ஜெயகாந்தனால் முற்றாக ஆட்கொள்ளப்பட்டிருந்தேன். அந்தக் காலத்தில்தான் எழுதவும் தொடங்கினேன். இலங்கை வானொலியிலும் லண்டன் முரசு என்ற பத்திரிகைக்காவும் நிறைய எழுதினேன். அப்பொழுது சதானந்தனை ஆசிரியராகக்கொண்டு, லண்டனி லிருந்து அந்தப் பத்திரிகை வெளியிடப்பட்டது. நான் இலங்கையிலிருந்து அந்தப் பத்திரிகைக்கு சம்பளமில்லாத நிருபராக வேலைபார்த்தேன். அரசாங்கத்தால் தேடப்பட்டு வந்த கி.பி. அரவிந்தன் எங்களுடைய வீட்டில் ஏறக்குறைய ஒரு வருட மளவில் தலைமறைவாக ஒளிந்திருந்தார். நாங்கள் கவிதைகள் குறித்து விவாதிப்போம், பேசுவோம். நானும் அவரும் இணைந்து புஸ்பமனோ என்ற பெயரில் கவிதைகள் எழுதியிருக்கிறோம். அரவிந்தனுக்கு மனோகரன் என்ற பெயருமுண்டு. என் திருமண வாழ்க்கையும் அதனால் எற்பட்ட மனச் சிதைவுகளும் என்னை எழுதுவதைக் கைவிட வைத்தன. ஆனால் இன்றுவரை தொடர்ந்து வாசித்துக் கொண்டிருக்கிறேன். வார இதழ்களிலிருந்து நவீன இலக்கியம்வரை கையில் கிடைப்பதையெல்லாம் வாசிக்கிறேன். பிரபஞ்சனும் சுந்தர ராமசாமியும் ஜெயமோகனும் என்னை மிகவும் ஈர்த்த இலக்கிய ஆளுமைகளாகவிருக்கிறார்கள்.

☐ **புஸ்பராஜாவின் ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம் நூலில் பல்வேறு சர்ச்சைகளையும்**



படிப்பகம்

www.padippakam.com

**விவாதங்களையும் மறுப்புகளையும் உருவாக்கியிருந்தது. அந்த நூல் குறித்து உங்களின் பார்வை என்ன?**

புஸ்பராஜா இலங்கையிலிருந்தபோதும் சரி, பிரான்ஸிலிருந்தபோதும் சரி எப்போதும் என்னோடு தொடர்ச்சியான அரசியல் உரையாடல்களை நடத்திக்கொண்டேயிருந்தார். அவரின் தனிப்பட்ட வாழ்வானாலும் சரி, போராட்ட வாழ்வானாலும் சரி நான் எல்லாவற்றையும் அறிந்துவைத்திருக்கிறேன் என்றே நம்புகிறேன். எனக்குத் தெரிந்தவரை மிக நேர்மையாக புஸ்பராஜா தனது சாட்சியத்தைப் பதிவு செய்திருக்கிறார். புஸ்பராஜா ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் மகாணசபை ஆட்சிக்காலத்திலும் அதற்குப் பின்பும் அந்த இயக்கத்திற்காக வேலை செய்தது எனக்கு பிடிக்கவில்லையென்றபோதும் அந்த அனுபவங்களையும் பாரபட்சமில்லாமல் தனது நூலில் அவர் பதிவு செய்திருக்கிறார் என்றே கருதுகிறேன். அந்த நூலில் புஸ்பராஜா அளவுக்கு அதிகமாகத் தன்னை முன்னிலைப்படுத்துகிறார் என்றொரு விமர்சனத்தைக் கூட நீங்கள் சத்தியக்கடதாசி இணையத்தளத்தில் பிரசுரித்திருந்தீர்கள். ஆனால் உண்மையிலேயே புஸ்பராஜா எல்லா விசயங்களிலும் முன்னுக்குப் போகிற ஆளாகவும் விறைப்பான ஆளாகவுமே யிருந்தார். அதுதான் நூலிலும் பதிவாகியிருக்கிறது. சோதிலிங்கம், வசீகரன், பேபி சுப்பிரமணியம் போன்றவர்களின் போராட்டத்திற்கான பங்களிப்புகள் நூலில் போதியளவு முக்கியத்துவம் கொடுத்துப் பதிவாகவில்லை என்றொரு குறை எனக்கிருக்கிறது. என்நூலில் அவர்கள் குறித்து விரிவாக எழுதுவேன். குறிப்பாக பேபி சுப்பிரமணியம் தினந்தோறும் எங்கள் மயிலிட்டி வீட்டுக்கு வருவார். மிகுந்த அமைதியான குணமும் அன்புள்ளமும் கொண்ட அவர் எப்படி இவ்வளவு காலமாகப் புலிகள் இயக்கத்திலிருக்கிறார் என்பதுதான் எனக்கு விளங்கவேயில்லை.

- **வெளிநாட்டு வாழ்வை எப்படி உணர்கிறீகள்? குறிப்பாக ஆணாதிக்கம், சாதியம் போன்ற அடிமைத்தளைகளிலிருந்து ஓரளவாவது விடுதலையை இந்தச் சூழல் உங்களிற்கு ஏற்படுத்தித் தந்திருக்கிறது என நினைக் கிறீகளா?**

நான் எப்போது அடிமையாயிருந்தேன் இப்போது விடுதலை பெறுவதற்கு! சமூகத் தளைகளை எதிர்கொண்டபோது எந்த இடத்திலும் நான் பணிந்து போனதில்லை. உறுதியாக எதிர்த்தே நின்றிருக்கிறேன். எதிர்ப்பு என்பதே என்னைப் பொறுத்தளவில் விடுதலைதான். புகலிடத்திலும் நான் சார்ந்த தலித் சமூகம் ஆதிக்கசாதித் தமிழர்களால் புறக்கணிக்கப்படுகிறது. எனது மகள் இரவு பன்னிரெண்டு மணிக்கும் தனியாக வீடுவரும் போது நமது தமிழர்களால் கறுவல்கள் எனப் பழிக்கப்படும் ஆப்பிரிக்கர்களோ அடையார் எனப் பழிக்கப்படும் அரபுக்களோ என் மகளைத் தொந்தரவு செய்வ





படிப்பகம்

www.padippakam.com

**முதன்மையான காரணமும் கடைசிக் காரணமும் விடுதலை இயக்கங்களின் அராஜகங்கள்தான். எதிரியைக் கொல்கிறோம் எனப் புறப்பட்டவர்கள் எமது சமூகத்தின் போராளிகளையும் அறிவுஜீவிகளையும் ஒழித்துக்கட்டினார்கள்.**



தில்லை. ஆனால் என் மகளால் தனியாக லா சப்பல் (பாரிஸில் ஈழத் தமிழர்களின் கடைத்தெரு) போக முடியாமலிருக்கிறது. அவளை ஒரு கும்பல் தமிழ் இளைஞர்கள் சுற்றிவளைத்து "எடியே நீ தமிழாடி? நில்லடி!" எனச் சேட்டை செய்கிறார்கள். மோசமான கெட்டவார்த்தைகளைக் கொட்டுகிறார்கள். தமிழர்களின் ஒற்றுமை, தமிழர்களின் பண்பாடு என்றெல்லாம் எழுபதுகளில் மேடைமேடையாய் நான் தொண்டைத்தண்ணி வற்றக் கத்தியதை நினைத்தால் இப்போது சிரிப்பாயிருக்கிறது. சிரிப்புக்குப் பின்னால் விரக்தியிருக்கிறது.

□ **தமிழீழப் போராட்டம் தோல்வியைத் தழுவியதற்கு முதன்மையான காரணம் எதுவென நினைக்கறீர்கள்?**

முதன்மையான காரணமும் கடைசிக் காரணமும் விடுதலை இயக்கங்களின் அராஜகங்கள்தான். எதிரியைக் கொல்கிறோம் எனப் புறப்பட்டவர்கள் எமது சமூகத்தின் போராளிகளையும் அறிவுஜீவிகளையும் ஒழித்துக்கட்டினார்கள். முஸ்லீம் மக்களை விரட்டியது, அமிர்தலிங்கம், நீலன் திருச்செல்வம் போன்ற தலைவர்களைக் கொன்றது, பத்மநாபா போன்ற நூற்றுக்கணக்கான போராளிகளைக் கொன்றது என எத்தனை அராஜகங்கள். இலங்கையில் மட்டுமல்லாமல் இந்தப் புகலிடத் தேசங்களிலும் இன்று ஒவ்வொரு தமிழனும் வாயைத் திறக்கவே பயப்படுகிறான். அங்கே ஆரம்பிக்கிறது தமிழீழப் போராட்டத்தின் தோல்வி.

▣

## உங்கள் கவனத்திற்கு!

உங்கள் கருத்துக்களை, படைப்புகளை, விமர்சனங்களை, ஆலோசனைகளை கணனியில் தட்டச்சு செய்து எமது மின்னஞ்சல் முகவரிக்கு eathuvarai@gmail.com அனுப்பிவைத்தால் இதழ் தயாரிப்புக்கு உதவியாக இருக்கும் என்பதை கவனத்திற்கொள்ளவும்.

எதுவரை சஞ்சிகையை உங்கள் நண்பர், நண்பிகளுக்கும் அறிமுகப்படுத்தவும்.


நூல் மதிப்புரைக்காக நூல்களை அனுப்பிவைப்பவர் இரு பிரதிகளை அனுப்பிவைக்கவும்.

நன்றி
- ஆசிரியர்

□ கவிதை

வசீம் அக்ரம்

# ஆக்கிரமிப்பின் கால் தடம்



குரூர இருள்
அடை மழை
இடி மின்னல் புயல்
இன்னு வார்த்தைகளால்
சொல்லயியலாத
ஓர் அசாதாரண சூழலில்
எனது தங்குமிடத்துக்காக
வீறு நடைபோடுகிறேன்
வழியில் முட்கம்பிகளால்
பின்னப்பட்ட வேலிகள்
அதனருகில்
பயங்கரவாதத்தின் அடையாளங்களுடன்
இருக்கைகளும் இருப்பிடங்களும்
சில மனிதர்களும்
எனது வாசலின்
எல்லைகள் மூடப்பட்டிருந்தன
எனது மண் தெருக்களில்
எனது கால் தடயங்கள்
புணரப்பட்டிருந்தன
வீட்டின் வேர்கள்
பற்றியிருந்த மண்ணில்
புனித பூமிக்கான சிலை
புதைந்திருப்பதாக
எனது மனைவியும் பிள்ளைகளும்
ஓலமிட்டனர்

ஒ



படிப்பகம்

www.padippakam.com

□ கவிதை

றஸ்மி

# வண்ணத்துப் பூச்சியாய் உறைந்த வாழ்வு



1.
வானிலை பனியை எதிர்வுகூறிய நாளொன்றில்
ஜன்னலின் வெளியில் பனிக்கக்
காத்திருந்தேன்.

செம்பூச்சாய் இதழ்களும்
கறுப்பாய் மிகத் திட்டவட்டமாய் இமைப்
புருவங்களும் கொண்ட பெண்களின்
இடையைக் குளிர் தாக்குவதேயில்லை-
இறுக்கிய ஆடைகளால் பிதுக்கி
வெளியேற்றப்பட்ட மார்போ
தட்ப உணர்திறனற்றது.
முள்ளந்தண்டு முடிகின்ற இடத்தில்
மொய்த்த வண்ணத்துப் பூச்சிகள்
நடைக்கு நடை வெளியாகிப்
பறக்க முயல்கின்ற அவர்களை
விழிகளால் கடந்து
போக விடுகிறேன் நான்.

மது புலம்பியபடி உலகத்தை
ஆட்டி
அசைத்துச் செல்கின்ற ஒருவன்
நிழல் வீழா இந்நாளில்
யாரோடு புலம்புகின்றான்- அவனும்
போனான் கடந்து.

அன்று அதுவரையில் பனி
பெய்யவேயில்லை.
பெய்தபனி தங்காது கரைகின்ற சோகம்போல,
வேட்டைக்குச் சென்றவன்
வெறுங்கையோடு
படுக்கைக்குத் திரும்புகிறேன்.

பனிபெய்யும் பொழுதுகள்
பால்யத்தை மீட்டுத் தருகின்றன.
இரகசியமாய் மிக இரகசியமாய் ஒரு
குழந்தையாய்க் கிளர்கின்றேன் நான்-
வெற்றுக்கையை வீசியபடி
போர்வைக்குள் திரும்பியாயிற்று.

2.
ஏதேனின் தோட்டத்தில் மலர்கள் உதிர்ந்தன
படர்ந்த வெண்மையில்
குழம்பித் ததும்பிற்று வெளி

இரவில் இறங்கிற்று பனி-
இரவின் நிறத்தைப் பனியிடம் இழந்திருக்க
நான் கண்டபோது
ஒரு பூமி விரிந்திருந்தது முன்னே உனக்குக்
காட்டவென.

உனக்கெனக் காட்ட
பாடப்புத்தகங்களில் வருகின்ற பருவங்கள்
நான்கும் இருந்தது என்னிடம்.
இது கூதிர்

3.
பனியின் படிவின் சீர்மையைத் தயங்கித்
தரித்து ஒருகணம்
நெரியுண்டு பாத
வடிவில் இறுகும் ஈர வெண் பொழிவினூடே
நடக்கிறேன்.

பனியின் சுமைகளைக் காவியாயிற்று
வேலைக்காய் வெளிக்கிட்டு வெளியேறுகின்றேன்.
இதுதான் நிஜமெனத் துயர் அறைகின்ற முகத்தில்
உடம்பு வலிகளைத் திரும்ப உணர்கின்றேன்...
காலணிகள் ஊடாய் விரல்களைப் பிராண்டித்
தொற்றுகின்றது குளிர்.

இந்தப் பெண்களின் பின்புறமாய்
பச்சைகுத்தப்பட்ட வண்ணத்தியாய்
இருந்த இடத்தில்
உறைந்திற்று வாழ்வு

பாடப்புத்தகங்களில் நமக்குச் சொல்லப்பட்டிராத
உனக்குக் காட்ட முடியாத வேறும் ஒரு
உலகமுமிருந்தது.

*09.02.09 - 17:00 மணி*



படிப்பகம்

www.padippakam.com

□ பத்தி

# கதியிழந்த மக்கள்

## அல்லது கடவுளர்களிடமிருந்து நம்மைக் காப்பாற்றிக்கொள்ளுதல்

**இளமொட்டைச் சிறுபுழுதி**





'எதுவரை' என்ற கேள்வியைப் போலவே, 'எப்படித் தொடங்குவது' என்பதும் யோசித்தால் மிக ஆயாசப்படுத்துகிற கேள்விதான். சமூகத்தை நிமிர்த்துவதற்கு வேண்டிய தொடக்கங்களை விடுங்கள். எழுதுவதைத் தொடங்குவதுகூட இன்னும் பெரும் சவாலாகவே இருக்கிறது. நெடுநேரம் வெற்றுத் தாளையே பார்த்துக்கொண்டிருந்த பிறகு, ஷோபாசக்தி போல 'கேளுங்கள் பெளசரே' என்று ஆரம்பித்துவிடலாம் என்பதே ஆகிவருகிறது. காதுகளுடன் ஒருவர் முன்னால் இருப்பதுதான் எவ்வளவு வசதி!

போரின் முடிவில் கஜினி முகம்மதாகச் சிந்திப்பதா அசோகச் சக்கரவர்த்தியாகச் சிந்திப்பதா என்ற தெரிவில் ஒருவேளை 'எதுவரை' என்ற கேள்விக்கு விடை வந்துவிடலாம் போலத் தோன்றுகிறது. ஆனால் இன்றும் இதுபற்றி ஒரு உரையாடலை ஆரம்பிப்பது அவ்வளவு சுலபமாய்த் தெரியவில்லை. நம் சமூகத்தின் வீரம், புத்திசாலித் தனம், ஏனைய மூடர்களைக் கட்டிமேய்த்து ஆண்டகாலம் போன்ற ஏறுபட்டி தளநார் வகைகளின் எழுப்ப நினைவுகளிலிருந்து இன்னும் நாம் இறங்கி வந்ததாகத் தெரியவில்லை.

போரிலும் போரின் பின்னுமான வாதைகளுக்குள் நேரடியாகச் சிக்குப்படாது, வெளியிலிருந்து அழிவுகளை உணர்ந்தவர்களின் வீரக் குமுறலையும் பழிதீர்ப்பு மனவோட்டத்தையும் புரிந்துகொள்ள முடிகிறது.



படிப்பகம்

www.padippakam.com



**மனம் நடுங்கவைக்கும் அதிர்வுகளும் அழிவுகளும் கண்டவர்கள், பழிவாங்கும் உணர்ச்சியோடு மீண்டும் அந்தச் சுழலுக்குள் போவது தவிர, வாழ்வதற்கான வேறு வழிகளைக் காட்ட நம் சமூகத்தின் அறிவுசார் பிரஜைகள் யாருமில்லையா?**

ஆனால், 'வவுனியா முகாம்களை வந்து பாருங்கள்; இந்த மக்களை மீண்டும் ஆவேசப்படுத்தினால் மேலும் விளையப் போவதைச் சிந்தித்து, அடுத்த வழிமுறை ஏதேனும் பற்றிப் பேசுங்கள்' என்று அவர்களுக்குச் சொல்லலாம் என்றால்... என்ன சொல்ல பௌசர், போரின் குரூரத்திற்குள் கிழிபட்டு வந்து முள்ளுக் கம்பிகளுக்குள் அடக்கப்பட்டிருக்கும் மக்களிடம் பேசினால்... இன்னும் கோபமும் விரோதமும் பழிதீர்க்கும் உணர்ச்சியுமாய், கொஞ்சம் தட்டிவிட்டால் மீண்டும் பற்றிக் கொண்டுவிடும் என்று பயமூட்டுவதாகவே இருக்கிறது. அவர்களுக்கு, இன்றைய உலக யதார்த்தத்துக்குள் வாழும் மனத்தயாரிப்பை வழங்க, உலகெங்குமிருந்து அனைத்து உளவளப் பணியாளர்களும்தான் வந்து பணியாற்ற வேண்டியிருக்கும்.

நம் மனங்கள் தயாரிக்கப்பட்டிருப்பது பெரும்பாலும் ரோசம், தியாகம், பழியுணர்ச்சியால் தான் போலும்! வாழ்வதற்கான விவேகம், சகிப்பு, விட்டுக்கொடுப்பு, பன்மை இணைவு போன்ற கோழைத்தனங்களின்(?) உபயோகம் பற்றிய எந்த அடியாழ வண்டல்களும் நம் மனங்களினுள் இல்லை. மனிதர்கள் தாம் புனைந்துகொண்ட சில கற்பித உணர்வுகளுக்காகத் தங்கள் உயிரை இழந்துவிடத் தயாராயிருக்கும் மன அமைப்பை அறிந்துகொள்ள அதிர்ச்சியாகவே இருக்கிறது.

மொழி அழிந்துவிடக் கூடாது, தேசக்கனவு அழிந்துவிடக் கூடாது என்பதற்காக எவ்வளவு மனித உயிர்கள் வேண்டுமானாலும் அழியலாம் என்ற எங்கள் அடிமனதின் நியாயங்களை அடிப்படைகளை மாற்றாமல் நம் அழிவுகளைத் தடுத்துக்கொள்வது எவ்வாறு?

ஒரு மொழிக்கு அதற்கென்றொரு நாடில்லா விட்டால் அந்த மொழி அழிந்துவிடும் என்பதற்கான சாத்தியங்களிருப்பது உண்மையாகவே இருக்கட்டும். அதற்காக, மொழியைக் காக்கச் சில ஆயிரம் மனித உயிர்களை இழக்கலாம் என்பது சரிதானா? இதற்கு, வீரமும் உணர்ச்சிகரமான ஒரு நிலையிலிருந்து முடிவெடுக்கிறவர்களோடு ஒத்துப்போகலாமா? மனம் நடுங்கவைக்கும் அதிர்வுகளும் அழிவுகளும் கண்டவர்கள், பழிவாங்கும் உணர்ச்சியோடு மீண்டும் அந்தச் சுழலுக்குள் போவது தவிர, வாழ்வதற்கான வேறு வழிகளைக் காட்ட நம் சமூகத்தின் அறிவுசார் பிரஜைகள் யாருமில்லையா?

இங்குள்ள நிலைமை இதுதான் பௌசர்! கொழும்பிலோ தெற்கிலோ இன்று ஒரு மிகப் பாரிய குண்டுவெடிப்பு நிகழுமென்றால், அதன் விளைவுகள் இன்னும் எவ்வளவு சீரழிவுக்கு நம்மைத் தள்ளும் என்பதை நினைக்க விடாத - அதற்கு மேலாக எழும் ஒருவித ஆவேச திருப்தியே பிரதான நீரோட்ட தமிழ் உணர்வாக இன்னுமிருக்கிறது. இனியுமொரு வீரத்தின் விளைவை இந்தச் சமூகம் தாங்குமா?

இந்த விரக்திச் சூழலிலிருந்து மீள்வதற்கும் வாழ்வை மீட்பதற்கும் உயிரழிவுகளற்ற ஒரு வழிமுறையைக் கண்டடைந்து கொள்ளும் சவால் நம் சமூகங்களைச் சேர்ந்த அறிவார்ந்த பிரஜைகளின் முன்னாலுள்ளது. அரசை வழிமொழிவது அல்லது முற்றாக நிராகரிப்பது என்னுமிரண்டையும் தவிர்த்து, நமக்கு - இந்த நாட்டுக்கு வேண்டியது பற்றிப் பேசப்பட வேண்டும். மொத்த மக்களிடமும் அதற்கான உரையாடல் திறக்கப்பட வேண்டும். இன்று, அரசுடன் மேசையின் எதிர்ப்புறமிருந்து பேசுவதற்குத் தெரிகின்ற அரசியல் வெற்றிடத்தை நிரப்புவது எங்ஙனம்? இன்னும் பாரிய சீரழிவுகள் தொடர்வதற்குக் காரணகர்த்தாக்களாய் நாம் எதிர்காலத்திலும் கண்டுபிடித்துத் திட்டப் பலருளர். மக்களிடம் வன்முறை தவிர்த்து வாழ்வது குறித்த நம்பிக்கைகள் உருவாகிவரக் காரணராக யார் யார் முன்வருவர்?


உயிர் உனக்கு வெல்லமா? என்று கேட்டால், ஓம் என்று சொல்வதில் இழிவு இருப்பதாக உணர்வதும் ஒரு பிரச்சினை எனத் தோன்றுகிறது. வாழ்வதற்கான விருப்பம் கோழைத்தனமாக எண்பிக்கப்பட்ட நம் மன்னர் கால வீரப்புனைவுகளின் விளைவு இது. பயம் நம் ஆதார உணர்ச்சிகளுள் ஒன்றாக இருப்பது, வாழும் விருப்பத்தினால்தானே. பரிணாமம் என்பதும் நாம் உயிர் பிழைத்துக்கொள்ளும் வழி கண்டு நடந்து வந்ததுதானே. வன்முறையால் எதிரிகளை வீழ்த்திப் பிழைத்தது குகை மனிதனின் வாழ்க்கைமுறை. இன்றும் நாம் பிழைத்தலுக்கு ஆதி மனிதர் வழிமுறையையேவா வைத்திருப்பது?





படிப்பகம்

www.padippakam.com




*நாமும் நம் குழந்தைகளும் எதிர்காலச் சந்ததிகளும் வாழ்வதற்கு நாம் செய்ய வேண்டிய தியாகம் நமது உயிர்களல்ல; நம் வெறுப்புணர்வை, விரோதத்தை, ஏகப்பெருமிதப் பழியுணர்ச்சிகளையே நாம் தியாகம் செய்ய வேண்டியிருக்கிறது.*

□□□

தமிழவனின் 'வார்ஸாவில் ஒரு கடவுள்' படித்த போது, இப்போது உயிரோசை இணைய இதழில் தொடராய் எழுதிவரும் 'திராவிடத் தமிழவன்' வேறுபட்டுத் தெரிகிறார். தேச, மொழி, கலாசார எல்லைகளைக் கடந்த உணர்வுகளையும் எல்லா அடையாளங்களையும் மீறி மனிதர்கள் எல்லோரும் ஒன்றுதான் என்பதாக ஒரு சித்திரம் நாவலில் கிடைக்கிறது.

உயிரோசையிலோ தமிழர்களின் மூலப்படிம உணர்வு பற்றியும், அது ஒரு தன்னேரில்லாத் தலைவனைத் தேடுவது பற்றியும் அதன் மூலம் தமிழுக்கென்றொரு நாடு தேடும் பணியில் உலகத் தமிழர்கள் ஒன்றுபட வேண்டும் என்றும் தட்டி யெழுப்பி வருவதைக் காண முடிகிறது.

பொதுவாகவே இன்னொரு மனிதனுக்காக - அவன் எந்த நிற மொழி இன தேசத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும் - பரிவுகொள்கிற, அவன் துயரத்திற்காகக் கலங்குகிற உள்ளம் கொண்டிருக்கும் நாம், நமது இனத்துக்குத் துன்பம் நேர்கையில் இன்னொரு இனத்தின் முழு மனிதர்களையுமே அரக்கர்களாகப் பார்த்து ஆவேசமுறவும் அவர்களோடு உரையாட முடியாதவர்களாகவும் ஆகிறோம். நம்முடைய இன ஒற்றுமையை வலுப்படுத்தி எதிரிக்குழுக்களை ஒழித்துவிட முனையும் ஆதிகால மனிதர் குணத்திற்கு அடிமையாகிவிடுகிறோம். இதுதான் அந்த மூலப்படிம உணர்வென்றால், இதை வெல்வது எப்படி என்றல்லவா நாம் பேச வேண்டும். பாடையிலே போகும்போதும் பைந்தமிழ் இருந்தால் போதும் என்கிற மூலப்படிம உருகுநிலை எல்லாம் தன்னை மட்டுமல்லாது மேலும் எத்தனை பேரைச் சாகடிக்க விரும்புகிற வார்த்தைகள் என்பது அவருக்குத் தெரியாமலா இருக்கும்?



அமைப்பியலைத் தமிழில் அறிமுகம் செய்ததன் மூலம் பின்நவீனத்துவச் சிந்தனைகளின் வருகைக்கும் ஒரு முகாந்திரமாய் இருந்தவர் என்பது, இன்றைய



படிப்பகம்

www.padippakam.com

**அழிவுகள், சித்திரவதைகள் அற்ற வாழ்வுக்கான கதையாடல்களை முன்கொணரப் பேச்சுக்களை நிகழ்த்தியவர்களும்கூட அடையாளங்களை முன்வைத்து மனிதர்களை விலக்கும் பேச்சுக்குத் திரும்பியிருப்பது அச்சமூட்டுகிறது. உலக மனிதர்கள் எல்லோரும் அவரவர் மூலப்படிம உணர்வுக்குத் திரும்ப - உலக அமைதி வரக்கூடுமென்றால் நல்லது தான்.**

அவரது தமிழ்த் தேசியத்தை உற்சாகப்படுத்தும் எழுத்துக்களைப் படிக்கிறபோது ஆச்சரிய மூட்டுவதாய் உள்ளது. இந்த உயிரோசை கட்டுரைகளைத் தமிழவனின் கோமாளித்தனங்கள் என்று ஒரே வரியில் நகையாடுகிறார் தமிழ்ப் பி.ந. எழுத்தாளர்களில் ஒருவரான சாரு நிவேதிதா.

ஆனால், பல ஆண்டுகளுக்கு முன்பே, இந்த அடையாள அரசியல் மற்றும் உணர்வுப் பெருக்குகை உருவாக்கிவிடுகிற வன்முறையும் அழிவுகளும் பற்றிய பேச்சுக்களில் தமிழவனும் ஒரு பகுதியாக இருந்திருக்கிறார். பல வருடங்களுக்கு முன் சென்னையில் ஒரு கூட்டத்தில், எஸ்.என். நாகராஜன், "நாம் தமிழர்கள்..." என்று பேச ஆரம்பித்தபோது, எதிர்வு சிவக்குமார் குறுக்கிட்டு "யார் யாரெல்லாம் தமிழர்கள்? நீங்கள் எத்தனை பேர்?" என்று கேட்டபோது தமிழவனும் மேடையிலிருந்தார்.

இருபதாண்டுகள் கழித்து இன்று அவரது பதில்: தமிழ் மூலப்படிம உணர்வால் இயக்கப்படுகிற கருணாநிதி, வை.கோ., நெடுமாறன், தா.பாண்டியன் போன்றோர் தமிழர்கள். ஜெயலலிதா, வரதராசன் மற்றும் காங்கிரஸ்காரர்கள் இந்தத் தமிழ் மூலத்திற்குள் வராதவர்கள் என்பதாக இருக்கிறது. இப்போது இலங்கை வடக்கு கிழக்கில் உயிரோடு மிஞ்சியிருப்பவர்களை அவர் வகைப்படுத்துவது எப்படியிருக்கும் என்று யோசிக்கப் பயமாக இருக்கிறது. (நாவலில் வேறு, கடவுள் மறுஉயிர்ப்புச் செய்யும் நாள் நவம்பர் 26.) அதிருக்க, தாய்த் தமிழகத்தில் கூட்டணி, தேர்தல் என்று வந்து விட்டால் நம்தமிழர்கள் மூலப்படிம ஆய்வாளர்களின் மூளையை எப்படிக் காயவைத்துவிடுவார்கள் என்பது நடந்துமுடிந்த ஜோக்!

அழிவுகள், சித்திரவதைகள் அற்ற வாழ்வுக்கான கதையாடல்களை முன்கொணரப் பேச்சுக்களை நிகழ்த்தியவர்களும்கூட அடையாளங்களை முன்வைத்து மனிதர்களை விலக்கும் பேச்சுக்குத் திரும்பியிருப்பது அச்சமூட்டுகிறது. உலக மனிதர்கள் எல்லோரும் அவரவர் மூலப்படிம உணர்வுக்குத் திரும்ப - உலக அமைதி வரக் கூடுமென்றால் நல்லது தான். தமிழுக்காக நாமும் உயிரை விட்டுவிடலாம். ஒருவேளை, ஒவ்வொருவரும் தம்மைத் தாமே அழித்துக்கொள்வதுதான் மற்றவர்களுக்காகச் செய்யும் காரியமோ என்னவோ.

▣





**அம்பலம்**
சமூக கலை இலக்கிய இதழ்

தொடர்புகளுக்கு:
41, இராஜ வீதி
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

**நீங்களும் எழுதலாம்**
- இருமாத கவிதை இதழ்

ஆசிரியர்:
எஸ்.ஆர். தனபாலசிங்கம்

தொடர்புகளுக்கு:
103/1, திருமால் வீதி,
திருக்கோணமலை







படிப்பகம்

www.padippakam.com



மகேஷ் முனசிங்க

# சகோதர மக்கள்



சிங்களத்திலிருந்து தமிழில்:
**சிவகுருநாதன்**

அவர்களைக் குரூரமாக வதைத்து
இருண்ட குகைக்குள்
சிறை வைக்க வேண்டுமென
நீங்கள் நினைக்கிறீர்களா ?

அவ்வாறாயின், முட்கம்பி வேலிகளால்
சுற்றி வளைக்கப்பட்ட முகாம்களில்
அடைக்கப்பட்ட பின்னர் அவர்கள்
சுதந்திரமாக வாழ்கின்றனரென
நீங்கள் கூறுவீர்கள்...

அவர்கள் வெட்கம் அச்சம் இல்லா
காட்டுமிராண்டிகள் என
நீங்கள் நினைக்கிறீர்களா ?

அவ்வாறாயின், நிவாரணமாக வழங்கப்பட்ட
கந்தைத்துணியைக் கட்டியவுடன்
அவர்களுக்குப் பட்டுத் துணி உண்டென
நீங்கள் கூறுவீர்கள்...

கண்ட கண்ட இடங்களில் விழுந்து அவர்கள்
பட்டினிச் சாவை எதிர்நோக்க வேண்டுமென
நீங்கள் நினைக்கிறீர்களா ?

அவ்வாறாயின் விடியற்காலை மூன்று மணிக்குரிய
கியூ வரிசைகளில் விநியோகிக்கும்
சொற்ப நீரை அமிர்தமென
நீங்கள் கூறுவீர்கள்...

அவர்கள் தொற்று நோயால் பீடிக்கப்பட்டு
அழிந்து போக வேண்டுமென
நீங்கள் நினைக்கிறீர்களா ?

அவ்வாறாயின் தொண்டர் வைத்தியர்
ஒருவரின் மருந்துக் குளிசையை
தேவ ஔடதமென
நீங்கள் கூறுவீர்கள்...

அவர்களின் விதி வாழ்வல்ல மரணமே என
நீங்கள் நினைக்கின்றீர்களா ?

அவ்வாறாயின் இறந்த மனிதரிடையே
எஞ்சிய ஒரு மனிதனுடைய
மூச்சிற்கு வாழ்வென
நீங்கள் கூறுவீர்கள்...

அவர்கள் முழங்காலில் மண்டியிட்டு
கோழைகளாக வாழவேண்டுமென
நீங்கள் நினைக்கிறீர்களா ?

அவ்வாறாயின் ஒரே திசையை நோக்கி
வாய்பேசாது இருக்கும்
மனிதர்களை சகோதர மக்களென்று
நீங்கள் கூறுவீர்கள்...



படிப்பகம்

www.padippakam.com

□ அஞ்சலி

ஆங்கில மூலம்:
**ஹோவான் சிமித், கேற்மொஸி, எலைன் வூ**

தமிழில்:
**ஜி.ரி. கேதாரநாதன்**

# மரிலீன் பிரெஞ்ச்

(1929 - 2009)



பிரபலம் வாய்ந்த அமெரிக்கப் பெண்ணிய எழுத்தாளரும் பெண்ணிய ஆய்வாளரும் கல்வியாளரு மாகிய மரிலீன் பிரெஞ்ச் தமது 79 ஆவது வயதில் காலமானார். சமரசங்களுக்கு ஆட்படாது அவருக்கேயுரிய இயல்பான சுயத்துடன் எழுதிய மரிலீன் பிரெஞ்ச் தமது முதலாவது படைப்பான *Women's Room* நாவலின் மூலம் சர்வதேசளவில் பெரும் புகழீட்டியிருந்தார். அந்த நாவலை எழுதியபோது 50 வயதை அவர் எட்டியிருந்தார். அது 77களில் வெளியானது. அக்காலகட்டத்தில் பெண்களது அனுபவங்களை அவர்களது வாழ் நிலைமைகளைப் பெண்ணிய நோக்கில் மையப்படுத்திய ஒரு இலக்கியப் பிரதி என்ற வகையில அந்த நாவல் ஒரு முன்னோடிப் படைப்பாக முக்கியத்துவத்தைப் பெற்றிருந்ததாக பெண்ணிய விமர்சகர்கள் சிலாகிக் கின்றனர்.

பெண்ணிய எழுத்தில் சிமோன்டி பொவாரின் *Second Sex*க்கு நிகராகக் கலாசாரப் பண்பாட்டுத் தளத்தில் விழிப்புணர்வினை ஏற்படுத்தி, பல மாற்றங்களுக்கு உந்தியதொரு, படைப்பாக மரிலீன் பிரெஞ்ச்சின் *Women's Room* நாவலை அவர்கள் கருதுகின்றனர். அந்த நாவலுக்குக் கிடைத்த வரவேற்பும் பரந்தளவிலான வாசகர் பெருக்கமும் வெளியீட்டுத்துறையினருக்கு ஆச்சரியத்தையும் பிரமிப்பினையும் ஏற்படுத்தியிருந்தது. எல்லாமாக இருபதுக்கும் மேற்பட்ட மொழிகளில், மொழி மாற்றம் செய்யப்பட்ட நாவல், விற்பனையில் 11 மில்லியன் பிரதிகளையும் தாண்டி சாதனை படைத்திருந்தது. பின்னர் அது தொலைக்காட்சி திரைப்படமாகவும் பரந்தளவிலான பார்வையாளர் களை எட்டியுமிருந்தது.

மரிலீன் பிரெஞ்ச் நியூயோர்க் நகரில் 1929-ஆம் ஆண்டு நவம்பர் 21ஆம் திகதி பிறந்தார். அவரது தந்தையார் சார்ள்ஸ் எட்வேர்ட்ஸ் ஒரு பொறியியலாள ராவார். அவருடைய தாயார் இஸபெல் களஞ்சிய மொன்றில் வேலை செய்தார். பிரெஞ்ச்சின் மூதாதையர்கள் போலந்திலிருந்து அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்து வந்தவர்கள். பிரெஞ்ச்சின் இளம் பிராயத்தின் போது குடும்பம் வறுமை நிலையி லிருந்தது. எனினும் தாயார் இஸபெல் மகளின் கல்வி இடையுறின்றித் தொடரும் வகையில் அக்கறையுடன் பாடுபட்டதால் பிரெஞ்ச், 1951ஆம் ஆண்டில் பட்டதாரியாக முடிந்தது. ஆங்கிலமும் தத்துவமும் அவரது பிரதான பாடங்களாக இருந்தன. பல சிரமங்களுக்கும் சவால்களுக்கும் மத்தியில் தளர்வடையாது கல்வியைத் தொடர்ந்து 1964ஆம் ஆண்டில் முதுகலைப் பட்டதாரியானார். பின்னர் கோவ்ஸ்ரா கல்லூரியிலேயே ஆசிரியத் தொழிலை நான்கு ஆண்டுகள்வரை தொடர்ந்தார். அதன் பின்னர் ஹார்வார்ட் சென்ற மரிலீன் பிரெஞ்ச் 1972ஆம் ஆண்டில் கலாநிதிப் பட்டம்பெற்றார்.

1976-ஆம் ஆண்டு அவரது முதலாவது படைப்பு வெளிவந்தது. அது ஆங்கில இலக்கியப் பரப்பில் உன்னத சிருஷ்டியாளராக மதிக்கப்படும் ஜேம்ஸ் ஜோய்ஸின் யூலிஸஸ் பற்றியதான ஆய்வு நூல் ஆகும். ஹார்வார்ட் பல்கலைக்கழகப் பதிப்பகம் அதனை வெளியிட்டிருந்தது. அதற்கு ஒரு வருடத்தின் பின்பு மரிலீன் பிரெஞ்ச் சர்வதேச புகழ் அடைய காரணமான படைப்பான *Women's Room* நாவல் வெளியானது. சற்றுப் பிந்தி தமது 50ஆவது வயதிலேயே நாவல் எழுதத் தலைப்பட்டவருக்கு முதலாவது படைப்பின் போது எடுத்த எடுப்பிலேயே எதிர்பாராத வகையில் கிட்டிய பணமும் செல்வாக்கும் எத்தகைய ஆதங்கமோ கிலேசமோ அடையாது கனதியான படைப்பாக்க முயற்சிகள் பலவற்றிலும் முனைப்



படிப்பகம்

www.padippakam.com

புடன் தொடர்ந்து ஈடுபடுவதற்கான தெம்பினை அளித்திருந்தது எனலாம்.

மரிலீன் பிரேன்ச்சுக்கும் தாயாருக்குமான உறவும் பிணைப்பும் மிக வலிமையானது. சிறு வயதிலிருந்தே அவருடைய உருவாக்கத்தில் தாயாரின் பங்கும் அவர் வகித்திருந்த பொறுப்பும் அளப்பரியது. ஆனால் அதேவேளை தந்தையாரின் இருப்புக் குறித்து அவர் பெருமையடையவதற்கோ அல்லது பெருமிதம் கொள்வதற்கோ அவரிடம் எதுவுமே இல்லாமற்போக நேர்ந்தது அவருடைய சோகமாகும். சிறு பிராயத்தி லிருந்தே தாயார் எப்போதுமே கண் காணிப்புடன் தன்னையும் இளைய சகோதரியையும் அதிகாரம், அச்சுறுத்தல் போன்றவற்றின் நிழல்கூட அண்டாத வாறு அருமைபேணி வளர்த்து வந்ததாகவும் தந்தை யார் தம்மை அடிக்க ஒரு போதும் அனுமதித்த தில்லையென்றும் அதிகாரத்துவத்திற்கோ ஆணவத் திற்கோ தலைவணங்காப்போக்குத் தம்மிடம் வளர்ந்து வர அத்தகையதொரு இளவயதுப் பின்னணியே ஒரு வகையில் காரணமாக இருந்திருக் கலாம் எனவும் 2006 கார்டியன் பத்திரிகைக்கு அளித்த நேர்காணலொன்றின் போது கூறியிருந்தார்.

மரிலீனின் திருமணம் 1950-இல் நடைபெற்றது. அவரது கணவர் றொபோட் பிரென்ச் ஆரம்பத்தில் எழுத்தாளராக வேண்டுமென்று ஆர்வம் கொண்டிருந் தார். எனவே அவரது நலனுக்கு முன்னுரிமையுடன் ஆதரவளிக்கும் நோக்கில் குடும்ப வருமானத்தின் பொருட்டுச் சலிப்பேதுமின்றித் தன்னை வருத்தி காரியாலய வேலைகள் பலவற்றைக் ஏற்றுக் கொண்டு செய்தார். பக்கபலமாக இருந்து மரிலீன் பிரென்ச் அவ்வாறு உதவியபோதிலும்கூட கணவரின் முயற்சி கைக்கூடவில்லை. பின்னர் அவரது கணவர் ஒரு சட்டத்தரணியானார். திருமண வாழ்க்கை மகிழ்ச்சி யற்றதாக இருந்தது. இறுதியில் இருவரும் 1967ஆம் ஆண்டு விவாகரத்தின் மூலம் விலகிக் கொண்டனர். அப்போது அவர்களுக்கு மகளும் மகனுமாக இரு பிள்ளைகள் இருந்தனர். உடனடி நண்பர்கள் வட்டத்தைப் பொறுத்தவரை விவாகரத்துப் பெற்ற முதலாவது நபராக மரிலீன் பிரென்ச் இருந்தார். "எனது கணவர், ஜெக்கேல் அன்ட் ஹைட் போன்றவர் உலகில் மிக நல்லவர் என ஏனையோர் மதிக்கும்படி வெளியுலகில் நடந்து கொள்வார். ஆனால் வீட்டிலோ முற்றிலும் வேறுபட்ட மூர்க்கமான மிருகம் அவர்" என இன்டிபென்டன்ட் பத்திரிகை நேர்காணலொன்றில் அவர் தெரிவித் திருந்தார்.

*Women's Room* நாவல் ஒரு வகையில் எழுத்தாளரின் வாழ்க்கைக் கூறுகளை முழு அளவில்லாதுவிடினும் ஏதோ ஒரு விதத்தில் பிரதிபலிப்பதாக ஒரு சில விமர்சகர்கள் தெரிவித்திருக்கின்றனர். குறிப்பாகக் கசப்பான திருமண வாழ்வு, விவாகரத்து மற்றும் 18 வயதான அவருடைய மகள் பலாத்காரமாக வல்லுறவுக்குள்ளாக நேர்ந்த சோக சம்பவம் ஆகியனவற்றைக் குறிப்பிட முடியும். நாவல் அதன் பிரதான கதாபாத்திரமான அடக்க சுபாவம் கொண்ட குடும்பப் பெண்ணான மிர்ரா வார்ட் தான் குழந்தைப் பிராயம் முதல் நடுத்தர வயதுவரை எதிர்கொள்ளும் வாழ்வனுபங்களின் பின்னணியில் பரிணாம மடைவதைப் பெண்ணிய நோக்கில் மிகத்துல்லிய மாகச் சித்தரிக்கின்றது. அந்த வகையில் மிர்ராவின் சுயதேடல் அடிப்படையிலானதொரு பயணமே நாவலாக உருவெடுப்பதாக, பரிணாமடைவதாகக் கூற முடியும். அத்தகைய பின்புலத்தில் சமூக கலாசார தளத்தில் காரசாரமானதொரு பெண்நிலைவாத விமர்சனக் கண்ணோட்டம் நாவலுக்குக் கனதி சேர்க்கின்றது. அடக்குமுறைக்குள்ளாகும் பெண் ணிடம் இயல்பாகவே இருக்க வேண்டிய நியாயமான கோபமும் விடுதலையுணர்வு மிக்க தாகமும் நாவலில் வீரியத்துடன் வெளிப்படுகிறது. எழுத்தாளரது ஆன்மாவின் உள்ளார்ந்த அதிர்வுகள் மிர்ரா வார்ட் மூலமாகவும் வேறு சில பாத்திரங் களின் வாயிலா கவும் உயிர்ப்புடன் வெளிக்கொணரப் படுகின்றன.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததொரு கால கட்டத்தில் வெளிவந்த இந்த நாவல் பெண் எனப்படுபவள் தனக்குரிய அடையாளங்களைத் துறந்து உறைந்துபோய்விடாது எழுச்சி கொள்ளும் விதத்தில் எழுதப்பட்டுள்ளதாகப் பெண்ணியப் பதிப்பக நிறுவனரும் மரிலீன் பிரென்ச்சின் நீண்ட கால நண்பியுமான புளோரன்ஸ் ஹோவ் தெரிவித் திருந்தார். நாவலின் பிரதான பாத்திரம் அந்த நாவலில் வரும் நெருக்கடியானதொரு கட்டத்தில் "எல்லா ஆண்களும் வன்புணர்ச்சியாளர்கள். எப்போதும் அவர்கள் அப்படித்தான்." என்று கூறப்படும் வாக்கியம் தப்பான அர்த்தப்படுத்தலுடன் மரிலீன் பிரென்சுடன் அடையாளப்படுத்தப்பட்டு அவரை ஒரு ஆண் இன வெறுப்பாளராகச் சுட்டுவதற்கு அல்லது குற்றஞ்சாட்டுவதற்கும் ஒரு சில விமர்சகர்களால் தந்திரோபாயமாகப் பயன்படுத்தப் பட்டிருப்பது மிகவும் துர்ப்பாக்கியமானதொரு நிலையாகும். அவருடைய எழுத்து ஒரு அராஜகவகை எழுத்து என அவர்கள் குறைகூறுகின்றனர்.

அக்குற்றச்சாட்டுக் குறித்து மரிலீன் பிரென்ச் கடும் கொதிப்படைந்துள்ளதுடன் உண்மையில் தான் ஆண்கள் வெறுப்பாளர் அல்லவென்றும் ஆண்கள் மீது எதிர்க்கக்கூடிய அம்சம் அவர்களிடமிருக்கும் மேலாதிக்கக் குணாம்சமேயொழிய வேறில்லையென லண்டன் டைம்ஸ் பத்திரிகையில் விபரித்துள்ளார். சொல்முறையில் கவர்ச்சி, கச்சிதம் போன்றவற்றுக்கு எத்தகைய முக்கியத்துவமும் அளிக்காது உள்ளார்ந்த நேர்மையுடனும் கோபத்துடனும் வெளிப்படும் நாவல், வாசிப்பு ஈர்ப்பிணைத் தக்கவைத்திருப்பதாக அப்பிரச்சினைகளை நேரடியாக எதிர்கொள்ளும் விதத்தில் உண்மைக்கு நெருக்கமாக ஆவணத்தன்மை சார்ந்ததொரு படைப்பாக வெளிப்படுவதை



படிப்பகம்

www.padippakam.com

அவதானிக்க முடியுமெனவும் கூறப்படும் விமர்சன பூர்வமான கருத்தினை நாவல் குறித்த ஒரு நியாயமான மதிப்பீடென ஒரு வகையில் ஏற்றுக்கொள்ள முடியும்.

சமகால பெண்ணிய எழுத்தாளர்களுக்குத் தனித்துவமிக்க பெண்ணிய எழுத்தாளராகவும் அதனிலும் பார்க்கக் கூர்மையான பெண்ணிய ஆய்வாளராகவும் கல்வியாளராகவும் மரிலீன் பிரெஞ்ச் விமர்சகர்களால் மதிப்பிடப்படுகிறார். ஜோங், பிரீடென் மற்றும் பத்திரிகை ஆசிரியருமான குளோரியோ ஸ்ரீனெம் ஆகியோர் அவரது சமகாலத்தவர்கள். குளோரியோ ஸ்ரீனெம் அவருக்கு மிகவும் நெருக்கமானவர். பிரெஞ்சின் படைப்பு களை அவர் நன்கு சிலாகிப்பவர். ஆரம்பத்தில் பிரெஞ் எழுத்துத் துறையில் நாட்டம் கொள்வதற்குச் சிந்தனைத் தளத்தில் இரு நிகழ்வுகள் உந்துதலாக இருந்திருக்கின்றன. ஒன்றுகேற் மிலற் எழுதிய பெண்ணிய ஆய்வுக் கட்டுரைகளடங்கிய *Sexual Politics* என்ற முக்கியமான படைப்பினை அவர் வாசிக்க நேர்ந்ததைக் குறிப்பிட முடியும். மற்றது துயரமான சம்பவமான அவருடைய 18 வயது மகள் ஜாமி பாலியல் வல்லுறவுக்குள்ளானதால் அவருக்கு ஏற்பட்ட அழுத்தமான மனப் பாதிப்பு.

சாதாரண நிலையில் சுமூகமாகவும் அமைதி யாகவும் இயங்குபவர் மரிலீன் பிரெஞ். ஆனால் படைப்பாக்க நிலையில் அவருக்குக் கோபமும் கொதிப்பும் ஏற்படக் காரணம் அவருக்கு உண்மை, சமூக நீதி போன்றவற்றிலிருக்கும் ஆழ்ந்த பற்றுறு தியேயாகும். பெண்களின் அவல நிலைகளுக்கு ஆண்களே எப்போதும் காரணமெனவும் அவர்கள் பெண்கள் மீது கொண்டிருக்கும் வன்மங்களும் விரோதங்களும் ஒருபோதும் விபத்தாக நேர்பவை யல்ல என்றும் கூறுகிறார். அவர் பல நாவல்களையும் மற்றும் புனைவு சாரா வகையில் அடங்கக் கூடிய ஆய்வுக் கட்டுரைத் தொகுதிகளையும் எழுதியிருக் கிறார். பெரும்பாலான படைப்புகளில் தந்தை வழிக் கருத்து நிலைகளுக்கும் மதிப்பீடுகளுக்கும் ஆட்பட்டி ருக்கும் ஆணாதிக்கச் சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்கும் கலாசாரத் தடைகள் மற்றும் அடக்கு முறைகள் போன்றவை கேள்விக்குள்ளாக்கப்பட்டு விவாதிக்கப் படுகின்றன.

இலக்கிய விமர்சனம் என்ற வகையில் சேக்ஸ்பியர் பற்றிய ஆய்வு நூலொன்றையும் பிரெஞ் எழுதி யிருந்தார். அதில் பெண்கள் பாலியல்பு தொடர்பில் சேக்ஸ்பியருக்கு இருந்த பீதி குறித்து விமர்சனப் பாங்காக ஆராய்ந்திருந்தார். ஒரு நாவலாசிரியை என்ற வகையில் தாம் கொண்டாடப்படுவதைப் பார்க்கி லும் மிகவும் கூர்மையும் விரிவுமான பெண்ணிய ஆய்வாளராகத் தாம் கவனிப்புப் பெற வேண்டும் என்பதையே அவர் மனதார எதிர்பார்க்கிறார். ஏன் எனில் நுட்பமும் சிரத்தையும் மிக்க பெண்ணிய ஆய்வாளராகத் தம் வாழ்நாளில் பெரும் பகுதியை



அவர் செலவிட்டிருக்கிறார். கான்சர் வியாதி முற்றிக் கடும் உடல், உள உபாதைகளுக்குட்பட்டுத் தளர்ந்த நிலையிலும்கூட ஆர்வம் குன்றாது, படைப்பு மனோ நிலை தளராது ஆய்வுப் பணிகளில் முனைப்புடன் ஈடுபட்டிருக்கின்றார். இதற்குச் சாட்சியாக அதன் பின்னரும் அவர் வெளியிட்ட பல படைப்புக்கள் திகழ்கின்றன எனலாம்.

மரிலீன் பிரெஞ் தொடர்ந்தும் பல நாவல்களை எழுதியுள்ளார். *Bleeding heart, Her Mother's Daughter, Our Father, In the name of Friendship* ஆகியனவற்றைக் குறிப்பிடலாம். புனைவு சாரா படைப்புக்கள் என்ற வகையில் தந்தை வழிமுறைச் சமுதாயம், தாய் வழிச் சமூகம் ஓரங்கட்டப்பட்ட பெண்ணின வரலாறு, அதிகாரத்துக்கு அப்பால்: பெண்கள் ஆண்கள் மற்றும் ஒழுக்கவியல் குறித்து, பெண்களுக்கு எதிரான யுத்தம் என்ற தலைப்புக்களில் வெளிவந்த ஆய்வுக் கட்டுரைத் தொகுதிகள் போன்றன அடங்கும். குறிப்பாக வரலாற்றை விரிவாக உள்ளடக்கிய ஆய்வுத் தொகுதியான *From Eve to Dawn* என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும். இவற்றைவிடச் சுயசரிதை சார்ந்த சில படைப்புக்களும் வெளியாகியுள்ளன.

பெண்ணியம் என்பதன் சாரம் குறித்து அவரிடம் கேட்கப்பட்டபோது அடிப்படையில் அது எல் லோரும் சமத்துவமானவர்கள் என்பதையே வலியுறுத்துவதாகத் தெரிவித்திருந்தார். அவருடைய வாழ்வின் இறுதிக்காலத்திலான நேர்காணல்களில் பெண்ணியத்தின் பங்களிப்பு, அதனால் சாதிக்கப் பட்டது போன்றன குறித்து வினவப்பட்டபோது இளம் தலைமுறையினரிடையே ஓரளவு விழிப் புணர்வு ஏற்பட்டுள்ள போதிலும் எதிர்பார்த்த பரவலான தாக்கம் ஏற்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டுமென்றார். அது தொடர்பில் பெண்களின் நிலை, தரம், அந்தஸ்து குறித்து நிச்சயமாகவே கூடுதலான மாற்றங்களை எதிர்பார்த்திருந்தவர், அதற்காக ஏக்கமுற்று இருந்தவர் என்ற ரீதியிலேயே அவரது பதிலை நாம் புரிந்து கொள்ள முற்பட வேண்டும் என அவரது நெருக்க மான தோழியும் பத்திரிகை ஆசிரியருமான ஸ்ரேனெம் விபரித்திருந்தது நோக்கத்தக்கது. ▣



படிப்பகம்

www.padippakam.com

□ **சிறுகதை**



# மூன்று படுகளத்துடன் தேடுபவன்

**த. மலர்ச்செல்வன்**

தற்செயலாக 'அஃ' இதழை வாசித்துக் கொண்டிருந்தபோது படுகள இதழ்களை வாசிக்க வேண்டுமென்ற ஆவல் மேலெழுந்தது. அந்த இதழ்களைத் தேடி நான் அலையாத இடமேயில்லை. தேடாத நூலகங்களே இல்லை. விசாரிக்காத எழுத்தாளர்களேயில்லை இறுதியில் ஆவணக் காப்பாளர் குரும்புச்சிட்டி குலசிங்கத்திடம் இருப்பதாக அறிந்து அவர் வாசல் அடைந்தேன்.

வீடு முழுவதும் பழைய கடதாசியால் நிரம்பி யிருந்தன. எழுத்துக்கள் எங்கும் ஒட்டிக்கொண்டு ஊஞ்சலாடின. அவர் மர வேலைகள் நிறைந்த அறையைத் திறந்து என்னை அழைத்துக்கொண்டு போனார். அறை நகர்ந்து கொண்டே இருந்தது. இரு பகலும் ஒரு இரவும் நடந்திருப்போம். அறையின் முடிவில் சிலர் எந்தச் சலனமுமில்லாது ஏடுகளை ஆராய்ந்துகொண்டேயிருந்தனர். எங்களைக் கண்டு எதுவும் பேசவில்லை. அடிக்கடி கண்ணாடியைச் சரி செய்துகொண்டு படியெடுத்துக்கொண்டேயிருந்தனர்.

"யார் இவர்கள்?" என்று கேட்டேன். "சாம வேதத்தை ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கும் இசைஞானிகள்" என்றார் குலசிங்கம்.

"இளையராஜாவின் குழுவினரா?" என்றேன்

"இல்லை இல்லை, இவர்கள் மேதைகள்" என்றார்

திரும்பினேன் பின் பக்க மொட்டையிலிருந்து 'சரிகமபதநிச' ஆவியாகிக்கொண்டிருந்தன. சற்றுப் பின் மேதைகள் உறைநிலையாய் போனார்கள். குலசிங்கம் புத்தகங்கள் நிறைந்திருக்கும் ராக்கின் அடுக்குகளில் இதழ்களைத் தேடிக்கொண்டிருந்தார். கறையான் கூட்டம் கலைந்து படையெடுத்துப் போயின.

அவருக்கு அந்த இதழ்களின் மீது அக்கறையிருந் திருக்க வேண்டும். அல்லது அவரும் ஒரு பங்காளராய் இருந்திருக்க வேண்டும். "தம்பி இவ் இதழ் இலக்கியத்தில் மட்டுமல்ல வாழ்க்கை நடைமுறையிலும் மாற்றத்தைக் கொண்டுவந்த இதழ். ஆனால் இனத்துவ அரசியல் சார்ந்ததாகச் சிலரின் குற்றச்சாட்டுக்களைப் படுகள ஆசிரியர் எந்தத் தருணத்திலும் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தப் போலிக்குற்றச்சாட்டுக்கள் இதழ் மறைவுக்குக் காரணமாய் இருக்க வேண்டும்" என்றார்.

குலசிங்க அண்ணன் அங்கிருந்துதான் தூசி படிந்த படுகள இதழ்கள் மூன்றினை என் கையில் ஒப்படைத்தார். தாள்கள் பழுப்பேறி நொறு நொறு வெனவிருந்தன.

நான் முதல் இதழை வாசிக்கத் தொடங்கி இரு இரவுகள் கடந்தும் எழுத்துக்கள் ஓடிக் கொண்டிருந்தன.

□□□

இது இதழ் வடிவில் வரும் முதல் இதழ். ஏலவே எட்டுப் பக்கங்களைக் கொண்ட பத்திரிகை வடிவில் நான்கு வெளியீடுகளைக் கொண்டு வந்திருந்தேன். விலை ரூபா 1.00 அப்போ ஒரு பற்றீசின் விலை ரூபா 1.05 சதம் ஆனால் பத்திரிகை வாங்குவதைவிட ஒரு பற்றீசை வாங்கிச் சாப்பிடுவதிலே பெரும் பாலான மாணவர்கள் அக்கறை காட்டினார் கள். எழுத்தாளர்கள் கவிஞர்கள் கூட காசு கொடுத்து வாங்கிப் படிப்பதில் தயக்கம் காட்டினார்கள். இச்சூழலில்தான் 'படுகளம்' சஞ்சிகை வடிவில் முதல் இதழ் வெளி வருகின்றது.

பிணங்களைத் தொடர்ச்சியாய் புசித்துக் கொண்டிருக்க முடியாது. கதவுகள் திறக் காமல் எங்கள் வீடுகள் மட்டும் அழகானது எனக் கருத முடியாது. இலக்கிய ஆக்கங்கள் நாளுக்குநாள் மாறிக் கொண்டிருக்கின்றன. நாமும் மாறித்தான் ஆக வேண்டும். செத்த பாம்பை அடித்துக்கொண்டு நாங்கள்தான் வீரர்கள் என்று சொல்லிக்கொண்டிருப்பதில் என்ன பயனிருக்கு? கதவுகளைத் திறந்து கொண்டு வேறு உலகங்களைத் தரிசிக்க வேண்டும். புதிய காற்றுக்களை சுவாசியுங்கள்.

- ஆர்.

முதல் இதழ் ஆசிரியர் தலையங்கமே சாட்டையடி யாகவிருந்தது. உள்ளே ஒவ்வொரு பக்கங்களும் இப்படித்தான். நவீனச் சிந்தனைகளைத் தூண்டும் படைப்புகளைக் கொண்டிருந்தன. சிறுகதை கவிதைகள் வழமையாகவரும் பாணியிலிருந்து வித்தியாசமான கதை சொல்லும் பாங்கு



படிப்பகம்

www.padippakam.com



சிந்தனையைக் கிளறி உட்சரடுகளை உடைத்துச் செல்லும் கதை மாந்தராகவே காணப்பட்டன. கவிதைகளும் எதுகை மோனையிலிருந்து விலத்தி புதிய வடிவமாற்றத்துடன் சொல்லும் செய்தி அனுபவம் என்பன வேறு தளங்களில் பயணித்தன. கட்டுரைகள்கூட ஹாசியப்பாணியிலிருந்து சுயசரிதை லாவகத்திலிருந்து மாறி ஒரு இறுக்கத்தன்மையுடன் புதிய தலைவாசல்களை வெளிகொணர்வன வாகயிருந்தன.

மொத்தத்தில் படுகளம் முதலாவது இதழ் 50 பக்கங்களைக் கொண்ட காத்திரமான இதழாக வெளி வந்திருந்தமை அடுத்த இதழ்களைப் புரட்டுவதற்கு உற்சாகத்தை ஏற்படுத்தின எனக்கு.

'படுகளம்' இரண்டாவது இதழ் 52 பக்கத்தில் ஆவணித் திங்கள் தச வருடம் 1956இல் வெளி வந்திருக்கின்றது.

□□□

இரண்டாவது இதழ் ஊடாக மீண்டும் உங்களைச் சந்திப்பதில் துக்கம். ரூபா 1.00 கொடுத்து வாங்க முடியாத நமது இலக்கியச் சூழலில் ரூபா 3.00 சஞ்சிகையை அச்சடித்து வெளியிடுவது எவ்வளவு மடத்தனம் என எனக்குப் புரியாமல் இல்லை. என்ன செய்வேன் தாகம்தான் யாரும் இன்னும் குடித்ததாகத் தெரியவில்லை. சென்ற இதழ் வெளியீட்டிற்கு ரூபா 15,000.00 செலவாகின. கையில் வந்து சேர்ந்தது ரூபா 5,000.00 கை நட்டம் ரூபா 10,000.00 இம்முறையும் அதே அளவு தொகையே செலவாகியுள்ளது. ஆனால் என் மனைவியின் புலம்பலைத் தாங்க முடிய வில்லை.

1. வீடு முழுவதும் குப்பைக் காடுகளை உருவாக்கி வருவதாகவும்.

2. கவிதை, கதை, கட்டுரைகள் நடந்து திரிவதாகவும்.

3. தனது மகளின் சீதனக் காசினை அநியாய மாக அழிப்பதாகவும்.

4. இலக்கிய நண்பர்கள் என்று சொல்லி வரும் சும்மாக்களினால் சீனி பால்மா தொலைபேசி 'வில்'அதிகரிப்பதாகவும்.

தினமும் அர்ச்சனைகள் போட்டுக்கொண்டே இருக்கிறாள். அவள் சொல்வதிலும் கூட நியாயமில்லாமலில்லை. என்ன செய்ய? என் இலக்கிய நண்பர்களே! உங்களுடைய கைகளையும் கண்களையும் திறக்கும் போதுதான் 'படுகளத்தின்' பயணம் படுகுழி யிலிருந்து மீளும்.

□□□

இவ் இதழின் பல பக்கங்கள் தொலைந் திருந்தாலும் மீ-கதையும் அது பற்றிய விமர்சனமும் கறையானிலிருந்து காப்பாற்றப்பட்டன.

**மீ-கதை**

அவனுக்கு அது புதுக்களம் யுத்தத்திற்காகத் தயார் ஆனவனுமல்ல. எந்த யுத்தகளத்திலும் இறங்கியவனு மல்ல. அனுபவம் என்பது எவ்வளவு முக்கியமானது. இதுவரையும் அதைச் சீரியஸாக எடுத்துக்கொள்ளவு மில்லை. இன்றுதான் எல்லாம் அவனுக்குப் புரிகிறது. வெட்கம் தலைக்கேறி மிகுந்த கூச்சத்துடன் படுக்கையின் ஓரத்தில் சுருண்டு கிடந்தான். குறுகுறுத்த மையம் தோற்றுக் களைத்து ஒடுங்கி விட்டது. முதுகால் வழியும் வியர்வை சர்வாங்கம் எங்கும் வெட்கிப்போனது. மெல்லத் தலையை உயர்த்தி அவளைப் பார்த்தான் பிருட்டம் விம்மி நின்றது. தொடைவரை தெரிந்த ஆடையை இருகையாலும் நீவி அவனுக்கு முதுகைக் காட்டி கெழிந்தாள். முதுகில் வழியும் அவளது வியர்வையைத் துடைத்தபடியே எதையோ முதுகில் எழுதிக் கொண்டிருந்தான். அவள் நாணத்தை உடல் எங்கும் பரப்பிச் சுகித்தலைக் கிளறினான். அவனுக்குக் குறி எழவில்லை. அவன் அவளைப் புரட்டி



படிப்பகம்

www.padippakam.com

முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். அவளின் கண்கள் சிவந்திருந்தன. மென் விரலால் அவளின் மார்பில் அழுத்தி இதழ்களினால் தடவியபடி எதையோ தனக்குள் முணுமுணுத்துக்கொண்டிருந்தாள். ஆற்றாமையின் கொடுமை அவனுக்குப் புரியவில்லை. என்ன செய்வான்? வேள்விக்கு அவன் தயாரில்லை. பலவீனத்தை நினைத்து ஒரு கணம் வெட்கித்தான். 5நிமிடந்தான் சும்மாயில்லை சாமி தூரத்து ஆற்றுப்படுக்கையிலிருந்து எழுகின்ற செம்படவனின் துயர் நிறைந்த பாடல்

அவனை உசுப்பி எழுப்பியது. இரு கையாலும் சோம்பல் முறித்து ஆழ்ந்த பெருமூச்சிட்டபடியே தனக்குத்தானே சொல்லிக்கொண்டான் போதும் அவள் எழுந்து விளக்கைத் தூண்டினாள். அவன் மங்கல் வெளிச்சத்தில் அவளைப் பார்த்தபடி சொன்னான் 'முட்டுவேன் கொல் தாக்குவேன் கொல்'- ஔவையாரின் துயரத்தின் ஆற்றாமை இன்றுதான் புரிந்தது. உனக்கு என்னால் உச்சத்தைத் தரமுடிய வில்லை' ............. அவள் கோணி வெட்கித்துத் தலையைக் குனிந்தாள். அவன் தயக்கத்துடன் சொன்னான் 'இனி ஒருபோதும் இங்கே திரும்பி வரமாட்டேன். இதைச் சொல்லும்போது அவனது அந்தரங்கம் நடுங்குவது போலிருந்தது. நடந்தான் மன்மதலீலை முடிந்து போனபிறகு ஓர் இரவில் அவன் வீடு வந்து சேர்ந்திருந்தான். அவன் நினைப்பெல்லாம் களத்தில் தோற்றுப்போன நாழிகைகளாக ஓடிக்கொண்டிருந்தது.

□□□

அன்பின் படுகள ஆசிரியருக்குத் தங்களது படுகள இதழ் காத்திரமான செயற்பாட்டை மேற்கிளப்பினாலும் தங்களது இரண்டாவது இதழின் மீ-கதை சமூகப் பண்பாட்டைச் சிதைக்கும் கதையாகவே பதிவாகியுள்ளது. இப்படியான 'செக்ஸ்'கதைகளினூடாகச் சிறுகதையில் என்ன மாற்றத்தைக் கொண்டு வரப்போகிறீர்கள்? மனித ஊடாட்டம் என்பது சமூகப் பிறழ்வற்ற நல்ல விழுமியங்களைக் கொண்டு இயங்க வேண்டியது. மாறாக இளந்தலைமுறையினரைப் பிழையாக வழிநடாத்தும் மிகத் துயரமான செயல். இவ்வாறான கதைகளைப் பிரசுரித்து இனிமேலும் சமூக அசைவியக்கத்தை நாசப்படுத்தாதீர்கள். இதைவிட நீங்கள் மஞ்சள் பத்திரிகையை நடாத்தலாம்.

குப்தன்,
பேரூர்

□□□

'இலக்கியப் பிரதியின் சுதந்திரம் அதை யாரும் எப்படியும் வாசிக்க முடியும். பிரதியின் மீதான தன் கருத்தை எவ்விதமும் பதிவுசெய்யலாம் என்பதுதான். எழுதி முடிக்கப்பட்ட ஒரு பிரதி படைப்பாளியை விட வாசகனுக்கே அதிக சொந்தமாக நேர்கிறது. நவீன இலக்கிய வாதிகள் மட்டுமே நவீன இலக்கியத்தை வாசிக்க வேண்டும் என்பதோ தரமான இலக்கியவாதிகளே பிரதியின் மீது விமர்சனம் வைக்க இயலும் என்பதோ இலக்கிய ஆதிக்கங்களே' தங்களது மீ-கதை இவ்வாறு எதிர்கொள்ளப்படலாம். இருந்தும் மீ-கதை தரமான கதை. உடல் தாண்டுகை எல்லா ஜீவராசிகளுக்கும் தேவையானது. அதனுடைய கஸ்டங்கள் வேதனைகள் வெளிச்சத்திற்கு வருவதில் தவறில்லை. யதார்த்தம் என்பது மீ-கதையிலே வெளிவந்திருக்கிறது. கதையை வாசிக்கும் போதுதான் எனக்குள்ளே காந்தப் புலன்கள் உருவாகின. அற்புதம்.

சஞ்சீவி,
சாத்தான்குளம்

□□□

குப்தன் போன்றவர்கள் இன்னும் காத்திரமான இலக்கிய உலகில் பிரவேசிக்காததின் விளைவுதான் இந்த எதிர்க்குரல். உலக இலக்கியத்தில் பேசப்பட்ட பிரதிகளின் கோடுகளெல்லாம் 'செக்ஸ்' இயக்கமாகவே காணப்பட்டிருக்கின்றன. இவை பேசும் படைப்புக்களாகவும் வீரியமான கதை களாகவும் கணிக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்ச்சூழல் வேறு என்றாலும் எங்களுடைய படைப்புகளில் பொதுவாகப் பக்தி இலக்கியங்களில் 'செக்ஸ்' ஊடறுப்புக்கள் காணப்படவில்லையா? இலக்கியப் புரிதல் வரும்போது இவையெல்லாம் புஸ்வாணமாகிவிடும். நண்பரே! மஞ்சள் பத்திரிகை நடாத்த வேண்டிய அவசியம் இன்னும் ஏற்பட வில்லை. ஏற்பட்டால் தங்களுக்குத் தகவல் அனுப்புகிறேன்.

- ஆர்

எனக்கு இந்த இதழ்களின் தொடர்ச்சியைத் தேட வேண்டிய அவசியம் மேலும் வலுத்தது. குலசிங்கம் தந்த மூன்று இதழ்களிலும் படுகள இதழ் முகவரிகள் வேறுவேறாக இருந்தன.

முதல் இதழ் 1955 கார்த்திகை 18ந் திகதி மட்டூர் பித்தன் அச்சகத்தில் அச்சிடப்பட்டுள்ளது. இரண்டாவது இதழ் 1956 வைகாசி மாதம் மட்டுநகர் கண்மணி அச்சகத்தில் அச்சிடப்பட்டுள்ளது. மூன்றாவது இதழ் 1956 ஆவணி; 30ஆம் திகதி மட்டக்களப்பு பாடுமீன் அச்சகத்தில் அச்சிடப் பட்டுள்ளது. அதன் முகவரி கீழ்வை வீதி மட்டக்களப்பு எனப் பொறிக்கப்பட்டுள்ளது. ஏனைய




படிப்பகம்

www.padippakam.com

இரு இதழிலும் அச்சகத்தின் முகவரி இல்லாத காரணத்தினால் கீழ்வை வீதி மட்டக்களப்பில் உள்ள பாடுமீன் அச்சகத்தைத் தேடிப் பயணித்தேன்

பின்குறிப்பு: பாடுமீன் வீதியைப் பலரிடமும் கேட்டும் யாரும் சொல்வாரில்லை. இரண்டு கிழமையும் இரு நாட்களும் நாயாய் அலைந்து பலன் கிட்டாது போக, மாநகர ஆணையாளர் பொழுது வணங்கியைச் சந்தித்து "பாடுமீன் வீதி மட்டக்களப்பு நகரில் எங்கே இருக்கிறது"?. என வினாவினேன்". அவரும் அப்படி ஒன்றும் இங்கு இல்லையென அடித்துக்கூறினார். நான் படுகள இதழில் உள்ள முகவரியை அவரிடம் காண்பித்தபோது, தனது சோடாமூடிக் கண்ணாடியைச் சரிசெய்து மீண்டும் ஒரு தடவை படுகளத்தைக் கூர்ந்து கவனித்து "இது 55, 56 ஆண்டுகளில் அச்சிடப்பட்டது தானே. 1972 இற்குப் பிறகு நம் நாட்டில் எல்லாமே மாற்றமாய்ப் போயிற்று என்று சொல்லித் தனது மேசை பெல்லை அடித்து பியோனை அழைத்து, ரெக்கோட் கீப்பரை வரவழைத்தார். அவனுக்கும் அந்த வீதி பிடிபடவில்லை. தலையைச் சொறிந்தான் பின் தனது புழுதிப் படிந்த அறைகளில், ராக்கைகளைத் துலாவி ஒரு பெரிய புத்தகத்தைக் கையில் எடுத்தான் விறுவிறுவென்று ஆணையாளரின் அறைக்கு வந்தான். "சேர் இந்தப் புத்தகத்திலேதான் பழைய வீதிகளுக்குப் பெயர் சூட்டும் ஆவணம் உள்ளது". எனக்கூறி ஒவ்வொரு இதழாகத் தடாவி 1526 பெயர்களையும் முணுமுணுத்தான். பாடுமீன் வீதி அவன் நாவில் தவழவில்லை. சிங்கிபிஸ் ரோட், லேடிமனிங்ரைவ், கோல்சிமித் ரோட் போன்ற ஆங்கிலப் பெயர்கள் தமிழ்ப் பெயர்களுக்குப் பதிலாக இப்பெயர்கள் மாற்றமாகியிருக்கலாம். அவனின் கணிப்பின் படி பாடுமீன் வீதிதான் சிங்கிபிஸ் ரோட்டாக மாற்றலாகி யிருக்க வேண்டும் என முடிவுக்கு வந்தேன்.

பின்னர் நான் சிங்கிபிஸ் ரோட்டில் பாடுமீன் அச்சகத்தைத் தேடித் தேடுதல் வேட்டையைத் தொடங்கினேன். யாருக்கும் அப்படியொரு அச்சகம் இருந்ததாகவோ அதுபற்றி ஒரு துரும்பைக் கூட அறிந்திருக்கவில்லை. எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அதிஷ்டவசமாக இழவு வீட்டில் சந்தித்த சந்திர லிங்கத்தின் தகவலின்படி புரூப்ரீடர் புண்ணிய மூர்த்தியைச் சந்தித்தேன். அவருக்கு 88 வயதைத் தாண்டிவிட்டது. நினைவு தப்பிப் போகின்ற நிலை. இருந்தும் அவரிடம் ஓரளவு உரையாடக்கூடிய சூழல் இருந்தது. நான் அவரிடம் படுகள இதழ் தொடர்பாகக் கதையை விட்டேன். அவருக்கு முதலில் அது பிடிபடவில்லை. இரண்டு, மூன்று தடவை அது பற்றியே திரும்பத் திரும்பக் கதைத்தேன். ஒரு கட்டத்தில் மயக்கம் தெளிந்த ஓணானைப் போல் உன்னி எழுந்து "ஓம். ஓம்.... படுகள இதழ்..... நான் தான் அதற்கு புரூப்ரீடர், 30இற்கு மேற்பட்ட இதழ்கள் வெளிவந்திருக்கின்றன. என்னிடம் ஒரு இதழ்கூட இப்ப இல்ல" என்றார்.



பின் 10 நாளைக்கு முன்னர் கூட கம்பஸில் படிக்கிற ரெண்டு பொடியனுகள் 4, 5 இதழ்களைக் காட்டி மற்ற இதழ்கள் எங்க எடுக்கலாம் என என்னிடம் வந்தனர்.

எனக்குத் தெரிந்தவரை படுகளம் 30 இதழ் களுக்கும் 30 ஆசிரியர்கள் பணியாற்றிருக்கிறார்கள். முதல் ஆசிரியர் தீக்குச்சி திருச்செல்வம் அதுமட்டுந் தான் நினைப்பாகயிருக்கு

"இதுபற்றி வேற ஆரிட்டயும் விசாரிக்கலாமா?" எனக் கேட்டேன்.

"ஆரு தம்பி இப்ப இருக்கா? எல்லாரும் போயிற்றாங்க நானும் போறத்துக்குத் தயாராகத்தான் இருக்கன்" என்றார்.

எனக்கு ஏன் எல்லாம் இடிந்து போனது.

நான் இப்போ படுகள இதழ் 4, 5-த் தேடிப் பயணிக்கின்றேன்.

▣



படிப்பகம்

www.padippakam.com



சலனி

## கூழாங்கல்

வாழ்வு இன்றும்
அதன் சூட்சுமத்தை
காட்ட தொடங்குகிறது
அடர்ந்த மரங்களின்
கீழாய்ப் பரந்த
- மணல் போல -

அதன் புரியாமை
லாவகப்படாது எட்டி நிற்கும்
வேளைகளில்
வானைப் போல அதையும்
வேடிக்கை பார்க்கிறேன்
எல்லா நிகழ்வுகளின் பின்னரான
வெறுமை போல
மௌனித்து இருள் கலந்து
அச்சம் தருகிறது.

துண்டுகளான கணங்களை விட
வாழ்வின் நீட்சிக்காய்
தயாராதல் மிகப் பாரமாகிறது -

□□

.............

இந்த மாலையின் ஸ்பரிசங்கள்
மேற்கு மூலையில்
சூரியனை துரத்துகிறது
இருளின் வருகைக்கான
ஆராதனை வேகத்தில்
பகல் தன்னை
விடுவித்துக் கொள்கிறது
மனங்களின் அழுத்த வெளிகளில்
தங்கியும் கொள்கிறது.

இருள்
உறவுகளை இணைக்க எத்தனித்து
அதன் தோல்வியில்தான்
வெள்ளையை அள்ளிப்
பூசுகிறது
மெல்லிய இசைகளில்
மக்கள் தம்மை
கோமாளித்தனமாய் ஏமாற்றுகின்றனர்

நான்... ...நானாகவே
ஒவ்வொரு நாளையும்
எதிர் கொள்கிறேன் என்பதற்குமில்லை.

## இளைப்பு

என்னைப் பார்க்க
யாரும் வரப்போவதில்லை
இயலாமையில்
நெருங்கியிருக்கிறது
விடுதி வாசலும் கதவும்
நான் யாருக்கும்
தேவையற்றிருக்கிறேன்
இந்த தென்னை மரமும்
உசும்பாதிருக்கிறது.

எங்குமே
மௌனம் நிரம்பி வழிகிறது
மிக நுண்ணி பராயத்தில்
இடது கையில்
தரப்பட்ட என் வாழ்வு

இன்னும் யாருக்காகவேனும்
காத்திருக்கப் போவதில்லை
மணியடிக்கும் வரை என்
உணவும் எனை நெருங்காது.
வாயிளைப்புடன்
அலரி மலர் சருகுகளை
மிக நிதானமாய்
ஈர்க்குகளில் கோர்க்கிறேன்.

௸




www.padippakam.com

☐ கட்டுரை

# ஒரு மைய உலகமும் தேசிய இன விடுதலையும்

**எஸ்.வி. ராஜதுரை**



*(சென்ற ஆண்டு (2008) ஜூன் மாத வாக்கில், இலண்டனில் உள்ள நன்பரொருவர், மு.திருநாவுக்கரசு எழுதிய 'ஒற்றை மைய உலக அரங்கில் போரும் சமாதானமும்' என்னும் நூலின் கணிணி அச்சுப் பிரதியொன்றை எனக்கு அனுப்பிவைத்து அந்த நூலிற்கு அறிமுகவுரை எழுதித்தரும்படி கேட்டுக் கொண்டார். மு.திருநாவுக்கரசின் விருப்பத்தின்படியே அந்த வேண்டுகோளை விடுப்பதாகக் கூறினார். எனக்குக் கிடைத்த அந்த கணிணி அச்சுப் பிரதி, ஏற்கனவே இறுதி செய்யப்பட்டு, சென்னையிலுள்ள 'தமிழ் முழக்கம்' பதிப்பகத்தின் வெளியீடாக அச்சுக்குக் கொண்டு செல்லப்படவிருந்தது. அதில் பக்கத்துக்குப் பக்கம் அச்சுப் பிழைகளும் இலக்கணப் பிழைகளும் இருந்ததால், உடனடியாக அறிமுகவுரை எழுதுவதைத் தவிர்த்து, பிழை நீக்கம் செய்வதற்காக மூன்று மெய்ப்புகளைச் சரிபார்த்து, 'தமிழ் முழக்கம்' பதிப்பக மேலாளர் கண்ணன் என்பாருக்கு அனுப்பிக் கொண்டிருந்தேன். எனது உடல்நலக் குறைவைப் பொருட்படுத்தாமல் ஏறத்தாழ இரு மாத காலம் இந்தப் பணியில் ஈடுபட்டேன். மூன்றாவது மெய்ப்பைத் திருத்தி முடிக்கையில்தான், எனது அறிமுகவுரையையும் எழுதி அனுப்பினேன். இலண்டன் நண்பருக்கும் எனது அறிமுகவுரையின் நகலை அனுப்பினேன். மு.திருநாவுக்கரசின் நூலை அச்சிட்டு வெளியிடும் பொறுப்பு முழுவதும் 'தமிழ் முழக்கம்' கண்ணனுக்கே தரப்பட்டிருந்ததால், அவருக்கு நான் 13.8.2008 அன்று எழுதிய கடிதத்தில் கீழ்க்காணும் கருத்தைத் தெரிவித்திருந்தேன்: "நான் அறிமுகவுரையாக எழுதியுள்ள 'ஒருமைய உலகமும் தேசிய இன விடுதலையும்' என்னும் கட்டுரை நூலாசிரியரின் கருத்துகள் சிலவற்றை மறுதலிக்கின்றது. எனவே, வாசகர்கள், எடுத்த எடுப்பிலேயே இந்த நூல் குறித்த திறனாய்வைப் படித்த பிறகு நூலுக்குள் நுழைவதற்குப் பதிலாக, எனது அறிமுகவுரையை 'எதிர்வினையாக' நூலின் கடைசியில் சேர்ப்பதுதான் சரியாக இருக்கும்."*

*மு.திருநாவுக்கரசின் கருத்துகள் சிலவற்றை மென்மையாக நான் மறுதலித்துள்ளதை மேற்சொன்ன இலண்டன் நண்பருக்கு -அவர் இந்த நூல் குறித்து என்னிடம் தொலைபேசியில் பேசிய போதெல்லாம் - ஒன்றுக்கும் மேலான முறை கூறியிருக்கிறேன்.*

*ஆனால், மூன்றாவது மெய்ப்பைச் சரிபார்த்து அனுப்பிய பிறகு ஏறத்தாழ இரண்டு மாதங்களுக்கு அந்த நூல் குறித்த தகவல் ஏதும் வரவில்லை. பின்னர்,மேற்சொன்ன இலண்டன் நண்பர் என்னிடம் தொலைபேசித் தொடர்பு கொண்டு, எனது அறிமுகவுரை இல்லாமலேயே அந்த நூல் அச்சிடப்பட்டு 'தமிழியல்-காலச்சுவடு வெளியீடாக' வந்துள்ளதாகவும் எனது அறிமுகவுரையும் மு.திருநாவுக்கரசின் நூலுக்கு வேறு சிலர் எழுதிய எதிர்வினைகளும் இன்னொரு தனி நூலாக வெளியிடப்படவுள்ளதாகவும் கூறினார். 'தமிழ் முழக்கம்' பதிப்பக உரிமையாளர் சாகுல், தமிழ்த் தேசிய உணர்வாளர்; விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் எனக் குற்றம் சாட்டப்பட்டு ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் 'பொட்டா' சட்டத்தின் கீழ் பல மாதங்கள் சிறையிலடைக்கப்பட்டவர்; எனவே, மு.திருநாவுக்கரசின் நூலை அவரது பதிப்பகம் வெளியிட்டால், அது விடுதலைப் புலிகளுக்கான பிரச்சார நூல் என்று கருதப்பட்டு, பல தரப்பினரை எட்டாமல் போய் விடும் எனக் கருதி அதை 'தமிழியல்-காலச்சுவடு' வெளியீடாகக் கொண்டு வந்திருக்கிறார்கள் போலும் எனக் கருதினேன் (இது எனது ஊகமே தவிர, அதற்கான உண்மையான காரணங்கள் எனக்குச் சொல்லப்படவில்லை.) மேலும், என்னைப் பொறுத்தவரை, அதை யார் வெளியிடுகிறார்கள் என்பது பிரச்சனையாகவே படவில்லை. ஆனால், எனது அறிமுகவுரையையும் பிற எதிர்வினைகளையும் உள்ளடக்கிய நூல் ஏதும் இதுவரை வெளிவரவில்லை.*

*எனக்கு அப்போது நேர்மையீனமாகப்பட்ட ஒரே விடயம், நான் பிழை திருத்தி செம்மைப்படுத்தித் தந்த கையெழுத்துப் (கணிணி அச்சுப்) பிரதியில் சேர்க்கப்படாமலிருந்ததும், மாவோவுக்கும் டெங் ஸியா பிங்குக்கும் அடிப்படையான வேறுபாடு ஏதும் இல்லை எனக் கூறுவதுமான ஒரு அபத்தமான, நச்சுத்தனமான "மாஓ வழித் தோன்றிய டெங் சியாவோயிங் 1904-1997" என்ற கட்டுரை 'தமிழியல்-காலச்சுவடு வெளியீடா'க வந்துள்ள நூலில் சேர்க்கப்பட்டிருந்ததாகும். அக்கட்டுரை எனக்கு அனுப்பப்பட்ட கையெழுத்துப் பிரதியில் இருந்திருக்குமேயானால், நான் அதை உடனடியாகத் திருப்பி அனுப்பி, அறிமுகவுரை எழுத மறுத்திருப்பேன். இன்று சிங்களருக்கும் தமிழ் மக்களுக்குமுள்ள இனப்பூசலைச் சாக்கிட்டு, பண்டைக் காலத்திலிருந்தே சிங்களர்கள் தமிழ் மக்களின் பகைவர்களாகவே இருந்து வந்துள்ளனர் எனக் கூறும் தமிழ் தேசியவாதச்*



படிப்பகம்

www.padippakam.com

*சொல்லாடலின் நீட்சியாக, இன்றைய இலங்கை அரசின் மிக நெருக்கமான நட்பு நாடான சீனாவின் தலைவர்கள் அனைவருமே (மாவோ உட்பட) ஈழத் தமிழர்களின் விரோதிகள் என்னும் வாதத்தை மறைமுகமாக முன்வைப்பதற்காகவே இந்தக் கட்டுரை எனக்குத் தெரியாமல் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.*

*எனது அறிமுகவுரை 22.07.2008 அன்று எழுதி முடிக்கப்பட்டது. அதன் பிறகு, அதாவது, அமெரிக்க-ஐரோப்பிய யூனியனின் செல்வாக்கின் கீழுள்ள ஜார்ஜியாவிலிருந்து 2008இல் காகஸஸ் பகுதியிலுள்ள தென் ஒஸ்ஸெட்டியா, அப்காஸியா ஆகிய பகுதிகள் ரஷிய இராணுவத்தின் உதவியுடன் 'விடுதலை' பெற்றமை, ரஷியா இராணுவத்துக்கும் ஜார்ஜிய இராணுவத்துக்குமான சண்டையில் ஜார்ஜிய இராணுவம் தோற்கடிக்கப்பட்டமை ஆகியன, 'ஒற்றை மைய உலகம்' தகர்ந்து வருவதற்கான மேலும் வலுவான சான்றுகளைத் தந்தன. அவற்றையும் கருத்தில் கொண்டு எனது அறிமுகவுரையில் சில மாற்றங்களை ஏற்படுத்தியிருப்பேன். ஆனால், எனது அறிமுகவுரை முற்றிலும் புறக்கணிக்கப்பட்டிருந்ததால், அதில் மாற்றங்கள் செய்வதற்கான வாய்ப்பு ஏதும் இருக்கவில்லை.*

*மேற்சொன்ன இலண்டன் நண்பர் ஒன்றரை மாதத்திற்கு முன்பு மின்னஞ்சல் மூலம் என்னுடன் தொடர்பு கொண்டு, தான் சில புத்தகங்களை எனக்கு அனுப்ப ஏற்பாடு செய்துள்ளதாகவும், எனது வீட்டு முகவரியைத் தந்து உதவுமாறும் கேட்டிருந்தார். என்ன புத்தகங்களை எனக்கு அனுப்பப் போகிறார் என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால், எனது வீட்டு முகவரியை அனுப்பி வைத்தேன். ஒரு கிழமைக்குப் பிறகு 'காலச் சுவடு' அலுவலகத்திலிருந்து மு.திருநாவுக்கரசின் நூலின் இரண்டாவது பதிப்பின் இரண்டு பிரதிகள் வந்து சேர்ந்தன. இரண்டாவது பதிப்புக்கு 'தமிழியல்' சார்பில் எழுதப்பட்டுள்ள பதிப்புரையில் நண்பர் கி.பி.அரவிந்தன் கீழ்க்கண்டவற்றைக் கூறியிருந்தார்: "ஆரம்பத்தில் கையெழுத்துப் பிரதியினைப் பார்வையிட்டதோடு, செழுமைப்படுத்தியும் தந்தவர் எம் மதிப்புக்குரிய எஸ்.வி.ராஜதுரை (SVR) அவர்கள். அதுபற்றிய குறிப்பினை முதல் பதிப்பில் குறிப்பிடத் தவறிவிட்டோம்.அதற்காக வருந்துகிறோம்". ஆனால், நான் எழுதிய அறிமுகவுரை பற்றிய எந்தக் குறிப்பும் அந்தப் பதிப்புரையில் இல்லை. நான் இதை ஒரு பொருட்டாகக் கருதவில்லை. ஆயினும், மேற்சொன்ன குறிப்பும், எனது அறிமுகவுரை இல்லாமலேயே இந்த நூல் வெளிவந்திருப்பதும், மு.திருநாவுக்கரசின் நூலிலுள்ள கருத்துகள் அனைத்தும் எனக்கும் உடன்பாடானவை என்னும் அபிப்பிராயத்தை ஏற்படுத்தக் கூடும். ஆகவே, நான் எழுதிய அறிமுகவுரையை வெளிச்சத்துக்குக் கொண்டு வரும் வாய்ப்பை நான் எதிர்பார்ப்பதில் தவறில்லையே! புலம் பெயர்ந்து வாழும் தமிழ் அறிவுஜீவிகள், எழுத்தாளர்களிடையே நடக்கும் கருத்துப் போராட்டங்கள் எதிலும் என்னை சம்பந்தப்படுத்திக் கொள்ளும் அளவுக்கு எனக்கு அறிவோ, ஆற்றலோ இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன் - எஸ்.வி.ராஜதுரை, 11.08.2009)*

மு. திருநாவுக்கரசு (உதயன்), ஜெயராஜ் (விஜயன்) ஆகியோர் இணைந்து எழுதிய 'இந்து மகா சமுத்திரமும் இலங்கை இனப் பிரச்சனையும்' என்னும் நூல் வெளிவந்து இருபத்தியோரு ஆண்டுகளாகின்றன. இலங்கை இனப் பிரச்சனைக்குத் 'தீர்வு காண்பதற்கான' 'இந்திய-இலங்கை ஒப்பந்தம்' கையெழுத்தான சில நாட்களுக்குள்ளேயே, 'இந்திய அமைதி காக்கும் படை' அங்கு அனுப்பப்பட்டிருந்த சூழலில் வெளியான அந்த நூல், சின்னஞ் சிறு தீவான இலங்கையில் உள்ள 35 இலட்சம் ஈழத் தமிழ் மக்களின் தேசிய சுய நிர்ணய உரிமைக்கான போராட்டம் இந்து மகா சமுத்திரத்தினதும் தென்னாசியப் பிராந்தியத்தினதும் புவிசார் அரசியலுடன் பின்னிப் பிணைந்துள்ளதுடன், சர்வதேச அரசியல் பரிமாணத்தைக் கொண்டிருந்ததையும் விரிவாக விளக்கியது. அத்தகைய அரசியல் ஆய்வு நூல்கள் மிக அரிதாகவே தமிழ் பேசும் உலகில் எழுதப்பட்டு வந்ததால், அதனுடைய இரண்டாம் பதிப்பு உடனடியாகத் தமிழ்நாட்டிலும் கொண்டு வரப்பட்டது. அதனை வெளியிட்டவர் அன்று தி.மு.க.வின் தூண்களிலொருவராகக் கருதப்பட்டு வந்தவரும் பேச்சாற்றல் மிக்கவருமான வைகோ.

அவரது அரசியல் வாழ்க்கையில் மட்டுமல்லாது, உலக அரசியல் முழுவதிலுமே கடந்த 21 ஆண்டுகளில் மாபெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இந்தக் காலகட்டத்தில் உலக வரைபடமே பெரும் மாறுதலுக்குள்ளாகிவிட்டது. முதலாம், இரண்டாம் உலகப் போர்களின் காரணமாக, உலகின் பெரும் சாம்ராச்சியங்களாக இருந்த ஒட்டோமோன் பேரரசு, ஆஸ்திரோ-ஹங்கேரிய பேரரசு ஆகிய இரண்டும் தகர்ந்தன. மற்றொரு பேரரசான ஜார் ரஷ்யா மட்டுமே, தனது நிலப் பகுதிகள் சிலவற்றை விட்டுக் கொடுத்தும் வேறு சிலவற்றைச் சேர்த்துக் கொண்டும் 1917ஆம் ஆண்டு மகத்தான ரஷியப் புரட்சியின் விளைவாக உருவான சோவியத் யூனியன் என்னும் பெரும் அமைப்பில் தன்னைத் தக்க வைத்துக் கொண்டது. 'சூரியன் அஸ்தமிக்காத சாம்ராச்சியமான' பிரிட்டிஷ் பேரரசும், இரண்டாம் உலகப் போரில் அது சந்தித்த அரசியல், இராணுவ, பொருளாதார இழப்புகள் காரணமாக உடைந்தது.

1917ஆம் ஆண்டு ரஷியப் புரட்சி, சீன, இந்தோ-சீன நாடுகளிலும், கியூபாவிலும் நடந்த சோசலிசப் புரட்சிகளுக்கும் பின்னர் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் சிலவற்றில் நடந்த தேசிய விடுதலைப்





படிப்பகம்

' என்பதை விளக்குவதற்கு லெனின்
எழுதியதற்கு இணையாக.
படையெடுப்புக்கு
கேரியில்

கருதினார் ('சீரழி
உரிச்சொல்லாகப்
யூனியனில் இருந்
வரையறையை நி
முன்வைத்தார்.
கிய மாக்ஸ்
சோ

போராட்டங்களுக்கும்கூட முக்கிய காரணியாக அமைந்தது. அதே வேளை, பிரிட்டனும் பிரான்சும் தத்தம் காலனி நாடுகளுக்கு அரசியல் சுதந்திரம் வழங்குதல், காலனிய நீக்கம் என்பனவற்றை மேற்கொள்வதற்கு, இரண்டாம் உலகப் போருக்குப் பின், இராணுவ, பொருளாதார பலத்தில் மிகப் பெரும் சக்தியாக எழுந்த அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அறிவுரையும் காரணமாகும். கிழக்கைரோப்பிய நாடுகளைப் பொருத்தவரை, நாஜி ஆக்கிரமிப்புக் குட்பட்டிருந்த எல்லா நாடுகளிலும் கம்யூனிஸ்ட் டுகள் நாஜி எதிர்ப்பு இயக்கத்தில் குறிப்பிடத்தக்க பாத்திரம் வகித்திருந்த போதிலும், தங்களது சொந்த முயற்சியின் கீழும் தலைமையின் கீழும் புரட்சிகர அரசுகளை உருவாக்கியவர்கள் யூகோஸ்லேவிய, அல்பேனியக் கம்யூனிஸ்டுகள் மட்டுமே. நாஜி ஆக்கிரமிப்பை முறியடித்து பெர்லினை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்த சோவியத் செஞ்சேனையின் உதவியுடனேயே செக்கோஸ்லோவேகியா, பல்கேரியா, ருமேனியா, போலந்து, ஹங்கேரி ஆகிய நாடுகளிலும் கிழக்கு ஜெர்மனியிலும் 'கம்யூனிஸ்ட் அரசாங்கங்கள்' நிறுவப்பட்டன.

இரண்டு பெரும் நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகளிடையே ஏற் கருத்துநிலை முரண்பாடுகள் உலக பொதுவுடைமை இயக்கத்திலும் தாக் ஏற்படுத்தி, பல்வேறு கம்யூனிஸ்ட் கட்சிகளில் பிளவுகளும் உடைவுகளும் ஏற்படுத்தின. இந்த முரண்பாடுகள், ஆசிய, ஆப்பிரிக்கக் கண்டங்களில் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக நடத்தப்பட்ட விடுதலைப் போராட்டங்களிலும் பிரதிபலித்தன.

இரண்டாம் உலகப் போர் முடிந்த பிறகு, உலகை மறு சீரமைப்பதில் அமெரிக்க முகாமுக்கும் சோவியத் முகாமுக்கும் வெவ்வேறு குறிக்கோள்களும் வெவ்வேறு நலன்களும் இருந்தன. இதன் காரணமாக இரு முகாம்களுக்கிடையே கெடுபிடிப் போர் (Cold War) 1945 முதல் 1990 வரை நீடித்தது. (1950-1980களில் தமிழ் வாசகர்களுக்கு சர்வதேச அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றை மிக எளிமையாக அறிமுகப்படுத்திவந்த ஏ.என்.சிவராமன் போன்ற வர்கள் 'Cold War' என்பதற்கு 'கெடுபிடிப் போர்' என்னும் பதத்தைப் பயன்படுத்தினர். அந்த நிகழ்ச்சிப் போக்கின் பல்வேறு பரிமாணங்களை உள்ளடக்கக் கூடிய பதம் இது. 'பனிப் போர்' என்பது 'Cold War' என்பதன் நேரடி (literal) மொழிபெயர்ப்பு. தற்சமயம் ...ன்வெளிப் போர்' என்னும் பொருளைத் தருகின்ற ...War' என்பது 'நட்சத்திரப் போர்' என்று ...க்கம் செய்யப்படுகிறது. எனவே, மூலச் ...ல் பொதிந்துள்ள உட்பொருளைப் புரிந்து ...மிழ்ச் சொல்லாக்கங்கள் செய்யப்பட ...பது எனது பணிவான கருத்து.) இது ...ரும் ஒன்றுடன் ஒன்று இராணுவ ...ண்ட போர் அல்ல. இந்தப் போர் ...களில் நடந்தது: 1. தத்தம் முகாம் ...காமின் செல்வாக்கிலிருந்தும் ... பாதுகாக்க இராணுவக் ...தல்; 2. தத்தம் முகாம் ...ரத்தை மேம்படுத்த ... அல்லது திட்டங்கள் ...ழும் மற்றொன்றுக்கு ...சாரம் (ideological propaga... வேலைகளை

மேற்கொள்ளுதல்; 5. ஆயுத உற்பத்திப் போட்டா போட்டிகளில் ஈடுபடுதல்; 6. தொழிலுற்பத்தி வளர்ச்சிகளை ஊக்குவித்தல்; 7. தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல்; 8. விண்வெளி ஆராய்ச்சியை மேற்கொள்ளுதல்; 9. உலகில் தத்தம் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்வதற்கான முயற்சியில் நேரடியான போரில் ஈடுபடுவதைத் தவிர்த்தல்.

சோவியத் யூனியனினதும் கம்யூனிசத்தினதும் செல்வாக்கு உலகில் பரவுவதைத் தவிர்ப்பதற்காகவும் அவற்றை முடக்கி வைப்பதற்காகவும், இரண்டாம் உலகப் போரால் பெரும் பொருளாதார, இராணுவ அழிவுகளைச் சந்தித்த மேற்கு ஐரோப்பிய நாடுகளினதும் ஜப்பானினதும் பொருளாதாரத்தை வளர்ப்பதற்காகவும், அங்குள்ள மக்கள் கம்யூனிசத் தால் ஈர்க்கப்படாமல் இருப்பதற்காகவும் அமெரிக்கா மார்ஷல் திட்டம் போன்ற பொருளாதாரத் திட்டங் களை உருவாக்கியது. மேலும், அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பான் ஆகிய நாடுகளில், வேலை யில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் சம்பந்தப்பட்ட அரசுகள் தங்களை 'மக்கள் நலன் பேண் அரசுகளாக' (Welfare States) ஆக்கிக் கொள்ள வேண்டியிருந்தது. அதே சமயம் 'நேட்டோ' போன்ற இராணுவக் கூட்டணிகள் உருவாக்கப்பட்டன. மற்றொரு புறம், சோவியத் யூனியனின் தலைமையின் கீழ் 'வார்ஸா ஒப்பந்த (இராணுவக்) கூட்டணி' ஒன்றும் உருவாயிற்று. சோவியத் யூனியன், கிழக்கைரோப்பிய சோசலிச நாடுகள் (பல்கேரியா, ஹங்கேரி, போலந்து, ருமேனியா, செக்கோஸ்லோ வேகியா, கிழக்கு ஜெர்மனி) கியூபா, வியத்னாம், மங்கோலியா ஆகியவற்றை உள்ளடக்கிய 'கோமிகோன்' (COMECON) என்னும் பொருளாதார அணியும் உருவாக்கப்பட்டது (யூகோஸ்லேவியா இதில் சேரவில்லை; அல்பேனியா முதலில் சேர்... பின்னர் அதில் பங்கேற்கவில்லை... அதிகாரபூர்வமாக...விலிருந்து...

உலகம், இ...
அமெரிக்...

...குறைபா
...து சோசலி
...களால் '(மு
...ந்தது என்
...ன்றைய ரஷிய
...றிஞரும் க
...கார்லிட்ஸ்கியுப்
வர்க்கத் தன்மை
வெளியிட்டுள்ள

மேற்சொன்ன
தமிழ் பேசும்
அவை மு.திரு
முற்படும் வி
பட்டவை. 'இந்

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

நூலில், அவர் ஈழத்
போராட்ட இயக்கம்,
நிலைமைகளுடனும்
இருக்கிறது என்பதை
(ஈழத் தமிழர்கள்
சிய இனங்களின்
ழலுடன் தொடர்பு
என்றும், அப்படிப்
ந்தப் போராட்டத்
னிக்கும் என்றும்
பார்ப்பதற்கான
வேண்டும் என்றும்

க முதலாளியம்,
டுமே பொருளாதார
ஆனால், இந்த
ரியம் மீள்வதற்கும்,
டியாதபடி தகர்ந்து
என்பதை விளக்க
தா, கெட்டதோ -
க இருந்து வந்த
பிறகு நாம் வாழும்
றியதைக் கருத்தில்
இன விடுதலைப்
த்தியையும் தந்திர
என்னும் முடிவுக்கு
ன்று நாம் காணும்
னது என்பதற்கான
தார ஆய்வுகளை

வாக்குதல், அதில்
வனாக இருத்தல்
வேற்றுவதற்கான
கொள்கையின்
உலகப் போர்
ச் சுட்டிக்காட்டும்
க் காலகட்டத்தில்
ற்காக அமெரிக்கா
யல், பொருளாதார
ன் தகர்வில் இறுதி
உலகமயமாக்கல்'
ாளவாத சந்தைப்
ன் வெளியுறவுக்
நடவடிக்கைகள்
தொடர்புடையன
குகிறார். சோவியத்
காலகட்டத்தை
ல கட்டம் (அவரது
ார் காலகட்டம்')
கு பிந்திய கால
ருக்குப் பிந்திய
ட்டம் ('பின் பின்

பனிபோர் காலகட்டம்') என்றும் அழைக்கிறார். ஆங்கிலத்தில் post-coldwar என்பது கெடுபிடிப் போர் அல்லது 'பனிப் போர்' என்பதற்குப் பிந்திய என்னும் பொருள் தரும். அத்தகைய சுருக்கமான வார்த்தைப் பிரயோகம் தமிழில் சாத்தியப்படாததாலோ என்னவோ post என்பது தமிழ் பேசும் உலகிலுள்ள சிந்தனையாளர்களாலும் எழுத்தாளர்களாலும் 'பின்' அல்லது 'பின்னை' என மொழிபெயர்க்கப்பட்டுப் புழக்கத்திற்கு வந்துவிட்டது (எ.கா: பின்கட்டமைப்பியல், பின்(னை) நவீனத்துவம்.) எனினும் அவர் இவ்வாறு காலவரிசைப்படுத்துவது தன்னிச்சையாக அல்ல, உலக வரலாற்றில் மிகப் பெரும் திருப்பங்களை ஏற்படுத்திய நிகழ்வுகளின் அடிப்படையில்தான். இங்கு, வரலாற்றில் தனிநபர்கள் வகிக்கும் பாத்திரம் ஆசிரியரால் மிகச் செறிவாக விளக்கப்படுகிறது.

ஆனால், மூன்றாம் உலக நாடுகள், நவீனத்துவம், பின் நவீனத்துவம், பின் காலனித்துவம் ஆகிய எல்லா 'பின்'களையும் கொண்டவை என அவர் கூறுவது நிறைவாக இல்லை. மார்க்ஸியத் தத்துவத்தின் அடிப்படையில் வரலாறு, பொருளாதாரம், அரசியல் ஆகியவற்றை விளக்குவதாகக் கூறும் அவர், மூன்றாம் உலக நாடுகளை, அவற்றில் உள்ள முதன்மையான உற்பத்தி முறைகளின் அடிப்படையில்தான் வரையறை செய்ய வேண்டுமேயன்றி (எடுத்துக் காட்டாக, முதலாளிய, தரகு முதலாளிய, அரைக் காலனிய, அரை நிலப்பிரபுத்துவ அல்லது குந்தர் ஃப்ராங்க் போன்றவர்களின் மொழியில் சொல்வதானால், உலக முதலாளிய அமைப்பின் ஓரப் பகுதியாக உள்ள), நவீனத்துக்கு முந்திய, பின் - காலனித்துவ என்றல்ல.

அதே போல, கெடுபிடிப் போர்க் காலத்தில் நடந்த போர்களை 'மூன்றாம் உலக மகா யுத்தம்' என்றும் 2001க்குப் பிறகு இராக்கில் நடந்த போரை 'நான்காம் உலக மகா யுத்தம்' என்றும் வரையறை செய்வது பிழையானது. கெடுபிடிப் போர் கால கட்டத்தில் நடந்தவை, அதன் பிறகு 1995,1999இல் முன்னாள் யூகோஸ்லேவியப் பிரதேசங்களில் நடைபெற்றவை, 2001, 2003 ஆம் ஆண்டுகளில் நடந்த ஆஃப்கன், இராக் போர்கள் ஆகியன 'உலகப் போர்கள்' என்னும் திணைக்குள் கொண்டுவரப்பட முடியாதவை. ஈரான் மீது அமெரிக்கக் கூட்டணிப் படைகள் படையெடுக்குமேயானால், மூன்றாம் உலக மகா யுத்தம் வெடிப்பதற்கான சாத்தியப்பாடு உள்ளது. ஏனெனில் அது மத்தியக் கிழக்கு நாடுகள் அனைத்தையும் மட்டுமின்றி ரஷியா, சீனா, இந்தியா ஆகியவற்றையும் போருக்குள் இழுக்கும் சாத்தியப் பாட்டைக் கொண்டுள்ளது. எனினும், மத்தியக் கிழக்கு பிராந்தியத்தில் தொடங்கி கிழக்கைரோப்பா வரை அமெரிக்கா தனது கவனம் குவிப்பதற்கான புவிசார், இராணுவ, பொருளாதார நலன்கள் யாவை

www.padippakam.com

என்பதை மிகத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது இந்த நூல்.

ஆனால், சம்பந்தப்பட்ட நாடுகளைக் குறிக்க 'வெள்ளை', 'சிவப்பு', பச்சை', 'மஞ்சள்' என்னும் சொற்களைப் பிரயோகப்படுத்துவதை அவர் தவிர்த்திருக்கலாம். ஏனெனில், இவை குறிப்பிட்ட நாடுகளின் கருத்து நிலையை அல்லது 'நாகரிகத்தைப்' பிரதிநிதித்துவம் செய்யும் சொற்கள். ஏகாதி பத்தியத்தின் கருத்துநிலைப் பிரச்சாரகரான சாமுவேல் ஹன்டிங்க்டனின் 'நாகரிங்களுக்கிடையான மோதல்' என்னும் சொல்லாடலின் எதிரொலிப்பாக இவை அமைந்துவிடுகின்றன. ஓரிடத்தில் நூலாசிரியர் ஹன்டிங்க்டனை உடன்பாட்டுவகையாக மேற்கோள் காட்டுவதையும் குறிப்பிட வேண்டும். மத்தியக் கிழக்கு நாடுகளில் உள்ள மக்களில் பெரும்பான்மை யினரும் அங்குள்ள ஆட்சியாளர்களும் முஸ்லிம்கள் என்பதாலேயே 'இஸ்லாமிய பயங்கரவாதம்'. 'இஸ்லாமிய அடிப்படைவாதம்'. 'இஸ்லாம் உருவாக்கும் பீதி' என்னும் சொல்லாடல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. எண்ணெய் வளம் மிக்க இந்த நாடுகளும் அவற்றின் ஆட்சியாளர்களும் பௌத்தர்களாக இருப்பார்களேயானால், 'பௌத்த பயங்கரவாதம்', 'பௌத்த அடிப்படைவாதம்' போன்ற சொல்லாடல்கள் உருவாக்கப் பட்டிருக்கும். ஆனால், அப்போதும்கூட அமெரிக்கக் கூட்டணி களின் ஆக்கிரமிப்பு நடந்திருக்கும். சவூதி அரேபியா, பாகிஸ்தான் போன்ற 'பச்சை' நாடுகளின் ஆட்சியாளர்கள் ஏகாதிபத்தியத்திற்குத் துணை போவதையும் ஈரான் போன்ற வேறு சில 'பச்சை' நாடுகளின் ஆட்சியாளர்கள் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நிற்பதையும் சம்பந்தப்பட்டவர்களின் வர்க்க நலன்களின் அடிப்படையில்தான் விளக்க வேண்டும். அதே போலத்தான் 'வெள்ளை'க்கும் 'மஞ்சளுக்கும்' இடையில் நடக்கும் உறவுகள், மோதல்கள் ஆகியனவும். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கூட்டாளிகளில் 'மஞ்சள்' ஜப்பானும் ஒன்று என்பதை மறந்துவிடக் கூடாது. ஏகாதிபத்தியம், தனக்கு நன்மை பயக்குமென்றால் முஸ்லிம்களின், இஸ்லாத்தின் நண்பனாகத் தன்னைக் காட்டிக் கொள்ள ஒரு போதும் தயங்கியதில்லை. ஆஃப்கானிஸ்தானில் சோவியத் படைகள் நுழைவதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்பேயே அங்கிருந்த இடதுசாரி, தேசிய அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக, முஜாஹெதீன்களைத் திரட்டவும் அவர்களுக்கு இராணுவ, நிதி உதவி வழங்கவும் தொடங்கியது. அதே போல, அந்த முஜாஹெதீன் களுக்கு ஆஃப்கானிஸ்தானில் வேலையில்லாமல் போன பிறகு, அவர்களில் ஆயிரக்கணக்கானோரை போஸ்னியாவில் இறக்குமதி செய்தது. அரசியல் இஸ்லாமும் ஏகாதிபத்தியமும் ஒன்றுக்கொன்று துணைபுரிவதை மிகச் சிறப்பாக விளக்கியுள்ளார் சமிர் அமின் (*Political Isam in the Service of Imperialism, Monthly Review, New York, December 2007*). இக் கட்டுரையையும் மு.திருநாவுக்கரசுக்கு கருத்தில் கொள்ள வேண்டும்.

'பொது அபிப்பிராயத்தை உருவாக்குவதில்' அமெரிக்க-ஐரோப்பிய ஊடகங்களின் மிக வலுவான பாத்திரமும் முன் எப்போதையும் விட மிகத் தெளிவாக வெளிப்பட்டது யூகோஸ்லேவியாவின் உள்நாட்டுப் போர்களின் போதுதான். அந்த ஊடகங்களும், நேட்டோ நாட்டு அரசாங்கங்கள், ஐ.நா.அவை, மனித உரிமை என்.ஜி.ஓ.க்கள், பெண்ணுரிமை அமைப்புகள் ஆகியனவும் வெளியிட்ட ஒருதலைப்பட்சமான அறிக்கைகள், அரை உண்மைகள், முழுப் பொய்கள் ஆகியன வற்றை, உலகிலுள்ள இடதுசாரிகள், தாராளவாத சிந்தனையாளர்கள் ஆகியோரில் கணிசமானோர் உண்மையென ஏற்றுக் கொண்டனர். அதன் விளைவுதான் மு.திருநாவுக்கரசு மட்டுமல்ல, என்னைப் போன்றோரும் செர்பியர்களைப் பற்றியும் மிலோஸோவிச் பற்றியும் பரப்பப்பட்ட முற்றிலும் உண்மைக்கு மாறான அல்லது ஒரு தலைப்பட்சமான செய்திகளை ஏற்றுக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப் பட்டதாகும். யூகோஸ்லேவியாவின் உடைவில் உள்நாட்டுக் காரணிகள் என்ன பங்கு வகித்தனவோ அதைவிட அதிகமான பங்கை வெளிக்காரணிகள் வகித்ததை, அவற்றின் நலன்களுக்காகச் செய்யப்பட்ட பிரச்சாரங்களை, இராணுவ ஆக்கிரமிப்புகளைக் கருத்தில் கொள்ளத் தவறிவிட்டோம். அமெரிக்காவும் அதன் கூட்டணி நாடுகளும் சர்வதேச சட்டங்களை, ஐ.நா.பாதுகாப்புக் கவுன்சிலின் விதிகளைத் துச்சமாகக் கருதும் போக்கு, போஸ்னியாவிலும் கொஸோவோவிலும்தான் தொடங்கப்பட்டது. காலம் கடந்தேனும் நம்மைப் போன்றோர் உண்மைகளை அறிந்து கொள்வதற்குத் துணைபுரியும் மிக முக்கியமான ஆய்வுக் கட்டுரையொன்றை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்: *Edward S.Herman & David Peterson, The Dismantiling of Yugoslavia: A Study in inhumanitarian intervention-and a Western liberal-left intellectual and moral collapse, Monthly Review, New York, October 2007.* இங்கு நமக்கு வியப்புத் தரக்கூடிய ஒரு விடயம், ஊடகங்கள் மீது மு.திருநாவுக்கரசு வைத்திருக்கும் நம்பிக்கைதான். அதாவது, வியாபாரப் போட்டியின் நிமித்தமாவது, ஊடகங்கள் பொது மக்களுக்குப் பயன்படும்படியான சில உண்மைகளை எடுத்துச் சொல்லும் என்னும் வெகுளித்தனமான நம்பிக்கைதான்.

சோவியத் யூனியனை 'சமூக-ஏகாதிபத்தியம்' எனக் கருதிய சீனா, மாவோ காலத்திலேயே அமெரிக்கா வுடன் நட்பு பூணத் தொடங்கியதைச் சுட்டிக் காட்டும் நூலாசிரியர், அமெரிக்காவை 'காகிதப் புலி' என ஒரு காலத்தில் வர்ணித்த மாவோ, கடைசியில் அது 'நிஜப் புலி' என்று தெரிந்ததும் அதன் காலடியில் விழுந்துவிட்டதாகக் கூறுகிறார். அமெரிக்கப் பத்திரிகையாளரும் சீனாவின் நண்பருமான அன்னா





படிப்பகம்

www.padippakam.com

லூயி ஸ்ட்ராங் என்பாருக்கு 1946இல் கொடுத்த பேட்டியில்தான், மாவோ, அமெரிக்காவும் அதன் அணுகுண்டுகளும் காகிதப் புலிகளே என்று கூறியதாக நினைவு. அப்போதும்கூட அவர், இயங்கியல்ரீதியான விளக்கத்தையே கொடுத்தார். அதாவது, நீண்டகாலப் போக்கில் அவை காகிதப் புலிகள்தான் என்றாலும், குறுகிய கால அர்த்தத்தில் அவற்றின் பலத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்று கூறினார். அன்றிருந்த உலகச் சூழலில் மாவோவின் சீனா அமெரிக்காவுடன் கைகுலுக்கி நட்புக் கொண்டாடத் தொடங்கியதை இன்னும் ஆழமான பரிசீலனைக்கும் விமர்சனத்துக்கும் எடுத்துக் கொள்ள மு.திருநாவுக் கரசின் கருத்துகள் உதவக்கூடும். அதே போல, மாவோ காலத்திலேயே, சீனாவின் வெளிநாட்டுக் கொள்கையில் சில பிற்போக்குத்தனமான அம்சங்கள் இருந்தன என்பதையும் நாம் ஒப்புக் கொள்ளலாம். தேச நலன்கள் முதன்மைப்படுத்தப்பட்டு, சர்வதேச இலட்சியங்கள் புறக்கணிக்கப்பட்டதற்கான வரலாற்று, அரசியல் காரணங்களை ஆழமாகப் புரிந்து கொள்ள நூலாசிரியரின் கருத்துகள் பயன்படும். ஆயினும், டெங் ஸியாவோ பெங்கின் பொருளாதார சீர்திருத்தங்களுக்கும் பின்னர் சீனா நவ-தாராளவாத சந்தைப் பொருளாதாரத்தில் இறங்கி, ஒருமைய உலகில் அமெரிக்காவின் இளங்கூட்டாளியானதற்கும் மாவோ கதவைத் திறந்து வைத்தார் என்னும் அவரது விளக்கம் ஏற்கத்தக்கதல்ல. இத்தகைய மாற்றங்கள் சீனாவில் வந்துவிடக்கூடாது என்பதற்காகவே மாவோ இறுதி மூச்சு வரை போராடினார். மாவோ காலத்தில், அப்போது நிகழ்ந்த கடுமையான தவறுகள் ஒருபுறம் இருந்தாலும், சீனப் பொருளாதாரம் சோசலிச சமத்துவத்தை நிலை நாட்டுவதாகவே இருந்தது என்பதை நிறுவும் ஏராளமான ஆய்வு நூல்கள் வெளிவந்துள்ளன. (இவற்றில் மிகவும் குறிப்படத்தக்க நூல் ராபெர்ட் வெய்ல் (Robert Weil) எழுதியுள்ள *The Red Cat White Cat*. மாவோ காலத்தியப் பொருளா தாரத்தின் சோசலிசத் தன்மையை டெங் ஆட்சிக்கு வந்த பிறகு ஏற்பட்ட பொருளாதாரத்தின் தன்மை யுடன் ஒப்பிடும் மற்றொரு முக்கிய நூல் தமிழாக்கமும் செய்யப்பட்டுள்ளது (மார்ட்டின் லேண்ட்பர்க், பால் பெக்கர், சீனாவும் சோசலிசமும்: சந்தை சீர்திருத்தமும் வர்க்கப் போராட்டமும், விடியல் பதிப்பகம், கோவை, 2007) மாவோ-டெங் போராட்டம் என்பது தனிநபர் தலை கொய்யும், அதிகாரப் போட்டியல்ல.

சோசலிச நாடுகளில் கருத்துச் சுதந்திரம், ஜனநாயகம் ஆகியன அறவே இல்லாமலிருந்ததாகக் கருதுகிறார் நூலாசிரியர். இதுவும் நீண்ட ஆய்வுக்குட் படுத்த வேண்டிய பிரச்சனை என்பதில் சந்தேக மில்லை. ஆனால், அந்த நாடுகளில் கட்சித் தலைவர்கள் பழங்கால முடிமன்னர்கள், பிரபுக்கள் போல வாழ்க்கை நடத்தியதாகப் பொதுமைப்படுத்திச் சொல்வது சரிதானா என்பது கேள்விக்குரியது.

**முற்றிலும் புரட்சிகரமான சமுதாய மாற்றத்துக்கான கோட்பாடுகளையும் தத்துவங்களையும் மூல உத்திகளையும் வகுத்துத்தரும் ஆற்றலுள்ள மாபெரும் மனிதர்களை, முதலாளிய அரசாங்கங் களின் பிரதமர்களுடனோ, குடியரசுத் தலைவர்களுடனோ ஒப்பிடக்கூடாது.**

ஸ்டாலினின் எளிமை உலகறிந்த விடயம். அதே போல, பிரெஸ்னேவும்கூட, பன்னாட்டு நிறுவன மொன்றின் முதன்மை நிர்வாக அலுவலர் அனுபவிக்கும் ஆடம்பர, சொகுசு வாழ்க்கையை வாழ்ந்தவராகச் சொல்ல முடியாது. முதலாளிய நாடுகளில் காணப்படுகின்ற பூர்ஷ்வா ஜனநாயகம், கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றைக் காட்டிலும் வளமான, ஆழமான ஜனநாயகத்தை உருவாக்க சோசலிச நாடுகள் தவறிவிட்டன என்பதைக்கூட நாம் ஒப்புக் கொள்ளலாம். எனினும், முதலாளிய நாடுகளிலுள்ள ஜனநாயக நெறிகளை-குறிப்பாக, குறிப்பிட்ட காலத்துக்கு மேல் ஒருவர் பதவி வகிக்கக் கூடாது என்னும் நியதியை- சிறப்பிப்பது பிரச்சனையை எளிமைப்படுத்துவதாகும்.

உலகில் முதலாளிய உற்பத்தி முறை தோன்றி ஐந்து நூற்றாண்டுகளுக்கு மேலாகிவிட்டது. எனவே முதலாளித்துவ அரசுகள், தங்களை நிலை நிறுத்திக் கொள்ள பல்வேறு உபாயங்களை-பெயரளவிலான பூர்ஷ்வா ஜனநாயகத்திலிருந்து அப்பட்டமான பாசிசம் வரை -கையாள்வதற்கு வரலாறு ஏராளமான வாய்ப்புகளைக் கொடுத்துள்ளது. முதலாளிய அமைப்பை நிர்வகிப்பதற்கான அரசியல்வாதிகள், நிர்வாகிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள், கருத்துநிலைப் பிரச்சாரகர்கள், ஒடுக்குமுறை அதிகாரிகள் ஆகியோரை வளர்த்தெடுத்திருக்கிறது. ஆனால், சோசலிச நடைமுறை (Socialist Practice) என்பதன் தொடக்கமாக 1917ஆம் ஆண்டு ரஷியப் புரட்சியை எடுத்துக் கொள்வேமேயானால், அதற்கு இன்னும் நூறாண்டுகள் கூட நிறையவில்லை. முற்றிலும் புரட்சிகரமான சமுதாய மாற்றத்துக்கான கோட்பாடுகளையும் தத்துவங்களையும் மூல உத்திகளையும் வகுத்துத் தரும் ஆற்றலுள்ள மாபெரும் மனிதர்களை, முதலாளிய அரசாங்கங்களின் பிரதமர்களுடனோ, குடியரசுத் தலைவர்களுடனோ ஒப்பிடக் கூடாது. அவர்களிடமிருந்து நீண்ட காலப் பங்களிப்பை சோசலிசத்தை உருவாக்கும் அரசு எதிர்பார்க்கிறது. அவர்கள் சோசலிசத்திற்கு சேவையாற்றுகிறார்களா இல்லையா என்பதுதான் பிரச்சனையேயன்றி அவர்கள் எத்தனை ஆண்டுகள் பதவியில் இருக்கிறார்கள் என்பதல்ல. அதேவேளை, அவர்கள் அடுத்த தலைமுறைத் தலைவர்களை வளர்த்தெடுக்கவும், அப்படி வளர்த்தெடுப்பவர்கள் தம்மோடு சேர்ந்து பொறுப்புகளைப் பகிர்ந்து





படிப்பகம்

www.padippakam.com

கொள்வதையும் உறுதிசெய்ய வேண்டும். எனினும், சோசலிசம் நடைமுறைப்படுத்தப்பட்ட சமுதாயங்களில் தீர்க்கப்படாத பல பிரச்சனைகள் உள்ளன. எடுத்துக்காட்டாக, குறிப்பிட்ட நாட்டில் புரட்சிக்குத் தலைமை தாங்கிய கட்சி, புரட்சி இராணுவம், புரட்சியின் போதும் அது நிறைவேறிய பிறகும் உருவாக்கப்பட்ட நிர்வாக அமைப்புகள் ஆகியன ஒட்டுமொத்தமாக எதிர்ப்புரட்சித் தன்மையானவையாகிவிட்டால், அவற்றை எப்படி எதிர்கொள்வது? மக்களுக்கான வேறு அதிகார மையங்கள் என்ன? ஒரு கட்சி ஆட்சி முறையிலுள்ள சமுதாயங்களில், அந்தக் கட்சிக்குள் நிலவுகிற கருத்து வேறுபாடுகளையும் அதற்குள் நடைபெறும் விவாதங்களையும் மக்கள் தெரிந்து கொள்வது எவ்வாறு? (அதாவது கட்சிக்குள் எந்தக் குழுவின் கை மேலோங்கியுள்ளதோ, அந்தக் குழுவின் கருத்துகள் மட்டுமே மக்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன; மாற்றுக் கருத்துகள், ஒன்று இருட்டடிப்புச் செய்யப்படுகின்றன, அல்லது வெற்றி பெற்ற குழுவின் வசதிக்கேற்ப வியாக்கியானம் செய்யப்படுகின்றன.)

ஆக, சோசலிச சமுதாயத்தில் ஆளும் கட்சியின் மீதும், அரசு இயந்திரங்களின் மீதும் உழைக்கும் மக்கள் கண்காணிப்பைச் செலுத்துவதற்கான பொறியமைவு, சோசலிச நலன்களுக்கு ஊறு விளைவிக்காத மாற்றுக் கருத்துகளை வெளியிடும் சுதந்திரம் என்பன தீர்க்கப்படாத பிரச்சனைகளாக உள்ளன. இந்தப் பிரச்சனைகள் நேபாள மாவோயிஸ்ட் கட்சியில் தீவிரமாக விவாதிக்கப்பட்டு வருகின்றன. எனினும், சோசலிசத்திலுள்ள இந்தக் குறைபாடுகளுக்கான மாற்றாக, முதலாளிய நாட்டு ஜனநாயக முறையைப் ("ஒருவர் இத்தனை ஆண்டுகளுக்கு மேல் பதவி வகிக்கக்கூடாது" என்பது போன்றவை) பரிந்துரைக்க முடியாது. 'நாடாமன்ற ஜனநாயகத்தின் தாய்' எனக் கூறப்படும் பிரிட்டிஷ் நாடாளுமன்ற ஜனநாயகம் பற்றி ஜார்ஜ் தாம்ஸன் கூறுவது மனங்கொளத்தக்கது (ஜார்ஜ் தாம்ஸன், முதலாளியமும் அதன் பிறகும்: சரக்கு உற்பத்தியின் தோற்றமும் வீழ்ச்சியும், விடியல் பதிப்பகம், கோவை, 2005, ப.122-123.) இந்தியாவில் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட எனக்கும், இந்தியக் கோடீசுவரர்களிலொருவரான அனில் அம்பானிக்கும் சம சுதந்திரமும் உரிமையும் இருக்கிறது என்பது உண்மைதான். இந்தப் பெயரளவிலான சுதந்திரமும் உரிமையும் கண்கூடான, பருண்மையான சுதந்திரமாகவும் உரிமையாகவும் மாறுவதைத் தடுக்கும் பொருளியல், கருத்துநிலைக் காரணிகள் இல்லையா? ஒரு தொழிற்சாலையில் வேலை பார்க்கும் தொழிலாளியாக நான், எனது வேலை எத்தகையதாக இருக்க வேண்டும், எவ்வளவு ஊதியம் எனக்குத் தரப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் சுதந்திரம் எனக்கு உள்ளதா?

ஒரு மைய உலகம் உருவாகி, அதன் தலைவனாக அமெரிக்கா முடிசூட்டிக் கொண்டு, உலக முதலாளியச் சந்தைப் பொருளாதாரத்தைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதால், ஐரோப்பிய நாடுகள் மட்டுமின்றி, சீனா, ரஷியா, இந்தியா, பிரேஸில் போன்ற நாடுகளும் அதன் கூட்டாளிகளாகி விட்டன என்று கூறும் நூலாசிரியர், 'ஏகாதிபத்தியம்: முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்' என்னும் நூலில், இப்படி ஒரு உலக அமைப்பு ஏற்கனவே உருவாகி விட்டதாகக் கூறிய காட்ஸ்கியின் கருத்தை (அதி-ஏகாதிபத்தியம்-ultra-imperialism) லெனின் மறுதலித்துக் கூறியவற்றையும் எடுத்துக் காட்டியுள்ளார். நூலாசிரியர் கூறுவது போல ஏகாதிபத்தியக் கட்டமைப்பிலும் மூலதனத் திரட்டல், மூலதனக் குவிவு முறைகளிலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஏகாதிபத்திய நாடுகள் தமக்குள் ஏற்படும் முரண்பாடுகளைத் தணிப்பதிலும் சமரசத்திற்குட்படுத்துவதிலும் தற்காலிகமாக வெற்றியடைந்துள்ளன. ஆனால், இந்த நிலை என்றென்றும் நீடித்திருக்க முடியாது. அப்படியானால், என்ன மாற்றங்களை எதிர்வு கூற முடியும்? உலகப் புரட்சி இயக்கங்கள் எத்தகைய மூல உத்தியைத் தேர்த்தெடுக்க வேண்டும்? என்னும் கேள்விகளுக்கான விடைகள் தேடும் திசையில் நம்மை உந்தித் தள்ளுகிறது இந்த நூல். எனினும், இப்போதுள்ள ஒரு மைய உலகம் நிரந்தரமானதல்ல, அது பல மைய உலகமாக (multi polar) மாறுவதற்கான அறிகுறிகளும் தோன்றியுள்ளன. எடுத்துக்காட்டாக, 2006 ஜூலை-ஆகஸ்டில் நடந்த 34 நாட்கள் லெபனான் போரில் இஸ்ரேல் தோற்கடிக்கப்பட்டது. இந்தத் தோல்வியை அதற்கு ஏற்படுத்திய ஹிஸ்பொல்லா, அதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்பே, லெபனானில் இருபது ஆண்டுகள் இருந்து வந்த இஸ்ரேலியப் படைகளை விரட்டியிருந்தது. 1967இல் நடந்த ஆறு நாள் போரில் ஆறு அரபு நாடுகளைத் தோற்கடித்து அரேபியர்களின் நிலங்களின் கணிசமானவற்றை அபகரித்துக் கொண்ட இஸ்ரேல், கிரம சேனை கூட இல்லாத ஒரு கெரில்லா இயக்கத்திடம் தோல்வி கண்டது. 2006ஆம் ஆண்டுப் போருக்குப் பிறகு ஏராளமான யூதர்கள் இஸ்ரேலிலிருந்து வெளியேறி வருகின்றனர். பாலஸ்தீனப் பகுதிகள் முழுவதையும் திறந்த வெளிச் சிறைச்சாலைகளாக இஸ்ரேல் மாற்றியுள்ள போதிலும் அந்த மக்களின் விடுதலைப் போராட்டம் சிறிதும் பின் தங்கவில்லை. அமெரிக்கா, ஈரானை அச்சுறுத்தி வரும் அதேவேளை, இராக்கில் உள்ள ஷியா ஆட்சியாளர்களுடனும் அந்த ஆட்சியாளர்களுக்கு எதிரான பிற ஷியா குடிப்படைகளுடனும் ஈரானுக்குள்ள நட்பைப் பயன்படுத்தி அங்குள்ள பொம்மை அரசாங்கம் தொடர்ந்து நீடிக்க வைக்க முயல்கிறது. ஆஃப்கானிஸ்தானில் கார்ஸாய் தலைமையிலான அரசாங்கம் ஏற்படுவதற்கு ஈரானும் உதவி செய்தது. மறுபுறம், 2001இல் ஆஃப்கானிஸ் தான் மீது படையெடுத்த ஆங்கிலோ- அமெரிக்கக் கூட்டணிப்





படிப்பகம்

www.padippakam.com



படைகளுடன் பின்னர் நேட்டோ படைகளும் சேர்ந்து கொண்டாலும் தலிபானைத் தோற்கடிக்க முடியவில்லை. காபூலுக்கு வெளியே மட்டுமின்றி, பாகிஸ்தானின் சில பகுதிகளிலும் தாலிபானின் செல்வாக்கு மேலோங்கியுள்ளது.

மேலும், ரஷியாவும் ஈரானும் அண்டை நாடுகள் மட்டுமின்றி, இரண்டு நாடுகளிலும் உள்ள எண்ணெய், இயற்கை வாயு வளங்கள் பிரமாண்ட மானவை. காஸ்பியன் பகுதி வரை இந்த நாட்டுப் பிரதேசங்கள் உள்ளன. இந்த எண்ணெய், இயற்கை வாயு உள்ள பகுதிகள் சீனா வரை நீள்கின்றன. ஈரானும் ரஷியாவும் சேர்ந்து தரை மார்க்கமாக இந்த வளங்களை ஜப்பான், சீனா, தென் கிழக்காசியா ஆகியவற்றுக்குக் கொண்டு செல்ல முடியும். ஐரோப்பிய நாடுகளும்கூட முழுக்க முழுக்க, தமது எரிசக்தித் தேவைக்காக அமெரிக்காவின் கட்டுப் பாட்டிலுள்ள இராக், சவூதி அரேபியா, குவெய்த் ஆகியவற்றைச் சார்ந்திருக்கும் நிலை மாறக்கூடும். அண்மையில் பிரான்ஸ் 'மத்தியதரைக் கடல் நாடுகளின் அமைப்பொன்றை' உருவாக்க முயற்சி மேற்கொண்டது. சீனாவில் தற்போதைய பொருளாதார வளர்ச்சி, பெரிதும் அமெரிக்கச் சந்தையைச் சார்ந்திருக்கிறது என்பது உண்மைதான். ஆனால், அது ஜப்பானிய, தென் கிழக்காசியா, ஆப்பிரிக்கச் சந்தைகளையும் தேடத் தொடங்கி யுள்ளது. அமெரிக்காவின் வலுமிக்க பொருளாதாரம், வியத்நாமில் அது அடைந்த தோல்வியைத் தாங்கிக் கொள்ள உதவியது. ஆனால், இராக், ஆஃப்கானியப் போர்கள் இன்று அமெரிக்காவுக்குப் பெரும் பொருளாதாரச் சுமையை ஏற்படுத்தியுள்ளன. அமெரிக்கா உலகின் மிகப் பெரும் கடனாளி நாடாகிவிட்டது. அதன் பொருளாதாரம் சரிந்து வருகின்றது. கடந்த பத்தாண்டுகளில் டாலரின் மதிப்பு 25%த்திற்கும் மேலாகக் குறைந்துவிட்டது. இதன் காரணமாக, அமெரிக்க மக்கள் நுகரும் பண்டங் களின் விலை மிகவும் உயர்ந்துவிட்டது. இராக்கை ஆக்கிரமித்து ஐந்தாண்டுகளுக்கு மேலாகியும், அங்கு அமெரிக்கக் கூட்டணிப்படைகளால் இறுதி வெற்றி அடைய முடியவில்லை. ரஷியா, எண்ணெய் போன்ற மூல வளங்களை மட்டும் ஏற்றுமதி செய்யும் நாடல்ல. அது, ஆயுத ஏற்றுமதியிலும் முன்னணியில் உள்ளது. சென்ற ஆண்டு, அது அமெரிக்காவின் நம்பகமான கூட்டாளிகளான சவூதி அரேபியா, ஜோர்டான் ஆகியவற்றுக்கும்கூட ஆயுதங்களை விற்பனை செய்தது. இவை ஒரு புறமிருக்க, இலத்தீன் அமெரிக்காவில் ஒரு 'இளஞ்சிவப்பு' புரட்சி தோன்றியுள்ளது. ஹ்யூகோ சாவெஸ், வெனிசூலாவில் '21ஆம் நூற்றாண்டு சோசலிசத்தை' உருவாக்குவதாகக் கூறுகிறார். பொலிவியா, ஈக்வேடோர், அர்ஜெண்டினா போன்ற நாடுகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

**தமிழீழ மக்கள், தமக்கான நேசச் சக்திகளை, தமிழகத்திலும் கொஸோவோவிலும் தேடுவதற்கு முன் சிங்கள, முஸ்லிம் உழைக்கும் மக்களிடையே தேட முயல வேண்டும். ஒடுக்கப்படும் விடுதலைக்கான குறுக்கு வழி ஏதும் இல்லை.**

அரசுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் என்பன ஒருபுறமிருக்க, இலத்தீன் அமெரிக்காவிலுள்ள மலைகளிலும் காடுகளிலும் வாழும் இலட்சக் கணக்கான மக்களிடையே நவ-தாராளவாதத்திற்கு எதிரான போராட்டங்கள் வளர்ந்து வருகின்றன.

1991க்குப் பின் உருவான ஒரு மைய உலகம் பற்றிய விரிவான சித்திரத்தை வழங்கும் நூலாசிரியர், அந்தச் சித்திரம், தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் எப்படி சம்பந்தப்பட்டுள்ளது என்பதைத் தெளிவாக விளக்கவில்லை.

> "ஒடுக்கப்படும் இனங்களைப் பொறுத்தவரையில் அத்தகைய மக்கள் திரளுக்கான ஜனநாயகமே முதலில் ஸ்தாபிதம் பெற வேண்டிய தாகும். அந்த ஜனநாயகத்திற்கு அரசுகள் பணிய நேர்கின்றது. ஏனெனில் மக்கள் திரளில்தான் அரசுகள் உயிர் வாழ வேண்டியிருப்பதால், ஒடுக்கப்படும் இனங்கள் தமது இன அடையாளத்தின் பெயரால் ஆன ஜனநாயக உருவாக்கத்தின் மூலமே அரசுகளைப் பணிய வைக்க முடியும். தமிழீழ மக்கள் தமது விடுதலைக்காகத் தம்மை ஒரு மக்கள் திரளாகக் கொண்டு தமிழக மக்கள் திரளைப் பயன்படுத்தி இந்திய மத்திய அரசைப் பணிய வைத்து தமிழீழ விடுதலையை ஸ்தாபிக்க வேண்டும். தமிழக மக்களால் இந்திய மத்திய அரசை பணிய வைக்க முடியும்போது இந்திய மத்திய அரசுக்கு உலக அரசுகள் தலை சாய்க்க வேண்டிய நிலை நிலவும்".

இந்த நூல் நெடுக, மார்க்ஸிய ஆய்வு முறையையே மேற்கொண்டுள்ளதாகக் கூறும் நூலாசிரியர், அந்த அணுகுமுறையை மேற்சொன்ன வரிகளுக்கும் பிரயோகித்துப் பார்க்க வேண்டும் என்பதே நமது அவா. தமிழீழ மக்கள், தமக்கான நேசச் சக்திகளை, தமிழகத்திலும் கொஸோவோவிலும் தேடுவதற்கு முன் சிங்கள, முஸ்லிம் உழைக்கும் மக்களிடையே தேட முயல வேண்டும். ஒடுக்கப்படும் விடுதலைக் கான குறுக்கு வழி ஏதும் இல்லை. 'பெரிய அண்ணன்களை' நாடுவது புதிய அடிமைத்தனத் துக்குக் கொண்டு சென்று விடும். ▣



படிப்பகம்

www.padippakam.com



பஹீமா ஜஹான்



## எல்லைக் கோட்டில் தடுக்கப் பட்டவள்

முறைப்பாடுகளுக்கு அஞ்சிய
எல்லாக் காவலரண்களும்
அவளை வெளியே துரத்துகின்றன

தனது குழந்தைகளுக்காக
எடுத்துச் செல்லும் கனிகள்
ஒவ்வொன்றாக அழுகுவதை
ஏக்கத்துடன் தூக்கியெறிகிறாள்

அன்பை
நிம்மதியை
மாபெரும் கருணையொன்றை
தன்னோடு எடுத்துச் செல்லக்
காத்திருக்கிறாள்

ராஜாக்களின் அரசியல்
அவள் வீட்டைச் சிதைத்தது
அதிகாரம் கொண்ட கழுகொன்று
அவளது புத்திரரைக் கௌவிப் பறந்தது
சித்தம் பிசக வைத்த
இரக்கமற்ற குரலொன்று
அவளைத் தெருவெங்கும் ஓடவைத்தது

இன்று...
கின்னரர் தம் இசையிழந்த
நிலமெங்கும்
அவளது ஒப்பாரி அலைகிறது
அரசனைத் துதிபாடிச் செல்வோரின்
கால்களின் கீழே
பேரவலத்தின் ஓசை மாண்டொழிகிறது

௸

## மரணத்தை யாசித்தவள்

நீ
இறைவனின் தோற்றமொன்றை
எதிர்பார்த்துக் காத்திருந்தாய்
தீண்டத் தகாத பொருளாக்கி
இருளின் மூலையொன்றில்
உனைக் கிடத்தியிருந்தது முதுமை

எழுந்து நடக்கத் தயாராகும் பொழுதெலாம்
வயோதிபமடைந்த பூமி
தள்ளாடித் தள்ளாடி
உனை வீழ்த்திடத் தயாராக இருந்தது

உன் வாழ்வு முழுதும் சேகரித்த
வேதனைகளைப் பகன்றிட
எந்தச் செவியுமே
அவ்வீட்டில் இல்லாதிருந்தது

பேரன்புடன்
அவதரிக்கச் செய்து ஆளாக்கி வளர்த்த
உருவங்களுக்குள்ளிருந்து
திரும்பி வரவே இல்லை
உனக்கான பரிதவிப்புகளும் பாசங்களும்

இனியும் சகித்திட முடியாத
வாழ்வை உதறியெறிந்து
நீ போனாய்

நீ நீரூற்றியதால்
வளர்ந்தோங்கிய மரங்களெல்லாம்
இன்று
உன் கருணையின் காலடிகளைத்
தேடியவாறு
தலைகவிழ்ந்து நிற்பதைக் காண்

௸



படிப்பகம்


www.padippakam.com



# நல்லாட்சி வெகு வேகமாக வீழ்ச்சியடைந்து வருகின்றது

**பேராசிரியர் ஜயந்த செனவிரத்ன**

*களனி பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்துவரும் இவர், இலங்கையின் மாற்று சிந்தனைப் போக்கில் முன்னோடியாகவும் முன்மாதிரியாகவும் இருந்து வருபவர். அரசியல் அமைப்பு, தேசிய சிறுபான்மை இன மக்களின் உரிமைகள், மனித உரிமைகள் தொடர்பில் நீண்டகாலமாக பணியாற்றிவரும் இவரை அண்மையில் கேரளாவில் நடந்த இலங்கை தொடர்பான மகாநாடு ஒன்றில் சந்திக்க முடிந்தது அவருடன் நடாத்திய உரையாடலை இங்கு தருகிறோம். - எம். பௌசர்*



■ **போருக்குப் பிந்திய இன்றைய இலங்கை நிலவரம் எப்படி இருக்கிறது?**

முதலில் நான் ஒன்றைக் கூறவேண்டும். யுத்தமானது பௌதீக ரீதியில் மட்டுமே முடிவடைந்துள்ளது. ஏனெனில், யுத்தத்திற்கு பின்னணியாக இருந்த காரணிகள் இன்னும் அவ்வாறே தீர்க்கப்படாது உள்ளது. அவற்றைப் பற்றி பேசுவதற்கு அரசு உண்மையாக முயற்சி எடுக்க வில்லை என்பது தெளிவாக தெரிகிறது. இவ்வாறானதொரு நிலைமையின் காரணமாக தமிழ் மக்களைப் போலவே தமிழ் மக்களின் உரிமையின் பொருட்டு முன்னின்று செயற்பட்ட சிங்கள சமூக குழுக்களுக்குள்ளும் விரக்தி நிலைப்பாடு உருவாகியுள்ளது.

பௌதீக ரீதியில் யுத்தம் நிறைவடைந்துள்ள போதும் இப்போதைய சூழ்நிலையில் மனிதத்துவம் தொடர்பிலான பாரிய பிரச்சினைகள் பல தற்போது உருவாகியுள்ளன. விசேடமான யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 3 இலட்சத்திற்கு அண்ணளவான தமிழ் மக்கள் இன்னும் வடக்கின் அகதி முகாம்களில் வாழ்கின்றனர். அந்த முகாம்களின் நிலையை மிகவும் மோசமானது. சுகாதார நிலைமைகள் மிகவும் கீழ்மட்டத்தில் காணப்படுகின்றது. இந்த சுகாதார நிலைமைகள் காரணமாக ஒரு நாளைக்கு 5 - 15 பேர் இன்றும் இறக்கின்றனர். சிறுவர்கள் மற்றும் ஆண் பிள்ளைகள் காணாமல் போகும் நிலைமை காணப்படுகின்றது. பெண்களுக்கெதிரான பாலியல் துன்புறுத்தல்கள் அதிகமாக நிலவுகின்றது. இந்த மக்களை மீண்டும் மீள் குடியேற்றுவது எப்போது நடைபெறும் என்ற நிலைமை காணப்படுகின்றது. உண்மையிலேயே இது மிகவும் துர்பாக்கியமான நிலைமையாகும்.

தெற்கில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் இன்னும் அவ்வாறே இடம்பெறுகின்றது. ஊடக வியலாளர்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் மற்றும் மனித உரிமை மற்றும் சிவில் சமூக செயற் பாட்டாளர்களுக்கும் சுதந்திரமாக செயற்பட முடியாத



படிப்பகம்

www.padippakam.com

**தேசிய இனப்பிரச்சினை மற்றும் அதற்கான தீர்வில் சிங்கள சமூகத்தின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாதது. ஏனெனில், சிங்கள சமூகம் தான் தெற்கில் அரசாங்கத்தை உருவாக்குவதில் பெரும் பங்கினை வகிக்கிறது. அவர்கள் எடுக்கும் தீர்மானம் அல்லது அதற்கான பங்களிப்பு மிகவும் முக்கியத்துவம் நிறைந்தது.**

நிலைமையே காணப்படுகின்றது. வடக்கின் முகாம்களில் இருக்கும் தமிழ் மக்களைப் பார்க்கவோ, அதைப் பற்றி பேசவோ அல்லது எழுதுவதற்கோ இடமில்லை. மிரட்டல்கள் அதிகம்.

அத்துடன் நல்லாட்சி (Good Governance) வெகு வேகமாக வீழ்ச்சியடைந்து வருகின்றது. அமைச்சர்கள், மக்கள் பிரதிநிதிகள் தாம் நினைத்தபடி நடக்கின்றனர். சட்டம் தொடர்பில் எவ்வித பயமும் இவர்களுக்கு இல்லை. அரசு நிதி நடவடிக்கைகளை தமக்குத் தேவையான விதத்தில் பயன்படுத்துகின்றது. யுத்த வெற்றிகளை மக்களுக்கு காட்டியே இவர்கள் இவ்வாறு செயற்படுகின்றனர். அரசின் அனைத்து நிறுவனக் கட்டமைப்புகளும் வீழ்ச்சியடைந்துள்ளன. மனித உரிமைகள், நல்லாட்சி, ஊடக சுதந்திரம் பற்றி கேள்வி எழுப்பும் நபர்களுக்கு, செயற்பாட்டாளர் களுக்கு பயங்கரவாத முத்திரை குத்தி அவர்களின் வாய்களை அடக்கும் நிலைமையே காணப் படுகின்றது.

■ **தேசிய இனப் பிரச்சினையிலும் அதற்கான தீர்விலும் சிங்கள சிவில் சமூகத்தின் பங்களிப்பு முக்கியமானதாகும். இந்த வகையில் இந்த விடயத்தையிட்டு சிங்கள சிவில் சமூகம் என்ன நிலைப்பாட்டில் உள்ளது?**

தேசிய இனப்பிரச்சினை மற்றும் அதற்கான தீர்வில் சிங்கள சமூகத்தின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாதது. ஏனெனில், சிங்கள சமூகம் தான் தெற்கில் அரசாங்கத்தை உருவாக்குவதில் பெரும் பங்கினை வகிக்கிறது. அதனால் அரசியல் தீர்வின்போது அவர்கள் எடுக்கும் தீர்மானம் அல்லது அதற்கான பங்களிப்பு மிகவும் முக்கியத்துவம் நிறைந்தது. தற்போது எனக்குத் தெரிந்தவகையில் சிங்கள சிவில் சமூகம் இது தொடர்பில் பிளவுபட்டு காணப்படுகின்றது. ஒரு பிரிவினர் அரசின் யுத்த நடவடிக்கைகளை ஏற்றுக்கொண்டு செயற் படுகின்றனர். இன்னுமொரு பிரிவினர் மௌனமாக உள்ளனர். மிகவும் சிறிய ஒரு பிரிவினரே அரசியல் தீர்வை துரிதப்படுத்துமாறு வேண்டி நிற்கின்றனர். சிங்கள சமூகத்தின் மனநிலை மாற்றம் தொடர்பில் பலமான அழுத்தம் கொடுப்பதற்கு சிவில் சமூகத்தால் முடியும். ஆயினும், இந்த பிளவு காணப்படுவதால் சிங்க சமூகத்தின் பெரும்பான்மை யானோர் யுத்தத்தை ஆதரிக்கின்றனர். சிவில் சமூகத்தில் பெரும்பகுதியினர் என்.ஜி.ஓ. செயற் பாடுகளில் மட்டும் ஈடுபடுகின்றனர். அரசியல் தீர்வு பற்றி பேசாது தற்போது அவர்கள் அபிவிருத்தி செயற்திட்டங்களை மட்டும் மேற்கொள்கின்றனர். அடுத்த காரணி என்னவெனில், சிங்கள சிவில் சமூகம் என்னைப் பொருத்தவரை ஊழல்மிக்கது. அரசின் அடக்குமுறைக்கு எதிராக குரல் எழுப்பு வதில்லை. இது தொடர்பாக அவர்களுக்கு அக்கறையும் இல்லை. இந்த யுத்தம் சிவில் சமூகத்தில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தி விட்டது. அவர்கள் யார் என்பதை உலகுக்கு தெளிவுபடுத்தி உள்ளது.

■ **தேசிய இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான அடிப்படை அணுகுமுறை எப்படி இருக்க வேண்டுமென நீங்கள் கருதுகிறீர்கள்?**

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வாக நான் கூறுவது சமஷ்டி (Federal) முறைமை ஒன்றேயாகும். 13வது சீர்திருத்தம் போதுமானதாக இல்லை. அதற்கு அப்பால் சென்ற ஒரு தீர்வையே நான் நம்புகின்றேன். ஏனெனில், இந்நாட்டின் தமிழ் மக்களும் ஒரு தேசியத்திற்கு உரிமை கோரும் பிரிவினர் என்பதை நாம் முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்கான அனைத்துவிதமான தகுதிகளும் அவர்களிடம் உள்ளது. அவர்களது கலாச்சாரமும் சிங்கள கலாச்சாரமும் நீண்ட வரலாற்றில் ஒன்றாகவே வளர்ச்சி அடைந்தவை. முஸ்லிம் சமூகமும் இவ்வாறே, இலங்கை முஸ்லிம் சமூகம் வடக்கு கிழக்கிலும், தெற்கிலும் வெவ்வேறு பிரதேசங் களிலும் வளர்ந்து வந்துள்ளது. எனவே இவ்வினக் குழுக்களிடையே உள்ளார்ந்த தொடர்புகள் வரலாற்றில் தெளிவாக காணப்பட்டன. எனவே அரசியல் தீர்வின்போது அவர்களுடைய அடிப்படை அரசியல் உரிமைகள், விழுமியங்கள் (கலாசாரம், மொழி, பழக்கவழக்கங்கள், மதம்) பாதுகாக்கப்படும் விதத்திலும் மேலும் மேலும் அபிவிருத்தி அடையக் கூடிய வகையில் ஏற்பாடுகளைச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். பொருளாதார ரீதியாக அவர்கள் முன்னேற்றமடைய தடையின்றி இடமளிக்க வேண்டும்.

கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் மாத்திரமே இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை காணமுடிகிறது. எனவே, கொழும்பை மையப்படுத்திய இவ்வதிகார செயற்பாட்டில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எவ்வித பயனும் கிடைத்ததில்லை. யுத்தத்தின் பின்னரான சூழ்நிலையானது வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் சிங்கள ஆதிபத்தியத்தை உக்கிரமாக நிலை நாட்டுகின்ற நிலைமையை உருவாக்கும் முயற்சியே தீவிரமடைந்துள்ளது. தமிழ் மற்றும் முஸ்லிம்





படிப்பகம்

www.padippakam.com

மக்களை தமது ஆதிபத்தியத்தின்கீழ் கட்டுப்படுத்தி வைத்திருக்கவே முயற்சிக்கப் படுகின்றது. எனவே, அவர்களுக்கு சுயாட்சியை பெற்றுக் கொடுக்க முயற்சிக்க வேண்டும். கூடுதல் அதிகாரங்களைக் கொண்ட பிரதேச அரசு ஒன்றை வழங்குவதன்மூலம் மட்டுமே இப்பிரச்சினையை தீர்த்துக் கொள்ள முடியும்.

■ **நீங்கள் அடிப்படையில் இலங்கையில் அரசியல் சுதந்திரம், அரசியல் சமத்துவம் ஏற்படுத்த வேண்டுமென கருத்தியல் ரீதியாக *(Ideaology)* வலியுறுத்தி வருகிறீர்கள். இந்த அம்சத்தை நடைமுறைரீதியாக *(Practical)* எப்படி கொண்டு செலுத்தலாம்?**

அரசியல் சுதந்திரம் என்பது அரசின் தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டில் பங்குபற்றுவதற்கு உள்ள சுதந்திரமே ஆகும். கடந்த 61 வருட காலமாக தமிழ்-முஸ்லிம் மக்களை இச்செயற்பாட்டில் விலக்கி இருந்த நிலைமையையே நாம் காண முடிந்தது. சமத்துவ கொள்கையை அடிப்படையாகக் கொண்டு அரசை கட்டியெழுப்பும் நிலைமை நடைமுறைப்படுத்தப்பட வில்லை. இலங்கையில் பல இனங்கள் வாழ்வதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அவர்கள் பல மதங்களை, பல கலாச்சாரங்களைக் கொண்டவர்கள் எனவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆயினும் அவர்கள் சமமின்மையானவர்களாகவே நடத்தப்பட்டனர். ஏற்றத்தாழ்வான பன்மைத்துவம் *(Inequalitarian Pluralism)* அரசினுள் பிரதிபலித்திருந்தது.



கடந்தகால இலங்கை அரசியலில் முரண்பாடுகள் சாத்வீக ரீதியாகவும் ஆயுதவழி அரசியல் போராட்டங்கள் மூலமும் தீர்க்க முயற்சிக்கப்பட்டது ஆனால் நிலைமைகளை மாற்றமுடியவில்லை. இவ்வாறானதொரு நிலைமை மீண்டும் உருவாகாது இருக்க வேண்டுமானால் சிங்கள - முஸ்லிம் - தமிழ் மூன்று இனங்களையும் தொடர்புபடுத்தி சமத்துவ பன்மைத்துவம் *(Equalitism Pluralism)* பிரதிபலிக்கும் வகையில் அரசை கட்டியெழுப்ப வேண்டும். அதை செய்ய முடியும். இந்தியா, லெபனான், சுவிட்சர் லாந்து, நைஜீரியா, பெல்ஜியம் போன்ற நாடுகளின் அரசியல் அமைப்பானது அந்நாட்டு மக்கள் அனைவரினதும் ஒத்துழைப்புடனேயே தயாரிக்கப் பட்டுள்ளது. எங்களாலும் அதை செய்ய முடியும். அதிகாரப் பகிர்வின் *(Power Sharing)* கொள்கைகளின் அடிப்படையில் அதை கட்டி யெழுப்ப வேண்டும்.

சமூக கூட்டாட்சி ஜனநாயகத்தின் ஊடாக *(Consociatianal Democracy)* அதிகாரப் பகிர்வை கட்டியெழுப்ப முடியும். மத்திய அரசின் அதிகாரத் திற்கு சமமானதாக பங்கு பெறக்கூடிய சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும். அதேபோல் வடக்கு - கிழக்கு மாகாணங்களிலும் அம்மக்களின் தேவைகளின் அடிப்படையிலும் பிரதேச சுயாட்சியை *(Reginal Autonomy)* வழங்க வேண்டும். இதன் மூலம் தற்போதுள்ள மாகாண சபை முறைமைகளை மீண்டும் மாற்றியமைக்க முடியும். மத்திய அரசின் தீர்மானம் எடுப்பதில் தற்போதுள்ள முறையின்படி சிங்கள பெரும்பான்மையே தீர்மானங்களை மேற் கொள்கின்றது. அவர்களுக்குத் தான் அதிகாரம் இருக்கின்றது. ஆயினும் தமது சுயகௌரவம் பாதுகாக்கப்படும் விதமாக அவ்வதிகாரத்தில் பங்குகொள்ளும் சந்தர்ப்பத்தை தமிழ் முஸ்லிம் இனங்களுக்கும் பெற்றுக்கொடுக்க வேண்டும். அதேபோல், விகிதாசார கோட்டிபாட்டின் அடிப்படையில் பிரதிநிதித்துவ முறையை ஏற்படுத்தவும், நிர்வாக பதவிகள் மற்றும் வளங்களை பகிர்ந்தளிக்கக் கூடியதான செயல்முறை யொன்றை யாப்பினூடாக மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்தால் மாத்திரமே நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியும்.

**▣ தமிழில்: சி. மணிமாறன்**



படிப்பகம்

**நிகழ்வு பதிவு**

# இலங்கை விவகாரம், நிலவரம் தொடர்பான மாநாடு




புலம் பெயர்ந்த இலங்கையர்களின் சர்வதேச வலையமைப்பு (INSD) இந்தியக் கேரள மாநிலத்தில் 7 நாள் செயலமர்வொன்றை நடாத்தியது. இலங்கையிலிருந்து நூற்றுக்கு மேற்பட்ட சிங்கள தமிழ் முஸ்லிம் செயற்பாட்டாளர்களும், நிறுவனப் பிரதிநிதிகளும் புலம்பெயர் நாடுகளிலிருந்தும் தமிழகத்திலிருந்தும் பலரும் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

- இலங்கையில் சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் உறுதிப்படுத்துவதற்கான சிறந்த அரசியலமைப்பு மாதிரி எது?
- இலங்கையில் இனத்துவ சமத்துவம், அரசியல் சமத்துவத்தை அரசியலமைப்பினூடாக உறுதிப் படுத்துவதற்கான சிறந்த மார்க்கங்கள் எவை?
- இலங்கையில் நல்லாட்சியும், அதன் சட்டமும் ஒழுங்கும்
- அரசிற்குள்ளும் சமூகங்களுக்குள்ளும் அனைத்து மனித உரிமைகளையும் எப்படி உறுதிப் படுத்துவது?
- உலகப் பொருளாதார போட்டிகளின் நடுவே, இலங்கைப் பொருளாதாரத்தை கட்டி வளர்ப் பதற்கு சிறந்த பொருளாதார மாதிரிகள் எவை?

என்கிற பிரதான தலைப்புகளின்கீழ் உரைகளும் கருத்துகளும் பகிரப்பட்டன. இலங்கையின் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை, 13வது, 17வது அரசியலமைப்பு திருத்தங்கள், வடக்குகிழக்கு அகதிகளும் இடைத்தங்கல் முகாம்களின் நிலையும், தகவலை அறிந்து கொள்வதற்கான உரிமை, உள்ளூராட்சி சபைகள், ஊழலில் திளைக்கும் அரசாங்கமும் நிறுவனங்களும், ஊடகச் சுதந்திரம், அடிப்படை உரிமைகளைக் காப்பது, சமூக பொருளாதார உரிமைகள், நவதாராளவாத பொருளாதாரம், உலகமயமாக்கல், தொழிற் சங்கங்கள் போன்ற விடயங்கள் தொடர்பான விவாதங்கள் நிகழ்த்தப்பட்டன.

இந்த மாநாட்டில் கலந்துகொண்ட சிங்களப் பிரதிநிதிகள் தேசிய இனப்பிரச்சினை சமத்துவமாக தீர்க்கப்படல் வேண்டுமென்பதை வலியுறுத்திய துடன், தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இராணுவத் தீர்வை முன்வைப்பதை ஏற்கமுடியாது என கருத்து தெரிவித்ததுடன், போரில் அரசு பெற்ற வெற்றியானது சிங்கள மக்கள் மத்தியில் ஒருவித மயக்கத்தை ஏற்படுத்தி உள்ளதாகவும் பெரும் பான்மையானோர் இன்று அரசியல் தீர்வு தேவையில்லை என்கின்றனர் எனவும் தெரிவித்தனர். இராணுவ யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் அரசியல் ரீதியான தீர்வு அவசியம் அதிகரித்துள்ளதாக வலியுறுத்திய இவர்கள் யுத்தத்தின் ஊடாகவும் இராணுவ வழிமுறையினாலும் தேசிய இனப் பிரச்சினைக்கு மட்டுமல்ல, நாட்டின் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காணமுடியாது என்றனர்.



www.padippakam.com

இலங்கையில் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் ஏனைய ஆயுதக் குழுக்களும் படுகொலைகளில் ஈடுபட்டுள்ளதுடன், நாட்டு மக்களின் அனைத்து உரிமைகளையும் மீறியுள்ளதாக தெரிவித்த இவர்கள், இந்த நிலைமையை மாற்றுவதற்கு சிவில் சமூகங்கள் மத்தியில் திறந்த மனதுடனான உரையாடலும் இதுபற்றிய பிரக்ஞையையும் ஏற்படுத்துவது முக்கியமானது என்பதை தெளிவுபடுத்தினர். நாடு இன்று மோசமான அடக்குமுறைக்குள் சிக்குபட்டிருப்பதாகவும் ஜனநாயக மறுப்பும், அதிகாரத் துஷ்பிரயோகமும் தலைவிரித்தாடுவதாகவும் கருத்துக்களை முன்வைத்தனர்.

இம்மாநாட்டில் சிறப்புரையாற்றிய தமிழக எழுத்தாளர் எஸ்.வி.ராஜதுரை (எஸ்.வி.ஆர்) இலங்கையின் பிரச்சினை மேலும் சிக்கலடைவதற்கான அக புறச் சூழல்கள் இன்றைய உலகளாவிய போக்கில் அதிகரித்துள்ள நிலையில், இதனை எதிர்கொள்வதற்கான சரியான அணுகுமுறை அவசியமென வலியுறுத்திய அவர், தமிழ் சமூகம் புத்திசாதுரியமான அரசியல் தெளிவுள்ள தலைமைகளை உருவாக்காததும் இந்த நிலை மேலும் மோசமடைவதற்கு காரணமாகவிருந்தது என்றார். இலங்கை இனப் பிரச்சினை விவகாரத்தில் இந்திய, தமிழக ஊடகங்கள் ஒருபக்கம் சார்ந்தே நிகழ்வுகளை வழிப்படுத்துகிறது என்பதுடன் தமிழ் மக்களின் விடுதலையை ஆதரிப்போர் இந்துத்துவ சக்திகளிடம் போய் சரணடைந்திருப்பதாகவும் இதில் அரசியல் தலைவர்கள், இடதுசாரிகள், புத்திஜீவிகளும் அடங்குகிறார்கள் என்றார்.

இலங்கையில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டதில் இலங்கை அரசுடன் இணைந்து இந்திய அரசும் பங்களித்திருப்பதாகத் தெரிவித்த அவர், இலங்கையில் ஏற்பட்டுவரும் இந்திய ஆதிக்கத்தை எதிர்ப்பதில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் இணைந்து கொள்வது அவசியம் என்பதையும் வலியுறுத்திப் பேசினார்.

13வது அரசியல் ஏற்பாடு தொடர்பாக கருத்து தெரிவித்த பலர், 13வது அதிகாரப் பகிர்வானது தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு போதுமானதாக இல்லையென்பதை வலியுறுத்தியதுடன், ஆகக்குறைந்தளவிலாவது 13வது திருத்தத்திற்கு அதிகமான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென்பதே யதார்த்தமானது எனச் சுட்டிக்காட்டினர். 13வது திருத்தத்தைக்கூட பெரும்பான்மையான சிங்கள அரசியல் தலைமைகள் பிசாசைப் பார்ப்பது போல் பார்ப்பதாகவும், இந்த நிலைமையை மாற்றி 13வது திருத்தத்திற்கு அதிகமாக அதிகாரம் வழங்கப்படுவதற்கான சிந்தனையை சிங்கள மக்களிடம் கொண்டு செல்வது குறித்து பெரும் சவாலை எதிர்கொள்வதாகவும் தெரிவித்தனர். 13வது திருத்தம் தொடர்பாக தமிழ் மக்களிடம் பெரும் அதிருப்தி நிலவுவதாகவும் மாகாணசபைக்கு வழங்கப்பட்ட ஆகக்குறைந்த அதிகாரங்களைக்கூட செயற்படுத்த முடியாத நிலை தோன்றியிருப்பதையும் பலரும் சுட்டிக் காட்டினர்.

சமாதானத்தை பற்றியும் இனத்துவ சமத்துவ உரிமைகள் பற்றியும் பேசுபவர்கள் வாதிடுபவர்கள் இலங்கை சமூக மட்டங்களில் மிகச் சிறுபான்மையினராகவும், அதிகார மற்றவர்களாகவும் இருப்பது இந்த நிலைமைகள் தொடரக் காரணமாகவிருக்கிறது, சிவில் சமூகத்தை சீர்படுத்துவதே உடனடியாகவும் முதற்பணியாகவும் செய்யப்பட வேண்டியுள்ளது என தெரிவித்தனர்.

அரசனுக்கு புகழ்பாடும் சமூகமாக பெருமளவினர் மாறிவிட்ட சூழலில், இப்போது பேரரசன் தோன்றிவிட்டது குறித்து பெரும் கொண்டாட்டங்கள் நடாத்தப்படுவதாகவும், இந்த அரசன், பேரரசன்களால், தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை மட்டுமல்ல, சிங்கள மக்களின் பிரச்சினைகளையும் தீர்க்க முடியாது. அநுராதபுரம், ஹம்பாந் தோட்டை மாவட்டங்களில் வாழும் சிங்கள மக்கள் எந்த அடிப்படை வசதிகளையும் இன்னும் பெறாதவர்களாகவே உள்ளனர் எனவும் தெரிவித்தனர். இனமுரண்பாடும், கசப்புணர்வுக்கான சூழலும் மக்களால் ஏற்படுத்தப்பட்டதல்ல இதனை அதிகாரக் குழுமங்களே உருவாக்கி மக்களை வழிநடத்துகின்றன என்பதை உணர்ந்தால்தான், இந்த அதிகார வர்க்கத்தை மாற்றியமைக்க முடியுமென கருத்துகள் முன்வைக்கப்பட்டன.



இச்செயலமர்வில் குழுக் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு எதிர்காலத்தில் சிவில் சமூகங்களுக்கு மத்தியில் செயற்படுத்துவதற்கான பல்வேறு ஆலோசனைகளும் செயற் திட்டங்களும் வகுக்கப்பட்டதுடன், சிங்கள, தமிழ், முஸ்லிம் செயற்பாட்டாளர்கள் திறந்தமனதுடன் பல்வேறு கருத்துக்களை முன்வைத்து உரையாடியமை இனங்களிடையே, வளமான எதிர்காலத்திற்கான நம்பிக்கையான வாழ்விற்கு சிறு ஒளிக்கீற்றாகவும் இருந்தது.

**-தாஸ்**





படிப்பகம்

www.padippakam.com



# கைவிடப்பட்ட நிலம்
# விமுக்தி ஜயசுந்தர





உலகத் திரைப்பட விழாக்களில் மிகச் சிறந்த திரைப்பட விழாவான பிரான்ஸில் நடக்கும் கேன்ஸ் திரைப்பட விழாவில் இலங்கையைச் சேர்ந்த இளம் சிங்களத் திரைப்படக் கலைஞரான விமுக்தி ஜயசுந்தர இயக்கிய *'சுலங்க எனு பினிஸ'* (*The Forsaken Land*) கைவிடப்பட்ட நிலம் என்ற 108 நிமிடங்கள் ஓடக்கூடிய திரைப் படத்திற்கு கேன்ஸின் கேமரா டி ஓர் என்ற உயர் விருது பெற்றதைக் குறிப்பிட வேண்டும். அத்தோடு பாங்கொக் நகரில் நடைபெற்ற மூன்றாவது உலகத் திரைப்பட விழாவின் போதும் இத்திரைப் படத்திற்குச் சர்வதேச அளவிலான சிறந்த திரைப்பட விருது வழங்கப் பட்டுள்ளது. 'இரண்டு தசாப்த கால யுத்தத்தின் விளைவுகளையும் போர் நிறுத்தம் அமுலில் இருந்த சூழலில் மனித வாழ்க்கையில் உள்ள வெறுமையை ஆழமாக ஆராயும் படைப்பாக 27 வயது நிரம்பிய விமுக்தியின் திரைப்படத்தைக் குறிப்பிட முடியும்' என வீரகேசரி வார வெளியீட்டில் எழுதியிருந்த சதீஷ் கிருஷ்ணப்பிள்ளை குறிப்பிடுகின்றார்.

விமுக்தி ஏற்கனவே *'நிகண்ட தேசய'* என்ற படத்தையும் இயக்கியுள்ளார். அவர் இத்திரைப்படம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போது 'எனது தாய் நாட்டில் உள்ள ஏராளமான பிரச்சினைகளையே இத் திரைப்படம் பிரதிபலிக்கின்றது. மேற்கத்திய நாட்டவர்களுக்காக இது உருவாக்கப்பட்டதாகப் பலர் கருதுகின்றனர். ஆனால் எனது நாட்டவர்களுக்காகவும் ஆசிய நாட்டவர்களுக்காகவுமே இத்திரைப்படம் தயாரிக்கப்பட்டது. ஆசிய நாடுகளில் ஒன்றான தாய்லாந்திலிருந்து நான் இவ்விருதைப் பெற்றதன் மூலம் ஆசியர்களுக்காகவே இப்படம் தயாரிக்கப் பட்டுள்ளது என்பது நிரூபணமாகியுள்ளது' என்கிறார் விமுத்தி ஜயசுந்தர.

**☐ தற்போது இலங்கையின் வரலாற்றுக்கும் இந்தத் திரைப்படத்துக்குமான உறவு எவ்வாறானது?**

அரச இராணுவப்படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சிவில் யுத்தம் எம் அனைத்துச் சந்ததிகளையும் பாதித்துள்ளது. இதை மீறி நான் வேறொரு விதத்தில் ஒரு வரலாற்றுக் கதையைப் படைக்க வேண்டும் என்று நினைக்கவில்லை, இந்தத் திரைப்படத்திற்குப் பின்னணி சமாதானமும் யுத்தமில்லாத இடைப்பட்ட சந்தர்ப்பத்தைக் குறிக்கின்றது. எனது முதல் திரைப்படமான 'நிகண்ட தேசய' (மௌன தேசம்) யுத்தத்தின் கொடூரத்தினால்



படிப்பகம்

www.padippakam.com

ஏற்பட்ட உடல் ரீதியான பாதிப்பைச் சித்தரிக்கும் திரைப்படம். நான் தேர்ந்தெடுத்த கதை உடல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் பாதிப்புக்களை ஏற்படுத்தும் யுத்தத்தின் கொடூரம் இளைய சமூகத்தில் பாலியல் ரீதியான பின் விளைவுகளை எவ்வாறு ஏற்படுத்துகின்றது என்பதையே காட்டுகின்றது. 'கைவிடப்பட்ட நிலம்' படத்தின் இந்த இரு காரணிகளும் அடங்கியுள்ளன. இந்த இரண்டு திரைப்படத்தின் முக்கியத்துவமான கருப்பொருள் யுத்தம் பற்றியதல்ல. எனக்குச் சொல்லத் தோன்றுவது யுத்தத்தின் கொடூரம் பற்றியே. மக்களுக்கு யுத்தம் என்பது ஒரு உண்மை இல்லாவிட்டாலும் அது சமூகத்தைச் சீரழிவுக்குட் படுத்தியுள்ளது. அது இலங்கையர்களின் மனதையும் ஆன்மா முழுவதையும் பரந்தளவில் பாதித்துள்ளது. அவர்களின் உடல் ரீதியான ஆசைகளுக்கும் பாதிப்பை உருவாக்கியிருக்கின்றது, இந்த சிவில் யுத்தத்தின் பல்வேறுபட்ட விளைவுகள் அனைத்து மக்களுக்கும் பாதிப்புக்களை மட்டுமே சொந்தமாக்கி இருக்கின்றது. நான் நம்புகின்றேன் இந்த நிலமையை வேறு இடங்களிலும் கண்டுகொள்ள முடியும். இது ஒரு வகையான உலகளவிலான பொதுத்தன்மை.

**□ திரைப்படத்திற்கே உரித்தான தனித்துவமான காரணங்களினால் உங்கள் திரைப்படத்தில் ஒரு ஒற்றைக் கதையில்லாமல் பல்வேறு கதையமைப்பு திரைப்படத்ினுள் ஊசலாடு கிறது.**

நான் சிறு வயதில் கேட்ட எங்களுடைய பூர்வீகமான கலை இலக்கியத்தின் ஒரு பகுதியான புத்தர் பற்றிய பல்வேறுபட்ட கதைகளின் தாக்கம் என்னைப் பாதித்தது. அசைவுகளும் கதையின் நகர்த்தலும் சாதாரண திரைப்படத்தைப் போல் இல்லாமல் சொற்களுக்குப் பதிலாகப் பிம்பங்களைப் பாவிக்கின்ற ஒரு கவிஞனைப் போல் வேறு ஒரு விதத்தில் கதையைச் சொல்வதற்கு என்னிடம் இருந்த ஆவல் அதற்கான உந்துசக்தியாக இருந்திருக்கலாம். எந்நேரமும் அடுத்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து இருக்கும் சம்பிரதாய பூர்வமான ஒரு கதையைப் போல் அடுத்து நடக்கும் சந்தர்ப்பத்தைச் சொல்வதில் எனக்கு உடன்பாடு இல்லை. எனக்குத் தேவைப் படுவது எல்லாம் இங்கு, இப்போது சமகாலத்தில் நடப்பதைப் பற்றிச் சொல்வதற்கான உந்துதலே.

**□ கைவிடப்பட்ட நிலம் திரைப்படத்தில் எல்லாமே உணர்த்தப்படுவது காலம் ஒரே இடத்தில் உறைந்துபோனதை பற்றியே.**

2001ஆம் ஆண்டு நிகண்ட தேசய திரைப்படத்தை இயக்கியபோது யுத்தத்திற்குப் பிறகு காலம் நின்றிருப்பதைப் போல் ஓர் எண்ணம் எனக்கு இருந்தது. நிகண்ட தேசய ஒரு விவரண ரீதியான திரைப்படம் ஆனாலும் எனது எண்ணத்திற்கு அமைய அது ஒரு புனைவான திரைப்படமாகத் தெரிகின்றது.

**இறந்த மனிதனைப் பற்றித் தெரிந்துகொள்வது கடினமாகும், இன்றைய யுத்தச் சூழலில் தெரியாத, அடையாளமற்ற ஒருவரைக் கொலை செய்யும் சூழ்நிலை அதிகமாக காணப்படுகின்றது. ஒருவரையொருவர் உடல் ரீதியாக விலகி தூரத்தில் நிற்பதனால் முகத்தை அறிய முடிவதில்லை. ஆனால் எதிராளி ஒரு கருத்தியல் ரீதியான உருவமாகத் தோற்றுவிக்கப்படுகின்றான்.**

அத்திரைப்படத்தில் காட்டப்படுவதோ உடல் அங்கவீனமுற்ற இளைஞர்கள் குழு தங்கியிருக்கின்ற ஒரு வைத்தியசாலை, எனக்குத் தெரிந்த அந்த இடத்திலும் காலம் உறைந்துபோய் உள்ளதுபோல் தோன்றுகின்றது. அவர்கள் செய்தவற்றைப் பின்னோக்கிச் சென்று மாற்றுவதற்கு அவர்களுக்குத் தற்சமயம் சந்தர்ப்பம் இல்லை.

வெடிப்புகள் நிறைந்த ஓர் இடத்தில் நீங்கள் இருக்கும்போது காலம் நின்றிருப்பது போலவும் எல்லாமே அசையாது இருப்பது போலவும் இருக்கும். எல்லா நபர்களுடைய முகத்திலும் இருப்பது ஒரே உணர்ச்சிகள்தான். அவர்களுக்கும் ஓர் அதிர்ச்சி ஏற்பட்டது போலவே தோன்றும், அக்காரணத்தினால் ஒரே இடத்தில் நிற்பதைப் போல் ஓர் உணர்வு ஏற்படுகின்றது. ஆனால் அத்தோடு நிகண்ட தேச திரைப்படத்தில் பல்வேறு காதல் கதைகள், ஆசைகள் நிறைந்த இளைஞர்குழாம் இருக்கிறார்கள். சிலருக்குக் கால்கள் இல்லாவிட்டாலும் எழுந்து நிற்பதற்கும், விளையாடுவதற்கும் அவர்களுக்குத் தடை ஏற்படுவதில்லை. படைப்புகளுக்கு இருக்கின்றது போல் யுத்தத்திற்கும் முகம் இருக்கின்றது. ஒரு பக்கத்தில் இறந்த அங்கவீனமுற்ற நபர்கள் இருக்கிறார்கள். இன்னொரு பக்கம் உடையாத ஆசைகள் இருக்கின்றன. நான் இதுவரை இயக்கிய திரைப்படங்கள் இந்த ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்களை ஆராய்ந்துப் பார்க்கும், சிலவேளை களில் வேறுபட்ட கோணங்கள் மூலமாக ஒரே கதை யைச் சொல்வதற்கான ஒரு முயற்சியாகவே கூற முடியும்.

**□ கைவிடப்பட்ட நிலம் திரைப்படத்தில் பெரும்பாலான சம்பவங்கள் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு இருண்மை தன்மை யுடன் கடினமாக இருக்கின்றது. அது ஒரு வகையில் சாமுவேல் பெக்கட்டின் 'கரை**



படிப்பகம்

www.padippakam.com





கைவிடப்பட்ட நிலம்

**சேரும் வரை' புத்தகத்தை ஞாபகப் படுத்துகின்றது.**

நான் பெக்கட்டை மிகவும் விரும்புகின்றேன், காப்காவை பற்றியும் அதேபோல் பேச முடியும். சிலவேளைகளில் அவர்களின் தாக்கம் இருந்திருக் கலாம். அதிலிருக்கும் ஒரே வித்தியாசம் என்ன வென்றால், ஒரு நிரந்தரமான கதையை விட்டு விலகிய திரைப்படத்தையே உருவாக்குவது எனது தேவைப்பாடாக இருக்கவில்லை. உண்மையியே எனது திரைப்படத்தை அவ்வாறாக நிர்ணயிக்க முடியாததற்குக் காரணம் என்னவென்றால், அது மிகவும் நிரந்தரமான ஊடுறுவுகின்ற திரைப்படமாக இருப்பதனாலேயாகும். அதில் ஒரு குழப்பமான மனநிலை இருந்தாலும்கூட அது அகத்தில் தெளிவுடனும் புறத்தில் ஏதுவுமற்று இருக்கின்றது.

- **உங்களது திரைப்படத்திலும் 'குற்றமும் தண்டனையும்' நாவலைப் போல் கொலை யும் பொறுப்பு ஏற்பதைப் பற்றிய பிரச்சி னைகளை ஒரே விதத்தில் அலசுகின்றது.**

முக்கியமாக ஒரு இராணுவ வீரனுக்கு அறிமுகமற்ற ஒரு நபரைக் கொலைசெய்ய நேரும் ஒரு சந்தர்ப்பத்தில், அழிந்துபோன மனித நேயத்தினால் ஏற்படுகின்ற குற்றவுணர்வின் வலியின் மௌனம் அவனின் பாவத்திற்கான மன்னிப்பைக் கோருகின்றது.

இறந்த மனிதனைப் பற்றித் தெரிந்துகொள்வது கடினமாகும், இன்றைய யுத்தச் சூழலில் தெரியாத, அடையாளமற்ற ஒருவரைக் கொலை செய்யும் சூழ்நிலை அதிகமாக காணப்படுகின்றது. ஒருவரை யொருவர் உடல் ரீதியாக விலகி தூரத்தில் நிற்பதனால் முகத்தை அறிய முடிவதில்லை. ஆனால் எதிராளி ஒரு கருத்தியல் ரீதியான உருவமாகத் தோற்றுவிக்கப் படுகின்றான்.

- **நிகழும் சம்பவங்களை மறைப்பதற்கோ வெளிப்படையாகத் தெரியப்படுத்துவதற்காக வோ தேவையின்றிப் பாலியல் ரீதியான காட்சிகளை உண்மையாகவே காட்டியிருக் கிறீர்கள்.**

எனக்குப் பாலியல் என்பது ஒரு விடயம் மாத்திரமே. எனது திரைப்படத்தில் அதற்கு முக்கியமான ஒரு இடம் கொடுக்கப்படுகின்றது. இன்னொரு வகையில் அது பிரதான பகுதியாகும். மர்மத்தை ஏற்படுத்தும் ஏதேனும் ஒன்றைச் செய்வதென்பது எனது நோக்கமல்ல, கைவிடப்பட்ட நிலம் பாலியல் பற்றிய திரைப்படம் அல்ல, அந்த அர்த்தத்தின் காரணத்தினாலேயே பாலியலை விசேட காட்சிப்படுத்துவதற்கு என்னால் முடியாது. திரைப்படத்தில் ஏனையப் பகுதிகளுக்குச் சமமான பகுதி பாலியலுக்கும் இருக்கின்றது.

- **பாலியலை விட உங்களது திரைப்படத்தில் பாலியல் ரீதியான அதீதம் பற்றிய தலைப் பாகக் கொண்டதெனக் கூற முடியாதா?**

பாலியல் உணர்வுகள் மாத்திரமல்ல. எனக்கு அதைவிட ஸ்திரமான மனித உணர்வுகளைக் காட்டுவதற்குத் தேவை எழுந்தது. இந்த மனிதர்கள் தூரப்பிரதேசங்களில் தனிமைப்பட்டு இருப்பதன் காரணத்தினால் அவர்கள் மோசமான முறையற்ற சந்தோசத்தை அனுபவிக்கும் நிலமைக்குத் தள்ளப் பட்டு இருக்கிறார்கள். பெரும்பாலான சந்தர்ப்பங் களில் இந்த உணர்வு, உடல் ரீதியான வன்முறையாக வெளிப்படுகின்றது. மிகவும் துயரத்திலிருந்து தப்புவதற்கான ஒரே வழி உடலின் ஆசைகளுக்கு இடமளித்து உணர்வுகளைத் தற்காலிகமாகக் குறைத்துக் கொள்வதேயாகும்.

- **இப்படியான படங்களில் கலைஞர்களுடன் வேலை செய்வது சவாலாக அமைந்ததா?**

ஆமாம். ஆரம்ப காலத்தில் இலங்கையர்கள் இரண்டு விதமான திரைப்பட முறைகளுக்குப் பழகியிருக்கிறார்கள். ஹோலிவூட்டும் பொலிவூட்டும் இவை தவிர வேறுவிதமான திரைப்படத்தைக் காண்பது கடினம். நான் ஆரம்பத்திலேயே எனது திரைக்கதையைத் திரைப்படக் கலைஞர்களிடம் சொன்னபோது இந்தத் திரைப்படம் எதைப் பற்றிக் கூறுகின்றது என்பதை அவர்களால் புரிந்துகொள்ள முடியாது இருந்தது. சாதாரணமான கதையை விட வித்தியாசமாக இருக்கிறது என அவர்கள் நினைத் தார்கள். அதனால் அனைவரும் கேள்வி கேட்கக் கூடியவாறு பல கலந்துரையாடல்களை நான் ஏற்பாடு செய்தேன். ஆரம்ப காலத்தில் அவர்கள் நிலையற்ற தன்மையில் இருந்தாலும்கூட படம் பிடிக்கப்படும் கட்டத்தில் அவர்கள் திரைக்கதையை நன்றாகப் புரிந்துகொண்டு கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் தமது பாத்திரத்தைச் செழுமைப் படுத்தினார்கள். சிலவேளைகளில் தமது பாத்திரம் நல்லதா கெட்டதா அப்படியில்லாவிட்டால் வெள்ளையா கருப்பா இவ்வாறு அவர்கள் சிந்திப்பார்கள். ஆனால் இந்தப்



படிப்பகம்

www.padippakam.com


பிரச்சினைகள் எழவில்லை. ஏனென்றால் எனக்கு நபர்களோ சந்தர்ப்பங்களோ நிரந்தரமானது அல்ல. சாதாரணமாக உளவியல் ரீதியான திரைப்படக் கலைஞர்களை ஒருங்கிணைப்பது முக்கியம் என நான் நம்புகின்றேன். அதன் பெறுபேறாகத் திரைப்படம் நம்பிக்கைக்குரியதாக அமைகின்றது. சில வேளை களில் தேவையற்றவாறு நீண்ட விளக்கப்படுத்த லினால் ஆபத்து ஏற்படக்கூடும். பாத்திரத்தை உருவாக்குவதற்கான சுதந்திரம் நடிகன், நடிகை என்ற கலைஞனுக்கு வழங்கப்பட வேண்டும்.

□ **நகரப் பின்னணியில் திரைப்படத்தை உருவாக்குவதற்கு முயன்றிருக்கிறீர்களா? அல்லது பாலைவனப் பின்னணியும் புல் வளர்ந்த இயற்கைக்கும் நீங்கள் கூடுதலாக விருப்பத்தைக் காட்டுகிறீர்களா?**

எனக்கு நகருக்குள் படப்பிடிப்பு செய்ய முடியும். அதிலிருந்து என்னால் விலகியிருப்பதற்கு எக்காரணமும் இல்லை. அதற்காக எனக்கு ஒரு தேவை இருக்க வேண்டும். எனக்குச் சொல்வதற்கும் படப்பிடிப்புக்கும் தேவையான பின்னணி நகரத்துக் குள் இருக்க வேண்டும். நான் இப்பொழுது கொழும்பு, பாரிஸ் போன்ற பெரிய நகரங்களில் வாழ்வதனால் நான் நினைக்கின்றேன், அந்தச் சூழலை மெதுவாக உணர்ந்துகொண்டு அதற்கு இசைந்து போகும் கதைகளுக்குள் நான் ஈடுபடுவேன். எனக்கே சொந்தமான நகரத்திற்கான திரைப்பட மொழி ஒன்றை நான் தேடிக்கொள்வேன் ஆனாலும் எனது இறந்தகாலமும் எனது இளமைப்பருவமும் பாழடைந்த பின்னணிகளுக்குப் பழகிப்போயுள்ளது. அது எவ்வாறாயினும் கைவிடப்பட்ட நிலம் படப் பிடிப்பு நடத்தப்பட்ட பிரதேசம் உண்மையிலேயே சிவில் யுத்தம் நடந்த பிரதேசம் அல்ல. எனக்கு மிகத் தேவைப்பட்டது. நான் மனதுக்குள் உருவகப்படுத்திக் கொண்ட பின்னணிக்குச் சமமான ஒரு நிலப்பரப்பைத் தேடிக்கொள்வது. அது உங்களுக்குப் பார்க்கும் போது கடினமானதாக இருந்தாலும் அந்தப் படப்பிடிப்புக் களம் வரைபடத்தில் குறிப்பிடப்படாத கடலுக்கு அண்மித்த ஒரு பிரதேசம். ஒரு காலத்துக்கு முன்பு இந்த நிலப்பரப்பு நீருக்குக்கீழ் இருந்தது. மிக அண்மையில்தான் இந்த இடம் நீரிலிருந்து மேல் வந்தது. அதற்கமைய அது முழுமை நிறைந்த தூய்மையான நிலப்பரப்பாகும். உதாரணமாக அங்கு வீசும் காற்றிற்கு நான் மிகவும் விருப்பம் அடைவதுண்டு. அது கடலில் இருந்துவருகின்றது. ஆனாலும் நான் கடலைக் காட்சிப்படுத்தாததனால் இதைப் புரிந்துகொள்ள முடியாது. சத்தம் எங்கிருந்து வருகின்றது என நீங்கள் கேள்வி எழுப்புகிறீர்கள். அதிலிருந்து ஒரு வினோதமான உணர்வு தோன்று கின்றது.

□ **நீங்கள் சொல்லும் வினோதமான உணர்வி னால் உங்களுடைய கதாபாத்திரத்தின் உலகம் வெகுதூரத்தில் இருப்பதைப் போல் தெரிகின்றது. மற்றொரு பக்கத்தில் உலகம் உருவெடுத்த முதல்கட்டத்தில் படமாக்கப் பட்டதுபோல் தெரிகின்றது. திரைப்படத்திற் கான காட்சிக்களம் சரியாக உளவியல் ரீதியான காட்சிப்படுத்தலாகத் தெரிகின்றது.**

உண்மையிலேயே நான் நினைத்தேன் படத்திற்கான பின்னணி எனது மனதில் இருக்கும் காட்சி பிம்பத்திற்கான பின்னணியுடன் சமமாக இருக்க வேண்டும் என்று. அதுதான் திரைப்படத்திற்கு தாள லயத்தைச் சேர்க்கின்றது. நீங்கள் அதை அவதானிக்கத் தவறினால் திரைப்படத்தில் நடக்கும் அனைத்துச் சம்பவங்களும் போலியாகச் சித்தரிப்பதாகத் தோற்றம் ஏற்படும். திரைப்படத்தின்






படிப்பகம்

www.padippakam.com

பின்னணியுடன் அனைத்துமே இயற்கையாக அமைகின்றது. அதில் மனிதனுடைய நிழலின் சாயல்கூடத் தென்படவில்லை, ஆனாலும் திரைப்படத்திற்கான பின்னணியிலிருந்து முழுமையான வெற்றிடத்தின் காரணமாக அங்கொரு வீட்டைக் கட்டுவதற்கான சூழல் ஏற்பட்டது. அது செயற்கைத்தன்மையுடன் தென்படும் என்று நான் மிகவும் வருந்தினேன். நாங்கள் பல்வேறு வர்ணங்களைப் பூசியபிறகு இறுதிப்பெறுபேற்றைப் பெற்றோம்.

**□ கைவிடப்பட்ட நிலம் திரைப்படத்தின் கதாப்பாத்திரங்களைப் பற்றி உங்களின் உள்ளத்திலிருந்து எழும் உணர்வுகளை எவ்வாறு கூறமுடியும்.**

மனிதனுடைய வாழ்க்கையிலுள்ள நிரந்தரமற்ற தன்மையையும் வெறுமையினால் ஏற்படக்கூடிய உளவியல் ரீதியான சிதைவுகளையும் காட்டக்கூடிய சிறந்த ஊடகம் திரைப்படமே. யுத்தமும் சமாதானமும் இறைவன் பற்றிய எண்ணங்களினால் உருவாக்கப்பட்ட உலகத்தில் இருக்கும் தனிமையை, வெறுமையை ஆய்வுசெய்வதற்கு இப்படத்தை பயன்படுத்தியுள்ளேன். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கும் பரபரப்பும் புரிந்துணர்வற்ற தன்மையும் அரவணைப்பும் மனித உறவுகளுக்கிடையிலான தொடர்பைப் பற்றியும் கேள்வி எழுப்பவும் பேசவும் எனக்குத் தேவைப்பட்டது. உடல் ரீதியான ஸ்பரிசத்துடனும் உளரீதியான மகிழ்வுடனும் இத் திரைப்படத்தில் அனைத்துப் பாத்திரங்களையும் தேடுகின்றேன்.

ஒரு செயல் நீண்டகாலமாக நடந்து கொண்டிருக்கும்போது அது ஓர் இடத்தில் நின்று விடுகின்றது. இதனால் ஏற்படுகின்ற ஒரேமாதிரியான உணர்வினால் காலத்தைப் பற்றிய பிரக்ஞை இல்லாமல்போகிறது. அறியாமையுடைய எமது நீண்ட வாழ்க்கையில் இருக்கும் வெறுமையை குறைத்துக்கொள்வதற்கு நாங்கள் முயல்கிறோம். ஒரு பெரிய வறண்டுபோன நிலப்பரப்பில் குறிக்கோளற்ற வாழ்வின் பிரயோசனமற்ற தன்மையைக் காட்டுவதற்கே இப்படத்தை எடுத்தேன். கடைசியாக என் முடிவு ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கும் வேதனைக்குரிய வெறுமையான உணர்ச்சியினால் மனித குலமே அழிவதற்கான சாத்தியம் உண்டு.

**சிங்களத்திலிருந்து தமிழாக்கம்:**

**நா. ஜெகநாத்கண்ணா, சங்கமித்தா**

**சிங்களத்தில்:**

**கௌசல்ய பெரேரா**

பிரெஞ்சுத் திரைப்பட ஏடான 'Cahiers du Cinema' சஞ்சிகையில் வெளியான கலந்துரையாடல்

□ **கவிதை**

## பக்கிரி



## விமர்சனம்

திரைச் சேலையின் மறைவில்
லாந்தர் வெளிச்சத்தில்
அரிதாரத்தை பூசிக்கொண்டே
முணு முணுத்தோம்...
பாடம் செய்யப்பட்ட வசனங்களை
வேடங்கள் கூட
முகம் பார்த்தே ஓதிக்கினோம்.
ஆர்மோனியப் பெட்டியின் வாசிப்பிற்கிடையே
சுற்றி சுற்றி வந்து
துள்ளிக் குதித்தோம்.
தாளக்கட்டுகளை மிஞ்சி ஒலித்தது
கர்ஜனையும்
ஒப்பாரியும்
அழுகையும்
சிரிப்பும்.
காலமேற்றலும் வழிபாடுதலும் நடந்தேற
ஆனந்த களிப்பில்
விழித்திருந்து கேட்டவர்களும்
தூங்கிப் போனவர்களும்
கலைந்து போக...
வேடத்தை கலைத்து விட்டு
மீண்டும்
நாங்களாகவே...



படிப்பகம்

www.padippakam.com




எம். நவாஸ் சௌபி

முயல் குட்டியாய் மெல்ல மெல்லத் துள்ளிக் குதித்து
நட்சந்திரங்களைக் கொறித்தபடி வந்த ஒரு இரவை
செவியில் பிடித்துத் தூக்கி விடிய விடிய விளையாடியிருக்கிறேன்.
பல்லாயிரம் மயில்கள் தோகை விரித்தபடியாக
என் படுக்கையைச் சுற்றி ஓர் இரவு சாமரம் வீசியுமிருக்கிறது.
வாசல் மாமரத்தில் நின்று குயிலாகக் கூவிய ஒரு இரவின்
இசை இன்னும் விழிகளைத் தழுவிக் கொண்டிருக்கிறது.
குழந்தை போல் தவழ்ந்து வந்த ஒரு இரவை
உப்பு மூட்டை சுமந்துமிருக்கிறேன்.
அழகின் உயர்ந்த குணங்களையுடைய பெரும் ஓவியங்களாகவும்
பல இரவுகள் எனது அறைச் சுவரில் தொங்கவிடப்பட்டிருக்கின்றன.
பலகோடி நிறங்களில் பூக்களாகப் பூத்த ஒரு இரவை
நெசவு செய்து என் காதலிக்கு
கைக்குட்டையாகப் பரிசளித்துமிருக்கிறேன்.
இப்படியாகிப்போன இரவுகளுக்குள்ளிருந்து
இன்று விரிந்த தலையுடன் பாம்பாக நெளியும் ஒரு இரவு
ஜன்னல் வழியாக இறங்குகிறது
இந்த இரவில் தோன்றும் நிலவும்
பாம்பு பொத்துக் குடித்துவிட்டுப் போட்ட முட்டைக் கோதுபோல் கிடக்கிறது.
விடிந்த பின் பாம்பு கக்கிய விஷம்
அரச மரங்களாய் முளைத்திருந்தன
பின்நாட்களில் நிலங்கள் பற்றிய கதைகளை உரைப்பதற்காக
பாம்பாக நெளிந்த இரவுக்கு மகுடி ஊதிக் கொண்டிருந்தார்கள் அரசர்கள்.

26.09.2008

ஜ






படிப்பகம்

www.padippakam.com

□ நூல் மதிப்புரை




# இப்படியாயிற்று ஒவ்வொரு தடவையும்

**யாதவன்**

ஆழ்ந்த தேடலும், முறையான தேர்ந்த வாசிப்பும் இலக்கியம் பற்றிய பரிச்சயமும் உள்ளவர்களுக்கு படைப்புக்கள் சித்திக்கின்றன. கவிதைகள் வார்த்தைகளைக் குவிக்காது வார்த்தைகள் ஒவ்வொன்றும் அதனதன் அர்த்தப் பரிமாணத்தில் கையாளப்படுதல் வேண்டும். வடிவங்களைத் தாண்டி அதனதன் விடயப்பரப்பு சார்ந்து பாடுதல் நன்றெனப்படுகிறது. உண்மையான உணர்வுகளுடன் கவிதை தனது எல்லாப் பரிமாணங்களையும் தொட்டு நிற்க வேண்டும்.

அம்பலம் குழுமத்தினால் வெளியீடு செய்யப் பட்ட, 1980ளில் இருந்து இன்று வரையான எழுத்துக் களைக் கொண்ட ந.சத்தியபாலனது முதலாவது கவிதை தொகுப்பு 'இப்படியாயிற்று நூற்றுயொராவது தடவையும்...' வெளிவந்திருக்கிறது. நாற்பத்திரண்டு கவிதைகளை உள்ளடக்கி இலக்கிய உலகில் தனது முதல் படைப்புத் தொகுதியை சேர்ந்திருக்கின்றது அம்பலம் குழுமம்.

கவிஞரின் உரையான "நானும் என் கவிதைகளும் வாழ்க்கையின் மீதும் மனிதர்கள் மீதும் எனக்குள்ள நேசமும், வாழ்தலில் எனக்குள்ள பேரார்வமும் என்னை எழுதுதவைக்கின்றன. மேலான இனிய மனுஷ குணங்கள் என்னை வசீகரிக்கின்றன நெகிழ்த்துகின்றன தொடர்ந்து பல தோல்விகளையே பரிசளித்த இன்மைகளின் நிர்த்தாட்சண்யமற்ற வெகுமதிகள் என்னை துவண்டு போக வைத்தாலும், அவற்றுக்கு அப்பால் எனக்கான தரிசனங்களையும் உவந்தளித்துக் கொண்டிருக்கும் இந்த வாழ்க்கை மீதும் எழுத்தின் மீதும் எனக்கிருக்கும் நேசமும் பிடிப்பும் கரைந்து போய்விட மாட்டா என்றே நம்புகின்றேன்"

மேற்போந்த தன்னிலை சார்ந்த குணவியல்புகளின் ஊடே ந.சத்தியபாலனது கவிதைகளை நோக்க வேண்டியுள்ளது. தனது கவிதைகளின் வாயிலாக, வாழ்க்கையின் நிகழ்கால சமமின்மைகளையும் நிச்சயமின்மைகளையும் உணர்த்தியிருக்கிறார்.

முட்கிரீடங்களை சுமந்த யேசுவானவரின் துயரத்திலும் கொடியது சாதாரண மனிதனின் வாழ்க்கை. அடிமைத் தளைகளுக்குள்ளே அமிழ்ந்து விடுவிக்கப்படாது நீள்கிறது துயர் நிறைந்த வாழ்வு, பாரச் சிலுவைகளும், முள் முடிகளுமே பரிசளிக்கப் பட்ட நிராதரவான வாழ்வின் குறியீடாக அட்டைப் படம் நெஞ்சை நெருடுகிறது. சமகால வாழ்வின் நிஜமும் இதுவே.

"இப்படியாயிற்று ஒவ்வொரு தடவையும்..." எப்படியாயிற்று? ஒவ்வொரு முயற்சிகளின் பின்னான தோல்விகளின் தீனக்குரலா? அல்லது முடிவுறாது நிகழும் முயற்சியின் எத்தனங்களா? அல்லது தோல்விகளின் பின்னும் வெல்வதற்காக தொடரும் நம்பிக்கையின் முயல்வுகளா? அல்லது நூற்றி யோராவது தடவைதான் முடிந்த முடிபா? என பல கேள்விகள் எழாமல் இருக்க நியாயமில்லை.

இடைவிடாது இயங்கிக் கொண்டிருக்கும் அண்டவெளிப் பரப்பினுள் கடந்தகால, நிகழ்கால மானுட வாழ்வின் துயரங்களையும் பயங்கரங் களையும் பேசுகிறர்; வாழ்வின் மீதான நம்பிக்கை களையும் அதிகமான நம்பிக்கையீனங்களையும் பேசும் இத்தொகுதியிலுள்ள கவிதைகள் ஈடு செய்யமுடியாத இன்மைகளையும், இன்மை களிலிருந்து மீளெழதலுக்கான எத்தனங்களையும் பேசுகின்றன; இன்னும் அதிகமாய் வாழ்வின் மீதான நேசிப்பும், நேசிப்பு நிராசையாகிப் போன ஏக்கமுமாய், காயங்களின் மொழியில் பேசுகிறார் சத்தியபாலன்; ஆறாத ரணங்களின் அல்லது வேதனைகளின் சாட்சியுமாய் சிலவேளைகளில் தானே அதன் அனுபமுமாய் நின்று தன்நிலை சார்ந்து எழுதுகிறார்; பெரும்பாலும் தவிர்க்க முடியாதபடி, சூனியங்களால் மட்டுமே ஆன அரசியல் பற்றி பேசும் சத்தியபாலன், அரசியலின் ஆதிக்கத்திற்குள்ளும், அதிகாரத்திற்குள்ளும் அடக்குமுறைக்குள்ளும் மத்தியில் நின்று கொண்டு அலைக்கழிக்கப்படும் நிரந்தரமின்மைகளை சப்பித்துப்புகிறார்; இன்னொரு நாள் இருள் கவ்வ இரத்தமாய் கிடந்த ஒருகாலைப் பொழுது பற்றி, இருளில் அசைகின்ற உருக்கள்,



படிப்பகம்

www.padippakam.com

நிலை, நெடியோடு வீசும் காற்று காவல், ஒரு பின்மாலைப் பொழுது, இருப்பு போன்ற கவிதைகள் மிகுதியான அரசியல் பிம்பங்களை உண்டு பண்ணுகின்றன;

தனி மனித வாழ்க்கையில் மட்டுமன்றி, அரசியல் கட்சிகள் சமூக தலைவர்கள் சில புலம்பெயர் பிரஜைகள், என்.ஜி.ஓ.-க்களில் பணிபுரியும் உள்ளூர் முகவர்கள் ஆகக்கூடுதலாக விடுதலைப் போராட்டங் கள் என தொலைத்து அடையாளமிழந்தவர்கள் ஏராளம்; இன்னுமின்னும் துரோகங்களும், வஞ்சிப்புக்களும் ஏமாற்றங்களும். போட்டியும் பொறாமைகளுமாகவே உலகம் சுற்றுகிறது. நாட்டுக்கு நாடு; கண்டத்துக்கு கண்டம்; பிராந்தியத் திற்கு பிராந்தியம்; வல்லரசுக்கு வல்லரசு; மனிதனுக்கு மனிதன் என குழிபறிப்புக்கள் நிறையவே!

கொலைக் கருவிகளுடன்
அலைகின்றன தெய்வங்கள்...

என்கிறார்.

இந்த யதார்த்த முரண் நம்பிக்கைளின் சிதைவு களாகக் கூட இருக்க முடியும். பைபிளில் கூறப் பட்டது போன்று "இரவில் கள்வர்கள் வருவது போன்று கடவுள் ஒரு நாள் வருவார்" கடவுளினதும் - கள்வர்களினதும் நோக்கம் அவரவர் புரிதல்களுக் குரியது. கொலைக்கருவிகளுடன் அலைகின்றன தெய்வங்கள் எவரின் மோட்சத்திற்காக?

யுத்தம் பெரியவர்களை விடவும் குழந்தைகளின் இயல்புத் தனத்தினை தின்று ஏப்பம் விட்டிருக்கிறது. குழந்தைகள் எவரும் இப்போது குழந்தைகளாக இல்லை. பசித்துப் போன பிள்ளைக்கு பாலூட்ட தாயில்லை. அரவணைக்க தந்தையில்லை. எப்பொழுதும் குழந்தைகளுக்கு கூட ஏதேனும் நிகழலாம்.

சத்தியபாலன் "கூடிழந்த ஒரு பறவைக் குருவின் கதை"யில்

"கேட்கிறதா உனக்கென்
உயிரின் பாடல்"
தாய்மடி தேடும் மழலையின்
கதறல்;

யுத்தம் கொடியது என்பதற்கு இவ்வரிகளை விட வேறெதும் சாட்சிகள் வேண்டுமா? வேண்டுமெனில் அண்மையில் வன்னியில் நடந்த யுத்தத்தின் போது "குழந்தை ஒன்று தன் தாயைத் தேடிச் சட்டைக் குள்ளிருந்த முலைக்காம்பை எடுத்து தன்னிச்சையாக தானே பால் குடித்தது. குழந்தைக்கு தெரியாது தனது அம்மா பிணமாக மணிக்கணக்காகி விட்டதென்று". இதற்கு நானே சாட்சியுமாயிருக்கிறேன். சத்தியபாலன் உண்மையின் பாடலொன்றை சோகமாக ஒலிக்க விட்டிருக்கிறார்.

சொல்லலங்காரங்கள் அற்று, புனைவுகள் அற்று புற உலகத்தை அதன் படிம வெளியாக மாற்றுவதன் மூலமே உணர்வுகளை வெற்றிகரமாகச் சொல்ல முடியும். படிமநிலைகளின் ஊடே சில புலக் காட்சிகளை தந்து, கவனத்தை ஈர்க்கக் கூடிய வரிகளில் தனது கவிதைகளை நிலை நிறுத்தி யிருக்கிறார் சத்தியபாலன். படிமங்களை செதுக்கக் கூடாது. வலிந்து இழுத்துப் போடக் கூடாது. கவிதை வாலாயமான கவிஞர்களுக்கு படிமங்கள் தானாகவே வந்து விழும்.

சத்தியபாலன் தனது கவிதைகளை மௌனமாக நகர்த்துகின்றார். ஆனாலும் அந்த மௌனத்திற்குள் தூங்கிக்கொண்டிருக்கும் பேரொலி மென்னுணர்வு சார்ந்த கவிதைகளிலிருந்து இன்னொரு உணர் தளத்திற்கு இழுத்துச் செல்கிறது.

மெல்லென வீசும் காற்று தவிர்ந்த சில வலிந்தெடுக்கப்பட்ட செயற்கைச் சப்தங்கள்; இருப்பினும், காதைக் குடையாது, மனதைக் குழப்பாது, பேரமைதியாய் நகர்கின்ற கவிதைகள் அக்கிரமக்காரர்களை நெருப்பிலிட்டு காய்ச்சுகின்றன.

இன்னுமென்ன பா. அகிலன் பின்னுரையில் குறிப்பிடப்பிடுவது போன்று,

"அவரவர்க்கு அவரவர் பாத்திரங்கள். அவரவர் கிண்ணங்கள். சத்தியபாலன் "மனவோட்டின் மென்பாகம் வெடித்து" வடியுமொரு திரவத்தை தன் கிண்ணத்தில் ஏந்துகிறார். கசப்பும் சோகமும் அதன் பிரதான உள்ளீடுகள். வாழ்வு பற்றிய வியப்பும் நேசமும் அவற்றின் கலந்துள்ளனவாயினும் அதன் தொனிப் பொருள் என்னவோ அடிப்படையில் துக்கம். யதார்த்தங்களால் தொடர்ந்து அலைக் கழிக்கப்படும் சத்தியபாலன் "வாழ்வதற்கான எத்தனங்களே வாழ்வாகிப் போய்விடுகிற" நியதியின் முன் துக்கித்த பார்வையாளனாகவும் - விலகிச் செல்ல முடியாத பங்காளியாகவும் நின்று கொண்டிருக்கிறார்.

ந.சத்தியபாலன் அவர்களின் படைப்பு வெளிவரும் இச்சூழல், இயந்திரமயமாகிப் போன இவ் வாழுலகில், நலிவடைந்து வரும் படைப்பாக்கச் சூழலில் "இப்படியாயிற்று நூற்றியோராவது தடவையும்..." புதிய நம்பிக்கையையும் வீச்சையும் தருகிறது. ஏற்கனவே இவர் பல நூல்களை படைப்புலகத்திற்கு தந்திருக்க வேண்டும் என்கிற அவாவே மேலோங்கி நிற்கிறது.

"இப்படியாயிற்று நூற்றியோராவது தடைவை யும்...." இது வெறுமனே தொகுப்பின் தலைப்பல்ல, வாழ்வின் வலி. வாழத்துடிக்கும் மாந்தர்களின், - ந. சத்தியபாலனது வார்த்தைகளில் கூறுதாயின் - வாழ்வின் துயரிசை.

▣



படிப்பகம்

www.padippakam.com





# இலங்கை அரசியல்; தேசிய வாதங்களும் அதன் தோல்விகளும்



வி. சிவலிங்கம்

இலங்கைவாழ் தமிழர் சமூகம் தற்போது திருப்புமுனையில் கொண்டுவந்து நிறுத்தப் பட்டுள்ளது. கடந்த அறுபது வருடத்திற்கும் மேலாக இச்சமுதாயத்தின் மேல் திணிக்கப்பட்டிருந்த இரட்டை வேட அரசியல் அதற்கான அதிக விலையைக் கொடுத்துள்ளது. ஒருபுறத்தில் ‘தனிஈழம்’ எனவும், மறுபுறத்தில் ‘சமஷ்டி’ எனவும் ‘உள்ளக சுயநிர்ணய உரிமை’ எனவும் பல்வேறு முரண்பட்ட குழப்ப அரசியலை மக்கள் மீது விதைத்து ஆதிக்கத்தை நிலைநாட்ட முயன்ற பிரிவினர் தமிழ் மக்களின் சமூக வாழ்வை சீரழித்ததுடன் இறுதியில் அவர்களே அவர்களது சுயநலமிக்க அரசியலுக்கும் இரையாகி விட்டுள்ளனர். இந்தநிலையில் தமிழர் சமூகம் தனது கடந்தகால அரசியலிலிருந்து மீண்டெழ வேண்டு மெனில் தனது தவறுகளிலிருந்து அர்த்தமுள்ள பாடத்தை கற்றுக் கொள்ள வேண்டும். இதன்மூலமே அரசியல் விடுதலையையும் சமூக மேம்பாட்டையும் எட்ட முடியும்.

சுதந்திரத்தின் பின் 60 ஆண்டுகால தமிழர் அரசியலில் முப்பது ஆண்டுகள் அகிம்சை வழியும், முப்பது ஆண்டுகள் வன்முறை சார்ந்த ஆயுத அரசியலாகவும் கழிந்துள்ளது. இந்த இரண்டு காலகட்டத்திலும் வெவ்வேறு அரசியல் தலைமைகள் தமிழ்த் தேசிய கோட்பாட்டை நோக்கியே நகர்ந்தார்கள். இப்போது முடிவில் தமிழ் மக்கள் இப்போராட்டத்தினால் மிகவும் களைப்புற்று பலவீனப்படுத்தப்பட்டு இலங்கை அரசினை நோக்கியே மீண்டும் தள்ளப்பட்டுள்ளனர். தமிழ் மக்கள் கைவிடப்பட்டு விட்டார்கள். இந்த நிலைமைக்கு பெருமளவிலான காரண கர்த்தாக்கள் தமிழ்த் தேசிய அரசியல் தலைமைகளே.

தமிழ் மக்களுக்குள் முன்னெடுக்கப்பட்ட இப்போராட்டங்களின்போது மக்கள் தமது சக்திக்கு அப்பாற்பட்ட அளவிற்கு தமது சகல வளங்களையும் வழங்கியிருந்த போதிலும் வார்த்தைகளால் வடிக்க முடியாத மனிதத் துயரங்களையும் நெருக்கடிகளையும் எதிர்கொண்டு நின்றபோதிலும் அதனை சரியான வழியில் பயன்படுத்தி சாணக்கியமான முறையில் அரசியல் சமூக மேம்பாட்டை பெறும் ஆற்றலும் அரசியல் தீர்க்கதரிசனமும் இத்தலைமைகளிடம் இல்லை என்பதை மிகத் தெளிவாகக் காணலாம்.

இன்றைய மோசமான வீழ்ச்சிக்கும் தோல்விக்கும் காரணமென்ன? அரசியல் நெறியில் ஏற்பட்ட கோளாறுகள் என்ன? என்பது குறித்து மிகவும் ஆழமான விரிவான அரசியல் விவாதங்கள் நடாத்துவது தற்போது அவசியமாகி உள்ளது. அந்த வகையில்தான் இக்கட்டுரையின் பங்களிப்பும் அமைகிறது.

## இலங்கையில் தேசியவாதம்

இலங்கை அரசியலில் தேசியவாதம் என்பது பிரதான இயங்குவிசையாக தொடர்ந்தும் இருந்து வருகிறது. சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்தில் குடியேற்றவாத ஆதிக்கத்திலிருந்து தம்மை விடுவிப்பதற்காக தேசியவாதம் பயன்படுத்தப்



படிப்பகம்

www.padippakam.com

பட்டது. இத்தேசியவாதம் உள்ளடக்கத்தில் இனவாத கூறுகளைக் கொண்டிருந்த போதிலும் இடதுசாரிக் கட்சிகளின் வளர்ச்சியும் ஆளுமையும் இனவாத அடையாளத்தை பெருமளவில் தவிர்த்தும் தணித்தும் வைத்திருந்தன.

பிரித்தானிய குடியேற்ற ஆட்சியிலிருந்து முழு இலங்கையையும் விடுவித்துக் கொள்வதற்கான நிகழ்ச்சி நிரலே அன்றைய இடதுசாரிகளின் போராட்டமாகவிருந்தது. சாமான்ய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது, தேசிய வளங்களை ஏகாதிபத்தியவாதிகளின் ஆதிக்கத்திலிருந்து விடுவிப்பது என்பன அரசியலில் பிரதானமாக விருந்ததால் இடதுசாரிகள் முன்னெடுத்த இப் போராட்டத்தில் மொழி, இன, மத பேதமின்றி சகல மக்களும் கலந்து கொள்வது சாத்தியமாக விருந்தது.

சிங்கள தேசியவாதம் இப்பரந்த போராட்டத்தில் தன்னையும் இணைத்துக் கொள்வதில் மாற்று வழிகளும் அவர்களுக்கு அன்று இருக்கவில்லை. இடதுசாரிகளுக்கும் இத்தேசியவாதிகளுக்கும் இடையே ஐக்கியம், போராட்டம் என்ற அடிப் படையில் உறவுகள் இருந்தன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன வைத்திருந்த உறவுகள் இதனடிப் படையிலேயே அமைந்திருந்தன.

சுதந்திரத்திற்கு பின்னான காலப்பகுதியை அடுத்து பாராளுமன்ற அரசியல் பலம் பெற்றதன் பின், சிங்களத் தேசியவாதம் வெறுமனே ஒரு சாராரின் கோட்பாடு என்ற எல்லையைத் தாண்டி நாட்டின் ஏனைய சிறுபான்மை இனங்களுக்கு விரோதமான போக்காக வளர்ச்சிபெற்றது. சிங்களத் தேசியவாதம் சிங்களத் தேசம், பௌத்த தேசம் என்கிற கோட்பாடுகளை வரையறுத்தது. இவ்வாறு சிங்களத் தேசியவாதம் அதிதீவிர நிலைப்பாட்டை எடுத்ததால் ஏனைய சிறுபான்மை இனங்கள் பாதுகாப்பற்ற நிலைக்கு தள்ளப்பட்டனர். இங்கு நாம் கவனிக்க வேண்டிய இன்னுமொரு விடயம் யாதெனில், தமிழ் மக்கள் மத்தியிலேயே குடியேற்ற ஆட்சியாளர்களின் சலுகைகளை அனுபவித்து வந்த பிரிவினர் இந்த சிங்கள தேசியவாத அதிகார வர்க்கத்துடன் ஏதோ ஒருவகையில் கூட்டாகவும் இயங்கினர்.

பாராளுமன்ற பிரதிநிதித்துவ அரசியல் அதிகாரத்தை தக்கவைப்பதற்காக இனவாத அரசியலாக ஊக்கம் பெற்று வளர்ச்சி அடைந்ததன் விளைவாக, தமிழர் அரசியலில் ஒருபகுதி தமிழ் குறுந் தேசியவாத அரசியலாக மாற்றங்கண்டது. சிங்கள பேரினவாத அரசியல், தமிழ் குறுந் தேசியவாத அரசியல் என எதிரும் புதிருமாக 1978ம் ஆண்டின் அரசியலமைப்பை அடுத்து வடிவ மெடுத்தன. நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி, விகிதாசாரப் பிரதிநிதித்துவம், இதன் ஊடான சிறிய இனவாதக் கட்சிகளின் அரசியல் பலம் என்பன இந்த நிலைமை தீவிரமடையச் செய்தன.

நிறைவேற்று அதிகார முறைமை காரணமாக பாராளுமன்றம் செயலற்றதாக மாற்றப்பட்டது. இரு அதிகார மையங்களுக்கு இடையிலான அரசியல் மோதல் நிலைமையை மேலும் சிக்கலாக்கியது. தேசிய இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கான தயக்கப் போக்கை தொடர்ந்தும் கடைப்பிடித்துவந்த சிங்கள தேசிய கட்சிகளுக்கு, விகிதாசாரப் பிரதிநிதித்துவம் காரணமாக அதிகாரம் பெற்ற சிறிய இனவாதக் கட்சிகளின் போக்கும் தடைக்கற்களாக செயற்படும் அவர்களது அரசியல் நிலைப்பாடுகளும் வாய்ப் பாகவே அமைந்தன. அரசியல் கட்டுமான அமைப்பிலுள்ள குளறுபடிகள், பிரதான கட்சிகளின் இனவாத நிலைப்பாடுகள், பன்மைத்துவ, ஜனநாயகச் சூழலுக்கு எதிரான போக்குகள், ஏற்கெனவே தமிழர் சமூகத்திற்குள் நிலைகொண்டிருந்த குறுந்தேசிய வாதத்திற்கு ஊக்கியாக அமைந்தன. இந்த நிலைமைகள் ஐக்கிய இலங்கைக்குள் வாழ முடியாது என்கிற தோற்றப்பாட்டை மேலும் இறுக்கி கடின மாக்க உதவின.

### இராணுவ அணுகுமுறை

நாட்டில் காணப்பட்ட பொருளாதார, மற்றும் அரசியல் பிரச்சனைகள் இராணுவ அணுகுமுறை என்ற இன்னொரு பரிமாணத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட விவகாரம் தனியான அம்சமாகும். தமிழ்ப் பிரதேசங்களில் காணப்பட்ட அரசியல் சார்ந்த வன்முறை பலமான ராணுவக் கட்டுமானமாக மாற்றம் பெற்ற போது அவ்வன்முறை தமிழ்ப் பிரதேசங்களில் காணப்பட்ட ஜனநாயக நிறுவனங் களை சீரழிக்கத் தொடங்கியது. அரச அதிகாரிகள் சம்பளத்தை அரசாங்கத்திடமிருந்து பெற்ற போதிலும் நிர்வாக உத்தரவுகளை புலிகளிடமிருந்தே பெற்றனர். தமிழ்ப் பிரதேச நிர்வாகங்கள் தமது கட்டுப் பாட்டிற்குள் செயற்படுவதாகவும், அரச இறைமை அதிகாரம் நாடு முழுவதும் பிரயோகிக்கப் படுவதாகவும் பாசாங்கு காட்ட வேண்டிய நிலையில் இருந்த அரசு இச் சிக்கலான போக்கை அனுசரித்தே சென்றது. ஆனாலும் அரச நிர்வாகம் என்பது நாட்டின் ஒரு பிரதேசத்தில் செயலற்று இருந்தது என்பதே உண்மை நிலையாகும். இந்நிலை மிக நீண்ட காலத்திற்கு இழுபட்டுச் செல்லச் செல்ல சிங்கள தேசியவாதம் தமக்கு ஏற்பட்டு வரும் தோல்வி என அதனைக் கருதத் தொடங்கியது.

சிங்கள தேசியவாதம், தமிழ் குறும் தேசியவாதம் என்பன ஒரே திசைகளிலே பயணித்தன. அதுவும் ஒன்றுடன் ஒன்று மோதும் முடிவை நோக்கியே நகர்ந்தன. இரு சாராரும் போருக்கான முன்னெடுப் புகளை நோக்கிச் சென்றதன் விளைவே ராணுவ மயமாக்கலாகும். சர்வதேச அங்கீகாரம் கிடைத்ததாக கருதிய விடுதலைப் புலிகள் தலைமையிலான தமிழ்



படிப்பகம்

www.padippakam.com



குறும் தேசியவாத சக்திகள் சிங்கள அதிகார வர்க்கமும் அதன் ராணுவமும் பலவீனமான நிலையில் இருப்பதாகவும், அதன் காரணமாகவே பேச்சுவார்த்தைக்கு அழைப்பதாகவும், இந் நிலையில் தமது ராணுவ பலத்தை மேலும் அதிகரிப்பதன் மூலம் தமது தமிழீழக் கோரிக்கையை அடைந்துவிடலாம் எனவும் தப்புக் கணக்குப் போட்டார்கள். இலங்கை ராணுவத்திற்குக் கிடைத்த தோல்விகள், அரசு மட்டத்திலே அதாவது ரணில், சந்திரிகா ஆகியோரிடையே ஏற்பட்ட தகராறுகள் அரசின் பலவீனமாகவும் கருதப்பட்டன. ராணுவமும், அரச கட்டுமானமும் ஆட்டம் கண்டுள்ளதாக கருதிய விடுதலைப்புலிகள் தலைமை அதுவே போர் தொடுப்பதற்கான தருணம் எனவும் கருதியது. இதன் வெளிப்பாடே 2005ம் ஆண்டின் மாவீரர் தின உரையின் சாராம்சமாக அமைந்தது.

விடுதலைப்புலிகளை முற்றாக ஒழிக்க வேண்டுமென சிங்கள அதிகார வர்க்கம் தீர்மானித்த அதேவேளை அதனை நிறைவேற்றுவதற்கான தருணத்தை எதிர்பார்த்திருந்தது. விடுதலைப்புலிகள் ராணுவத்தின் மேல் கிளைமோர் தாக்குதல்கள், சாதாரண சிங்கள மக்கள் மீது துப்பாக்கிச் சூடு என தினமும் செய்திகள் பத்திரிகைகளை நிறைத்தன. சாமான்ய மக்கள் அச்சத்தில் வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். அரசு செயலற்று இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டது. பொறுமை காக்கும்படி அரசுத் தலைவர்கள் சமாதானம் கூறினார்கள். புலிகளின் தாக்குதல்கள் படிப்படியாக தினமும் அதிகரித்தபோது சிங்கள மக்கள் மத்தியிலே பெரும் வெறுப்பு உச்ச நிலையை அடைந்தது. இறுதியாக சிங்கள மக்களின் நீர்ப்பாசன வசதிகளை மாவிலாறு அணைக்கட்டு மூலமாக புலிகள் தடுத்தபோது அதுவே ராணுவத் தாக்குதல்களுக்கான ஆரம்பமாகவும் அமைந்தது.

**இனவாத அரசியலின் தீவிரபோக்கு நாட்டின் பாரம்பரிய அரசியல் நிர்மாணத்தை மிகவும் கீழான நிலமைக்கு எடுத்துச் சென்று அரசு என்பது தோல்வி அடைந்த ஒன்று என வர்ணிக்கும் அளவுக்கு மாற்றியுள்ளது. ஆசியாவிலே மிக நீண்டகால ஜனநாயக நாடு எனக் கருதப்பட்ட இலங்கை தற்போது மனித உரிமை மீறல்களில், பத்திரிகையாளர்களுக்கு மிகவும் பாதுகாப்பற்ற நாடு என்ற வரிசையில் வைக்கப்படும் அளவுக்கு மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன.**

பயங்கரவாதம் தொடர்பாக சிங்கள மக்கள் மத்தியிலே நிலவிய அச்சம் பயங்கரவாதத்திற்கெதிரான இறுதி யுத்தத்தில் சிங்கள இளைஞர்களை இணைப்பதற்கான புறச் சூழலை வழங்கியது. பயங்கரவாதம், சிங்கள தேசியவாதம், சிங்கள பேரினவாதம், பௌத்தமத மேலாதிக்கம் என தனித்தனியாக செயற்பட்ட சக்திகள் யாவும் மகிந்த ராஜபக்ஸ தலைமையில் அணி திரண்டன. ராணுவம் இதற்கான தலைமையை வழங்கியது.



படிப்பகம்

www.padippakam.com

ாருக்குத் தயாராகிய அரச யந்திரத்தையும் டிக்கைக்கு ஏற்ற வகையில் நிக்கப்பட்டன. குறிப்பாக மயான கண்காணிப்பிற்கு ந்திரிகையாளர்கள், அரசியல் ட்டார்கள். படுகொலை செய்யப்ப . முக்கிய பிரமுகர்கள், வர்த்தகர்கள், சிவிலியன்கள் கடத்தப்பட்டார்கள். பொலீஸ், ராணுவம் என்பன சட்டத்திற்குப் புறம்பான வகையில் செயற்படத் தொடங்கின. சிங்கள தேசியவாதம் ஏனைய தேசிய இனங்கள் மீதான தாக்குதலைத் தொடுத்து தன்னைத் தீவிர பேரினவாத மட்டத்திற்கு எடுத்துச் சென்றது.

### இன்றைய இலங்கை

இனவாத அரசியலின் தீவிர போக்கு நாட்டின் பாரம்பரிய அரசியல் நிர்மாணத்தை மிகவும் கீழான நிலமைக்கு எடுத்துச் சென்று அரசு என்பது தோல்வி அடைந்த ஒன்று என வர்ணிக்கும் அளவுக்கு மாற்றியுள்ளது. ஆசியாவிலே மிக நீண்ட கால ஜனநாயக நாடு எனக் கருதப்பட்ட இலங்கை தற்போது மனித உரிமை மீறல்களில், பத்திரிகையாளர்களுக்கு மிகவும் பாதுகாப்பற்ற நாடு என்ற வரிசையில் வைக்கப்படும் அளவுக்கு மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன.

நாட்டின் அரசியல் சூழல் அண்மைக்காலமாக புதிய மாற்றம் ஒன்றை நோக்கி நகர்ந்தேவிட்டுள்ளது. அதாவது அரசியல் கட்டுமானங்களில் ராணுவ ஆதிக்கம் பலமடைந்து வருகிறது. ராணுவ உயர் அதிகாரிகள் அரசியல் பேசும் அளவுக்கு மாற்றங்கள் காணப்படுகின்றன. அத்துடன் ராணுவ அதிகாரிகள் சிவில் அதிகாரிகளின் பதவிகளை நிரப்பி வருகின்றனர். பாதுகாப்பு என்ற அடிப்படையில் சிங்கள பேரினவாத அரசியல் நிகழ்ச்சி நிரல் அரங்கேறி வருகிறது. இதனால் நாட்டின் சிறுபான்மைக் குழுக்கள் அச்சமடைந்துள்ளன. குறிப்பாக விடுதலைப்புலிகளைத் தோற்கடித்தது இலங்கை ராணுவம் எனக் குறிப்பிடுவதை விடுத்து சிங்கள பௌத்த இளைஞர்களின் தியாகங்களே நாட்டைக் காப்பாற்றியதாக பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுவது தேசியவாதத்தின் புதிய பரிமாணத்தை உணர்த்துகிறது. விடுதலைப்புலிகளின் பயங்கரவாதத்தைத் தோற்கடித்ததன் மூலம் நாட்டிற்குப் புதிய சுதந்திரம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாக விபரிக்கப்படுகிறது. இப்போக்குகள் உள்நாட்டு அரசியலில் மட்டுமல்ல வெளிநாட்டு அரசியலிலும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக மேற்கு நாடுகளின் பிடியிலிருந்து விலகிச் செல்வதாகக் காட்டும் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேற்குலக நாடுகள் இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக குரல் கொடுத்தமை, ஐரோப்பிய யூனியன் சந்தை வசதிகளை சலுகை அடிப்படையில் பயன்படுத்தும் ஏற்பாடுகளுக்கு தடையாக இருந்தமை, உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதிய உதவிகளைத் தாமதப்படுத்தல் என்பன இலங்கையின் மேற்குலக போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டு வருவதை உறுதி செய்கின்றன. அதுமட்டுமல்லாது சமீப காலமாக இலங்கை அரசு நட்புப் பாராட்டும் அரசுகள் மனித உரிமை மீறல்களுக்கு மிகவும் பேர் போன அரசுகளாகும். ஈரான், லிபியா, பாகிஸ்தான், சீனா, பர்மா போன்ற நாடுகளோடு இலங்கையின் உறவுகளும், கூட்டுகளும் ஓர் ஆரோக்கியமான உறவுகளாக கருத முடிய வில்லை.

இலங்கை அரசியலில் ஏற்பட்டுவரும் மாற்றங் களுக்கான அடிப்படைகளாக அங்கு காணப்படும் மிகவும் பிற்போக்குத் தன்மையுள்ள தேசியவாதமே காரணமாக அமைகிறது. தமிழ் குறும் தேசிய வாதத்தில் காணப்பட்ட பாசிச குணாம்சங்கள், சமூக விரோத சக்திகளினதும், பிற்போக்கு சுயநலக் கும்பல்களின் இருப்பிடமாக மாறிய போராட்டத் தலைமை, இதற்கு ஆதாரமாக வெளிநாடுகளில் செயற்பட்ட சர்வதேச அரசுகள், இலங்கை அரசு தொடர்பாக தற்போது நடந்து கொள்ளும் முறை அதனை இன்னொரு பக்கத்திற்கு தள்ளியுள்ளது. புதிய நட்பு நாடுகளாக தேர்வு செய்யப்பட்டுள்ள பாகிஸ்தான், ஈரான், லிபியா, சீனா, பர்மா போன்ற நாடுகளின் அரசுகள் உள்நாட்டில் மிகவும் ஜனநாயக விரோத கட்டுமானங்களைக் கொண்டனவாகும். ராணுவமே அரச கட்டுமானங்களில் ஆதிக்கம் செலுத்தும் போக்கைக் கொண்டன. இதனால் மனித உரிமை மீறல் இந் நாடுகளில் மிக அதிக அளவில் காணப்படுகின்றன. இவ்வாறான மிகவும் பாரதூரமான ஜனநாயகத் தன்மையற்ற அரசுகளோடு கூட்டுகளை உருவாக்கி வரும் போக்கு மிகவும் அச்சத்தைத் தருவதாகும். இக் குழப்பமான அரசியல் நிலமைகளின் இயக்கு சக்தியாக தேசியவாதமே காணப்படுகிறது. சிங்கள அரசியலில் சமீபத்தில் எற்பட்டு வரும் மாற்றங்கள் நாட்டின் கடந்த காலங்களில் காணப்படாத அம்சங்களாகும். இவை குறித்து பல தரப்பட்ட வாதங்கள் இல்லாமலில்லை. குறிப்பாக மேற்குலக நாடுகளின் சந்தையாக செயற்பட்டு வந்த இலங்கை தற்போது அந்தக் கூட்டிலிருந்து வெளியேறி வருவதாகவும், இதனால் நாடு ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து விலகுவதாகவும் கூறி இவ்வாறான அடிப்படை மாற்றத்தைப் பலப்படுத்த வேண்டுமென்ற வாதங்கள் முன் வைக்கப்படுகின்றன. இவ் வாதங்களில் சில நியாயங்கள் காணப்பட்ட போதிலும் மகிந்த ராஜபக்ஸ அவர்களின் ஆட்சிக் காலத்தில் காணப்படும் அதாவது சில வருடங்களாக





படிப்பகம்

www.padippakam.com

**கடந்த 30 வருட காலமாக நாட்டில் இடம்பெறும் வன்முறை சார்ந்த அரசியல் போக்கு சிங்கள தேசியவாத சக்திகளின் இருப்புக்கு மிகவும் ஊக்கமளித்துள்ளது. ராணுவ மயமாக்கல் என்பது சகல மட்டங்களிலும் நடந்தேறுகிறது. இவ் ராணுவ மயமாக்கல் தேசியவாதம் கலந்த கலவையாக மாறி வருவதால் சிறுபான்மை மக்களிடையே மிகுந்த அச்சம் ஏற்பட்டுள்ளது.**

மேற்கொள்ளப்படும் மாற்றங்களை மட்டும் வைத்து தேசத்தின் முழுமையான போக்கைத் தீர்மானிக்க முடியுமா? என்பதும், இத்தகைய மாற்றங்கள் கொள்கை ரீதியான தீர்மானங்களின் விளைவாக ஏற்பட்டதா? அல்லது சிக்கலான பிரச்சனை களிலிருந்து தற்காலிகமாக விடுபடுவதற்காக எடுக்கப் பட்ட முடிவுகளா? என்பது இன்னமும் தெளிவாக இல்லை. அத்துடன் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஐரோப்பிய அபிவிருத்தி வங்கி போன்றவற் றிடம் கடன் வசதியைக் கோரி நிற்கும் அரசு பொருளா தார கட்டுமானங்களில் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்துமா? என்பது கேள்வியாக உள்ளது.

ஆட்சியாளர்கள் தாம் எதிர் நோக்கியுள்ள பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சனைகளிலிருந்து விடுபடுவதற்கு தமது அணுகுமுறைகளில் தேசியவாத அம்சங்களைப் புகுத்தி மக்களின் கவனத்தை திருப்ப எடுக்கும் உத்திகளாகவே இவை உள்ளன. தமிழ் குறும் தேசியவாதமும், அதன் வன்முறை சார்ந்த அரசியலும் தேசிய பொருளா தாரத்தையும், அரசுக் கட்டுமானத்தையும் மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளியுள்ளது என்பதே யதார்த்தமாகும். நாட்டில் காணப்பட்ட ஜனநாயக நிறுவனங்கள் எதேச்சாதிகார சக்திகளின் இருப்பிடமாக மாறியமைக்கு தற்போதுள்ள அரசியல் அமைப்பு பிரதான காரணம் என்பதை நாம் ஏற்றாக வேண்டும். இதனால் ஓர் குழுவினரின் ஆதிக்கத்தின் இருப்பிடமாக அரசு யந்திரம் மாறியுள்ளது. பயங்கரவாத ஒழிப்பு என்ற போர்வையில் இடம் பெறும் இந் நடவடிக்கைகள் அரசியல் அமைப்பின் ஏனைய செயற்பாடுகளை முழுமையாக முடக்கி ஓர் ராணுவ ஆட்சியை ஒத்த நிலமைகளை ஏற்படுத்தி வருகின்றன.

கடந்த 30 வருட காலமாக நாட்டில் இடம்பெறும் வன்முறை சார்ந்த அரசியல் போக்கு சிங்கள தேசியவாத சக்திகளின் இருப்புக்கு மிகவும் ஊக்கமளித்துள்ளது. ராணுவ மயமாக்கல் என்பது சகல மட்டங்களிலும் நடந்தேறுகிறது. இவ் ராணுவ மயமாக்கல் தேசியவாதம் கலந்த கலவையாக மாறி வருவதால் சிறுபான்மை மக்களிடையே மிகுந்த அச்சம் ஏற்பட்டுள்ளது.

சிங்கள பகுதிகளில் தாண்டவமாடும் சிங்கள பௌத்த மத மேலாதிக்க சிந்தனைகள் சிங்கள கிறிஸ்தவர்களை, முஸ்லிம்களை மிகவும் இக்கட்டான நிலைக்குத் தள்ளியுள்ளது. எனவே நாட்டில் வாழும் மக்கள் மொழி ரீதியாக மட்டுமல்ல மத ரீதியான சிறுபான்மையினரும் சிங்கள தேசியவாத எழுச்சியினால் பாதிக்கப் பட்டுள்ளார்கள்.

இலங்கையின் எதிர்காலம் குறித்து நாம் தற்போது சிந்திப்பதாயின் தேசியவாத சிந்தனைகளின் தாக்கங்கள் குறித்து விரிவாக பேச வேண்டியுள்ளது. பல் தேசிய இனங்கள் வாழும் ஒரு நாட்டில் ஜனநாயகம் நிலைக்க வேண்டுமாயின் பெரும் பான்மை இனம் குறித்துப் பேசுவதா? அல்லது நாட்டில் வாழும் சகல பிரஜைகளினதும் சம உரிமை பற்றிப் பேசுவதா? என்பதை விவாதிக்க வேண்டும். இங்கு இறைமை என்பது பாராளுமன்றத்தின் இறைமையா? அல்லது மக்களின் இறைமை அதிகாரமா? மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிப்பதா? அல்லது அரசியல்வாதிகளின் அபிலாஷைகளைப் பிரதிபலிப்பதா? அரசியல் அமைப்பு என்பது பன்மைத்துவ போக்கைக் கொண்டிருக்க வேண்டுமா? அல்லது பெரும்பான்மை இனத்தின் தயவின் அடிப்படையில் தீர்மானிக்கும் போக்கைக் கொண்டிருக்க வேண்டுமா? என்பன நம்முன்னுள்ள முக்கியமான கேள்விகளாகும்.

இங்கு பன்மைத்துவம் என்பது இனங்கள் சார்ந்தவை மட்டுமல்ல, பெண்களின் உரிமை, சிறுவர்களின் உரிமை, அங்கவீனர்களின் உரிமை என பல்வேறு அம்சங்கள் பற்றிப் பேசவேண்டியுள்ளது. இவை பற்றிய வாதங்கள் எழுப்பப்படும் போதுதான் தேசியவாதம் அதிகாரமற்றதாக கீழிறக்கப்பட முடியும்.

**சுயநிர்ணய உரிமை என்பது பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியது. தமிழ் தேசிய அரசியலில் காணப்படும் சுயநிர்ணய உரிமைக் கோட்பாடுகள் ஒரு சாராரின் நலன்களை மையப்படுத்தவதாகவே அமைந்துள்ளன. சிங்கள தேசியவாதத்தின் நடைமுறைக்கும் கோட் பாட்டிற்கும் இது விலக்காக அமையவில்லை. இதுவே அதன் தோல்விக்கும் காரணமாக அமைந்தது. இதிலிருந்த வெளியேறி அகன்ற இலங்கைக்கள் சம உரிமையோடு வாழ்வதற்கு புதிய கோட்பாடுகளை அதாவது சமத்துவம், சமாதானம், பன்மைத்துவம், மனித உரிமை என்பவற்றை மையமாகக் கொண்ட சுயநிர்ணய உரிமையை நோக்கி எமது பார்வைகள் திரும்ப வேண்டும்.** ▣






படிப்பகம்

www.padippakam.com



ஆனந்த பண்டார

# புலம்பெயர்ந்த தமிழ் கவிஞர்களுக்கு



ஆயுதங்கள் அழைக்கும் போது
முதலில்
கீழே வீழ்ந்தது எழுதுகோல்!
வீரர்கள் வந்த பூமிக்குள்
கவிஞர்கள் எதற்கு என்றா
இந்த பூமியிலிருந்து அகன்றீர் ?

சூரியகந்த மலையடியில்
சூரியப் பூக்கள்
புதைக்கப்பட்டபோது
உங்கள் எழுதுகோல்களிலிருந்து
வழிந்தன
சுடும் கண்ணீர் எண்ணங்கள்!

யாழ் குடாநாட்டின்
நிலாக் கதிர்கள்
செம்மணி குழியில்
மறைக்கப்பட்ட போது
எனது எழுதுகோலிலிருந்து
வழிந்தன
சுடும் கண்ணீர் எண்ணங்கள்!

நீண்ட தூர ஏவுகணையையும் விட
வல்லது கவி மனது என்பதால்
எல்லைகளற்ற மிருகங்கள்
எழுதுகோலைப் பின் தொடர்ந்தன!

மாபெரும் யுத்தத்தின் முடிவை
ஆராய்ந்து பாரும்
அகலத் திறந்து விழிகளை !-
காலியாகி இருக்கும்
எல்லா இடமும்
எதுவுமற்று!
வீரர்கள் துயிலும் நிலத்தைக் கண்டு
தனிமையில் யோசிக்கிறேன்,
உள்ளங்கையளவு நிலத்திற்கு
வீரர்கள் ஏன் இத்தனைப் பேர் ?

கவிஞர்களே
உங்களுக்கான சந்தர்ப்பம் இது
இன்னமும் உங்களது மனதுகளின்
வாசனை வீசுகிறது,
வாருங்கள்,
இங்கே அமைப்போம் எமது முகாமை!

விழுந்த மனிதாபிமானத்தைக்
கட்டியெழுப்ப,
சிதைந்த இதயங்களை இணைக்க,
விரைந்து பறந்து வாருங்கள்
நண்பர்களே -

புதிதாகும் தாய் மண்ணை
அரவணைக்கும்
புதியதொரு பாடலின்
வரிகளாக...

**சிங்கள மூலம்: ஆனந்த பண்டார**
**தமிழில்: இப்னு அஸூமத்**



படிப்பகம்

www.padippakam.com

☐ நுண்கலை

# வாஸ்லி கன்டிநிஸ்க்கி

கோ. கையிலாசநாதன்



**உள்ளடக்கமற்ற உருவைப் பார்த்தலும் கைகளுக்குக் கையுறைகளை அணியாமல் அவற்றினுள் காற்றை நிரப்பிப் பார்த்தலும் ஒரேசம நிகழ்வுகளே.**



தனது 30 ஆவது வயதில் ரஷ்ஷியாவிலுள்ள 'Tartu' பல்கலைக்கழகத்தில் சட்டக்கல்வித் துறைப் பேராசிரியராகப் பணியாற்றியவர். மொஸ்கோவில் நடைபெற்ற பிரெஞ்சுநாட்டு மனப்பதிவு ஓவியர்களின் ஓவியக்காட்சியும் 'றோயல் அரங்கில்' நடைபெற்ற இசை நிகழ்ச்சியும் ஓவியம் கற்க வேண்டுமென்ற ஆழ்மனவிருப்பை இவரில் ஏற்படுத்திய இரண்டு முக்கிய நிகழ்வுகள் எனக்கூறலாம். இந்த விருப்பம் காரணமாகப் பேராசிரியர் பதவியை விடுத்து ஓவியம் கற்பதற்காக ஜேர்மன் தேசத்துக்குப் பயணமானார். ஈர்ப்பு அற்றதொரு வறட்சியான பாடப் புலத்துக்குள்ளிருந்து விடுதலைபெற்றதாகச் சட்டத் துறையைக் கைவிட்டமை பற்றி அவர் குறிப்பிடுகின்றார். சட்டத்துறையை அவர் கைவிட்டமை உலகத்துக்குக் கிடைத்த ஓர் அதிஷ்டம் என்றே கூற வேண்டும்.

மொஸ்கோவில் 1866 டிசம்பர் 04இல் பிறந்த இவ்வோவியரின் தந்தையார் தேயிலை வியாபாரத்தில் ஈடுபாடு கொண்டவராக இருந்தார். தாயார் மிக்க அழகும் புத்திக்கூர்மையுடையவராகவும் இருந்தார். இருவரின் திருமண வாழ்வும் அதிக காலம் நீடிக்கவில்லை யென்பதுடன் கன்ட நிஸ்க்கி தனது பெரிய தாயாருடன் வசிக்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது. நுண்ணுணர்வு மிக்க சிறுவனாக இருந்தபோது தனது பெரிய தாயாரிடம் கேட்ட ரஷ்ஷிய, ஜேர்மன் மொழிகளில் எழுதப்பட்ட சிறுவர்களுக்கான மந்திர தந்திரக் கற்பனைக்கதைகள் அவர் வளர்ந்து முதிர்ச்சியடைந்தபோதும் அவரின் அழகியல் சார்ந்த கற்பனைகளுக்கு உற்பத்தி ஊற்றுக்களாக இருந்தன.



படிப்பகம்

www.padippakam.com

அவரின் தாயாரும் தந்தையாரும் பிரிந்திருந்தாலும் இருவரும் தங்களை மகனுக்கு அர்ப்பணித்தவர் களாகவே இருந்துள்ளனர். சுறுசுறுப்பும் ஒழுக்கமும் எளிமையும் சரியான தீர்மானங்களை எடுக்கும் திறனும் தனது தாயாரில் தான் கண்ட உயர்தரப் பண்புகள் என அவர் குறிப்பிடுகின்றார்.

1889ஆம் ஆண்டு 'இயற்கை விஞ்ஞான' மன்றத்தினருக்காக ரஷ்ஷியாவிலுள்ள '*Vologda*' மாகாணத்துக்கு 'மானிட இனம்' சார்பான ஆய்வுக்கும் மனித இனத்தின் சடங்குகள், நம்பிக்கைகள் அதன் ஆரம்பம் அதன் விருத்தி ஆகிய விடயங்களை உள்ளடக்கிய ஆய்வுகளுக்குமாகச் சென்றார். இக்குடிமக்களின் தேச வழமைச் சட்டங்களையும் பதிவுசெய்து கொண்டார். அத்துடன் கிறிஸ்தவ சமயத்தைச் சேராத தூய சிரிய இனத்தின் எச்சசொச்ச குடிமக்களின் கலாசாரங்களையும் அறிந்துகொண்டார். இங்குள்ள வர்ணப் பகட்டான அலங்கரிப்பு அம்சங்களைக் கொண்டவீடுகளையும் தளபாடங்களையும் வசீகரிக்கும் நாட்டுப்புற உடைகளையும் கண்டுகொண்டமை இவர் மனக்கண்முன் பிரமாண்டமானதொரு ஓவியத் தொகுப்புப்போல் காட்சியாகியது. பெரிய தாயாரின் சித்திரக்கதைகளும் இங்கு அனுபவித்த கட்புல அனுபவங்களும் கலையாக்கங்களைச் செய்யத் தூண்டும் ஊக்கிகள் ஆயின.

வான்கோ, பிக்காஸோ, போல்சிசான் போன்ற ஓவியர்கள் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை நிறு திட்டமான வடிவங்களுக்குள்ளேயே தமது படைப்புலக எல்லையை வரையறை செய்தவர்கள். பார்த்தவுடன் அவர்களின் உருவங்களை நாம் புரிந்து கொள்ள முடியும். பிக்காஸோவின் வடிவங்களில் சிதைவுகள் இருப்பினும் உருவங்கள் இவைதான் என்பதைக் கிரகித்துக்கொள்ள முடியும். போல்சி சானின் 'குளிக்கும் பெண்கள்' என்ற தலைப்பில் அமைந்த ஓவியத்தை எல்லோரும் புரிந்து கொள்வார்கள். இதுபோல் வான்கோவின் 'எனது படுக்கை அறை' என்ற ஓவியத்தையோ அல்லது 'வயல்களின் மேல் காகங்கள்' என்ற ஓவியத்தையோ பார்வையாளர்கள் விளங்கிக்கொள்வார்கள். பிக்காஸோவின் 'குவர்ணிக்கா' வழமையில் இருந்து வித்தியாசப்படினும் அங்குள்ள உருவங்கள் இவை தான் என்பதை இனங்காணவும் முடியும். இங்கு குறிப்பிடப்பட்ட ஓவியங்கள் யாவற்றிலும் ஓவியர்களின் அகப்பார்வை இருப்பினும் அகப் பார்வையிலும் பார்க்க வெளிப்பார்வை கனதியானது.

தொடக்கத்தில் கன்டநிஸ்க்கியின் ஓவியங்களிலும் யதார்த்தப் பண்புகள் இருந்துள்ளன. தொடக்கத்தி லிருந்த இப்பண்புகள் இவரின் ஓவியப் பயணத்தில் கொஞ்சம் கொஞ்சமாக இறக்கி விடப்பட்டன. நிறுதிட்டமான உருக்கள் யாவும் இவரின் அக உலகில் கரையத் தொடங்கின. முற்றுமுழுதாக அக உலகம் என்பது அருபவெளி உலகம் ஆனது. றோயல் அரங்கில் இசைநிகழ்வைக் காதுகளால் அனுபவித்துக் கொண்டிருந்தபோது "எல்லா நிறங்களையும் எனது அகக்கண்களால் தரிசிக்கின்றேன்" எனக் கூறினார். இக்கூற்றானது காதுகளால் கேட்கும் இசையை உணர்வின் உச்சத்துக்குச்சென்று கண்களால் கண்டு கொண்டமையால் ஏற்பட்டது. "நிறங்கள் யாவும் ஆன்மா மீது நேரடியாக வேதமது செல்வாக்கைச் செலுத்துகின்றன" எனவும் குறிப்பிட்டுள்ளார். பாட்டொன்றுக்கு ஒரு மெட்டு உண்டு அல்லது மெட்டொன்றுக்கு ஓர் பாட்டு உண்டு. இங்கு இவ்வோவியர் பாட்டைக் கருத்திற்கொள்ளாமல் மெட்டையே கருத்திற்கொண்டுள்ளார். மெட்டுக்கள் ஒத்திசைவான, லயஒலி வடிவங்கள், மெட்டுக் களையே படமாக்க வேண்டுமென்ற அவஸ்த்தையில் அவற்றை அருபமாகவும் கோடுகளாகவும் உருக்களாகவும் காட்டியுள்ளார்.

'தம்பதிகளின் சவாரி'(1906) என்ற தலைப்பில் தீட்டப்பட்ட இவரின் ஓவியத்தில் மொஸ்கோநகர் பின்னணியில் தெரிகின்றது. வெங்காய வடிவிலான அமைப்பில் உச்சிகளைக்கொண்டுள்ள உயர்ந்த கோபுரங்களின் தொகுப்பு தூரத்தே சிறிதாகத் தெரிகின்றது. தட்டையான முறையில் நிறந்தீட்டப் பட்ட பின்பு அவற்றின்மீது நிறப் புள்ளிகளை இட்டுள்ளார். முன்னணியில் குதிரை ஒன்றின் மீது ஆண் ஒருவர் வீற்றிருக்க அவர் மடிமீது பெண்ணொருத்தி அமர்ந்துள்ளாள். முன்னணியில் குதிரையையும் அதன்மீது இருப்பவர்களையும் தவிர ஏனைய இடங்கள் இருண்டுள்ளன. படத்தின் வலப்பக்கக் கீழ்மூலையில் குதிரை வரையப் பட்டுள்ளது. குதிரையிலும் அதன்மீது இருப்பவர் களிலும் வெண்ணிற, இளநீலநிற, இளஞ்சிவப்பு நிறப்புள்ளிகள் உள்ளன. மேற்புற வானம் நீண்ட, குறுகிய செவ்வக வடிவங்களாகக் காட்டப் பட்டுள்ளன. மிகவும் மெல்லிய உயர்ந்த மரங்கள் கறுப்புநிறத்தில் காட்டப்பட்டுள்ளதுடன் அவற்றின் மீதும் மஞ்சள், செம்மஞ்சள், வெள்ளை நிறப்புள்ளிகள் காணப்படுகின்றன. குதிரை மெதுவாக நகர்கின்றது. குதிரையையும் சுற்றுச்சூழலையும் அவர்கள் பொருட்படுத்தவில்லை என்பதை ஓவியத்தை அவதானிப்பதன் மூலம் புரிந்து கொள்ளலாம். பெரிய தாயாரிடம் கேட்ட கற்பனைக்கதைகளின் செல்வாக்கு இவ்வோவியத்தில் வெளிப்படுகின்றது. காலம் பின்னோக்கி நகர்ந்து வினோதமான உலகம் ஒன்றுக்குள் எம்மைக் கூட்டிச்செல்கின்றது. தலைப்புச் சாதாரணமாக இருந்தாலும் நிறந்தீட்டியமுறை வித்தியாசமானது. நிற ஒளிர்வில் குளிக்கும் நகரமும் தம்பதிகளும் என இதனைக் குறிப்பிடலாம்.

நிறவாழ்க்கை (1907) என்ற தலைப்பில் கன்வஸ்மீது ரெம்பரா வர்ணத்தால் இவ்வோவியம் தீட்டப்பட்டுள்ளது. இருட்சியான பின்னணியில் பிரகாசமான நிறங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com

இவ்வோவியத்தின் பரப்பெங்கும் சாதாரண வாழ்வின் நிகழ்வுகள் படமாக்கப்பட்டுள்ளன. சமய சம்பந்தமானதும் இறப்பைக் காட்டுவதும் இறப்பின் பின்வாழ்வைக் காட்டுவதுமான காட்சிகள் இங்குள்ளன. நம்பிக்கைகளும் எதிர்மறையாக பார்க்காமையும் அவர் இதனை வரைந்த காலத்தில் அவருள் ஆட்சி செலுத்தின. இவை இருந்த காரணத்தாலேயே அவர் மிகவும் பிரகாசமான வர்ணங்களைப் பயன்படுத்தியும் உள்ளார். வர்ண எதிரிடைமிக்க இந்நிறங்கள் சந்தம்மிக்க தெளிவான தூரிகைத் தடங்களாகவும் இருக்கின்றன. வான்கோ வின் தூரிகைத் தடங்களுக்கும் இவற்றுக்கு மிடையே வித்தியாசங்கள் உள்ளன.

இங்கு குறிப்பிடப்பட்ட இரண்டு ஓவியங்களிலும் உள்ள குதிரை, மரங்கள், கட்டிடங்கள், ஆகாயம், மலை, தரை, மக்கள் ஆகிய எல்லாவற்றையும் பார்ப்பவர்கள் அவற்றின் தோற்றங்களிலிருந்து அவையெவை என்பதைப் புரிந்துகொள்வார்கள். கன்டநிஸ்கியின் ஓவியப்பயணம் யதார்த்தப் பண்புகள் கொண்ட ஓவியங்கள், சுயாதீனமாக உணர்வு வெளிப்பாட்டில் அமைந்த ஒருங்கிணைப்பு வடிவங்கள், இந்நிலையிலிருந்து உச்சநிலைக்கு வந்த சற்றுச்சிக்கலான வடிவங்கள், என மூன்று நிலைகளுடாக நகர்கிறது. இம்மூன்று நிலைகளும் ஓரளவு சராசரியாகச் சரியானவை என்பதைப் புரிந்து கொள்வது மிகவும் அவசியமாகிறது. உருவங்களும், அருவுருவங்களும் அரூபங்களும் கேத்திர கணித அரூபங்களும் என அவரின் ஓவிய உள்ளடக்கப் பாணிகள் மாறுகின்றன.

அரூப ஓவியர்களில் மிகவும் முக்கியமாகக் குறிப்பிடக்கூடிய முன்னோடியாக இருந்த இவ்வோவியர் ஓவியம் சார்ந்த கட்டுரைகளையும் எழுதியுள்ளார். பலர் ஓவியர்களாக இருந்துள்ளனர். ஆனால் ஓவியங்கள் தொடர்பான கட்டுரைகளை எழுதவில்லை. ஓவியராகவும் அதேவேளை அவை தொடர்பான எழுத்துவேலைகளிலும் ஈடுபட்ட வராகத் தன்னை வெளிப்படுத்திக்கொண்டுள்ளார்.

ஜெர்மனியில் மியுனிச்சில் இருந்தபோது தனது 'ஓவிய வரைகூடத்துக்கு' இருட்டுக்குள் செல்ல வேண்டியேற்பட்டது. இருட்டுக்குள் தான் வரைந்த ஓவியத்தை அவரால் உடனடியாகக் கண்டுபிடிக்க முடியவில்லை. தற்செயலாகக் கீழேபார்த்தபோது அவ்வோவியம் தரையில் பிழையான முறையில் கிடந்தது. சிறிதளவே வெளிச்சம் இருந்த அந்நேரத்திலே அவ்வோவியத்தை அவர் பார்த்தார். 'ஓர் அசாதாரண அழகு அதிலிருந்து பிரகாசமாக வெளிப்பட்டுக்கொண்டிருந்தது' என அவ்வோவியத் தைப் பற்றி அவர் கூறுகின்றார். இருட்டுக்குள் ஓவியத்தைக் கண்ட மனோநிலை உருவமற்ற அரூபவெளியீடு நிலைக்கு அவரை இட்டுச் சென்றுள்ளது. பொருளை விடுத்து அதனைப் பார்த்தல்


வாஸ்லி கன்டநிஸ்க்கி

என்பது முதலாவதாக மனதுக்குள்ளேயேயிருந்து ஆரம்பமாகின்றது என்ற தத்துவத்தையே இது எமக்கு உணர்த்துகின்றது.

'வெள்ளம்' என்ற தலைப்பிடப்பட்ட ஓவியம் இவரின் ஓவியங்களுள் குறிப்பிடத்தக்கவற்றி லொன்றாகும். 'கன்வஸில்' வரையுமுன்பு கண்ணாடியில் இதனை ஓவியமாக்கியவர். கன்வஸில் வரைவதற்காகப் பல ஆரம்ப மாதிரிச் சித்திரங்களை வரைந்து பார்த்துள்ளார். வெள்ளம் என்றால் எல்லோரும் அங்கு தண்ணீர்தான் இருக்குமென்ற எண்ணத்தில் அவ்வோவியத்தைப் பார்ப்பார்கள். உண்மையில் வெள்ளம் என்பது இயற்கையானது. ஆனால் இங்கு இவ்வோவியத்தில் ஓவியரின் 'அகஇயற்கை' முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வோவியத்தைப் பார்க்குமொருவருக்கு இரண்டு மத்திய இடங்கள் இதில் இருப்பது தெரியவரும். இளஞ்சிவப்பு நிறம் எல்லாத் திசைகளிலும் பரவியுள்ளதும் மத்தியில் மிகவும் பலவீனமான சிறிய கோடுகளைக் கொண்டதுமான இடப்பக்கப் பகுதி. இப்பகுதிக்குச் சற்று மேல் வலப்புறமாக சிவப்பு, நீலம் ஆகிய கலப்பு நிறங்களின்மீது ஒத்திசைவற்ற கடும் கறுப்பு நிறத்தில் அமைந்த உறுதியான சற்றுக் கோரமான கோடுகள் கொண்ட பகுதி. இந்த இரண்டு பகுதிகளுக்கு மிடையே இளஞ்சிவப்பும் வெள்ளையும் கலந்த பகுதியொன்றும் உள்ளது. இப்பகுதி கன்வஸ் மீது மிதப்பதுபோல் காட்டப்பட்டுள்ளது. அதாவது இது காற்றில் உள்ளது. இப்பகுதியானது நீராவியால்



படிப்பகம்

www.padippakam.com



சூழப்பட்டுள்ளது. பார்ப்பவர்கள் கடைசியாகக் கண்டுபிடிக்கும் இப்பகுதி உண்மையில் ஓவியத்தின் மத்திய பகுதியாகின்றது. நீராவியைப் பார்ப்பவர் அதற்குக்கிட்டவும் இல்லாமல் அதற்குத் தூரவும் இல்லாமல் எங்கோ நிற்கின்றார். எங்கோ நிற்றல் என்பதே இவ்வோவியத்தின் முழு அர்த்தத்தையும் தீர்மானிக்கின்றது. 'அக உலக கற்பனையும் உணர்வும்' சேர்ந்து இதனைப் படைக்க உந்தியுள்ளன. நீர் பற்றி ஓவியரின் அகம் சார்ந்த அலங்காரம்' எனவும் இதனைக் குறிப்பிடலாம். "மிகவும் மெதுவாகவும்" கவனம் பிசகாமலும் தனது மனக் கற்பனையுடன் தனது உணர்வுகளையும் ஒன்று சேர்த்து" இக் கலையாக்கத்தை அவர் படைத்துள்ளார்.

1916இல் மொஸ்கோ ஐ என்ற ஓவியத்தை இவர் தீட்டினார். இந்த ஓவியமும் 1907இல் தீட்டிய நிறவாழ்க்கை என்ற ஓவியமும் மொஸ்க்கோ நகர் பற்றியவை என்பதில் ஒற்றுமையாக இருப்பினும் மொஸ்கோ 1 என்ற ஓவியம் மரபுகளை மீறிய முறையில் வரையப்பட்டுள்ளதாலும் நிற வாழ்க்கையில் வரும் தொகையான மனிதர்கள் இன்மையாலும் வித்தியாசப்படுகின்றது. இதில் மொஸ்கோவின் தரையானது பல மாடிக் கட்டிடங்களாலும் பாலங்களாலும் தேவாலயங் களாலும் உச்சியானது வெங்காய வடிவில் அமைந்துள்ள கோபுரங்களாலும் நசுக்கப் பட்டுள்ளது என்பதை மிகவும் வித்தியாசமாக வெளிப் படுத்தியுள்ளார். நிறங்கள் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் சங்கீதம் உற்பத்தியாகின்றது. இடை யிடையே மையத்தில் எல்லா நிறங்களுடனும் வெள்ளை சேர்க்கப்பட்டமை மையப் பகுதியைத் தூக்கலாக்குகின்றது. இருண்டநீலம், இளநீலம், சிவப்பு, கறுப்பு, பச்சை, வெள்ளை, இளஞ்சிவப்பு, மஞ்சள் என நிறங்கள் நீள்கின்றன.

உடலொன்றின் தசைகளின் அமைப்பு, எலும்பு களின் வடிவம், முகம், உடல், கால்கள், கைகள் என்பவற்றுக்கிடையேயுள்ள கணித விகிதங்கள் போன்ற பல விடயங்கள் உடற்கூற்றியல் வரைதல் களில் முக்கியத்துவம் பெறுகின்றன. பேராசிரியர் *Louis Moilliet* இன் உடற்கூற்றியல் வகுப்பில் மாணவனாக இருந்து மேற்படி உடற்கூற்றியல் வரைதல்களைக் கற்றமை மிகவும் சலிப்பைத் தந்ததுமல்லாமல் 'அகம்' என்பதைப் புறந்தள்ளி வைத்துவிட்டு உடலை நேர்த்தியாக வரைவது எப்படியென்ற நுட்பத்தைக் கற்பது. இக்கலை தொடர்பாகத் தனக்குச் சந்தேகங்களை ஏற்படுத்தி யுள்ள தெனவும் கூறுகின்றார். அடிப்படையில் உடற்கூற்றியலும் ஓவியமும் இருவேறான விடயங்கள் எனவும் குறிப்பிடுகின்றார்.

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஹென்றி மூரின் சிற்பங்களில் மனித உடலானது 'சுருக்கமும் எளிமையும்' என்பதற்குள் அடங்குகின்றது. உடற்கூற்றியல் நுட்பங்களை அவர் கவனிப்பதில்லை மேலும் அவை சுயாதீனமான படைப்பாற்றலுக்குத் தடைகளாகவும் அமைகின்றன. முகமானது முட்டையின் வடிவத்திலும் மூக்கானது முக்கோண அரியமொன்றின் சிறுதுண்டாகவும் கைகள் வழமையிலிருந்து சற்று நீண்டும் காணப்படுவதுடன் குடைவுகளும் ஏற்ற இறக்கங்களும் மானசீகமாக அதில் அமைந்தும் விடுகின்றன. இவரது சிற்ப உருக்களிலிருந்து சற்று வித்தியாசமாக கன்டநிஸ்கி யின் '*Sky Blue*' (1940) என்ற ஓவியத்தில் சில உருவங்கள் உள்ளன. இவ்வுருக்கள் இவரின் கண்டுபிடிப்புக்கள் என்பதுடன் அவை அங்கும் இங்கும் பரவலாக கன்வஸில் மிதக்கின்றன. சிவப்பு, மஞ்சள், கறுப்பு, பச்சை, வெள்ளை, செம்மஞ்சள் ஆகிய நிறங்களில் அலங்கரிக்கப்பட்டும் காணப் படுகின்றன. நீல ஆகாயம் பின்னணியாக இருக்கின்றது. சாதாரணமாக நுணுக்குக்காட்டியின் கீழ் வைக்கப்பட்ட பொருள் ஒன்றைப் பார்க்கும்போது அதன் உட்பகுதிகள் அங்குமிங்குமாகத் தெரிவது போல் இங்கு காணப்பட்டாலும் ஆன்மாவின் அதிர்வுகளை 'உட்பார்வை' என்ற நுணுக்குக்காட்டி ஊடாகப் பார்க்கும்போது தோன்றும் ஓர் அகக்காட்சியே இங்கு ஓவியமாகியுள்ளது. இந்த உட்பார்வை கடினமான எப்பொருளையும் ஊடறுத்துச் செல்லவல்லது.

எதிரிடையான நிறங்களும் முரண்பாடுகளும் ஒத்திசைவைத் தருவதுடன் தனது அழகியல் உணர்வென்பது இதுதான் எனவும் அவர் குறிப்பிடுகின்றார். நவீன ஓவியமென்ற பெரு விருட்சத்தின் புதிய கிளையாகக் கொள்ளப்பட வேண்டியவரென்பதுடன் ஆரம்பத்திலிருந்து இறக்கும் வரை ஓவியத்தில் உள்ளடக்கங்களிலும் உருவங் களிலும் தனக்கென்றவொரு முத்திரையைப் பதித்தவருமாகின்றார். அவரின் பாணிகளும் கருத்துக்களும் எங்கும் தரித்து நிற்கவில்லை. அவை தொடர்ந்தும் இயங்கிக்கொண்டிருந்தன. உள்ளுணர்வும் மேதமையும் அவரின் படைப்புலகை நகர்த்திய இரண்டு சக்கரங்கள் ஆகின்றன.

▣



படிப்பகம்

www.padippakam.com

கட்டுரை

# இந்தியா - சீனா முரண்பாடு: அபாயகரமான புரிதல்கள்

பாஸ்கர்

அண்மைக் காலமாகவே இந்தியா-சீனா முரண்பாடு பற்றி பேசப்பட்டு வருகின்றது. அது உண்மையும்கூட. ஆனால் இது 2011ல் சீனாவானது இந்தியா மீது போர் தொடுக்கும் என்று எழுதும் அளவிற்கு சென்றுவிட்டது. பாதுகாப்புத்துறை விவகாரங்களை பற்றி எழுதும் ஒரு ஆய்வாளர் சென்ற மாதம் இதை எழுதியேவிட்டார். இந்த முரண்பாடு ஏன் ஏற்படுகிறது, இதை எப்படி தீர்ப்பது, இதை எவ்வாறு பயன்படுத்திக்கொள்வது என்பதைப் பற்றிய அபாயகரமான புரிதல்கள் உருவாகியுள்ளன.

இந்தியா-சீனா விற்கும் இடையிலான முரண்பாடு தத்தமது நாடுகளின் நலன் சார்ந்தே ஏற்படுகின்றது. அந்த நலன் மக்களின் நலன் அல்ல. மாறாக ஆளும் வர்க்கங்களின் நலனே. இன்றைய சீனாவானது மாவோ காலத்திய சீனா அல்ல. அது சீனாவின் பெரும்பான்மை மக்களுக்கான சீனாவும் அல்ல. சீனாவின் மக்களை கொடூரமாகச் சுரண்டித் தொழிலாளர் நலன்களை பற்றி சிறிதும் அக்கறை கொள்ளாத பாசிசம்தான் அந்த நாட்டை ஆண்டு வருகிறது. தொழிற்சாலைகள் என்ற பெயரில் வியர்வைக் கூடங்களில் *(Sweat Shops)* தொழிலாளர்களை வாட்டி வதைத்து வருகிறது. இதன் மூலம் கிடைத்த, கிடைக்கும் உபரியை மூலதனமாக்கி அமெரிக்காவுடன் உலக மேலாதிக்கத்திற்கான போட்டியில் இறங்கி உள்ளது. அதன் அங்கமாக தெற்காசியாவில் அமெரிக்காவின் இளைய பங்காளியாக உள்ள இந்தியாவுடனும் முரண்பாட்டில் உள்ளது.

இந்தியா-சீனா முரண்பாடு என்பது எல்லா அரங்குகளிலும் வெளிப்படுகிறது. அது எல்லைச் சிக்கல், திபெத், ஈழச் சிக்கல் உள்ளிட்ட இலங்கை, நேபாள மாவோயிஸ்டுகள் மீதான அணுகுமுறை உள்ளிட்ட நேபாளம், பாகிஸ்தான், மியான்மர், பங்களாதேஷ், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு *(Sco - shanghai Co-operation Organisation)*, ஆசிய வளர்ச்சி வங்கி *(ADB - Asian Development Bank)* இந்தியாவில் சீனாவின் தொழிற்துறை முதலிடு சீனப்பொருட்களின் இறக்குமதி *(NSG - Nuclear Suppliers Group)* இராணுவ முஸ்தீபு ஆகிய அரங்குகளில் வெளிப்படுகிறது.

இரண்டு நாடுகளின் ஆளும் வர்க்கங்களின் நோக்கமே மக்களைச் சுரண்டி மேலாதிக்கம் செய்வதே ஆகும். அவ்வாறு உள்ள நிலையில் குறிப்பிட்ட ஒரு ஆளும் வர்க்கத்தின் நலன் இன்னொரு ஆளும் வர்க்கத்தின் நலனுடன் முரண்படும்போது அது கூர்மையடைகிறது இது பொதுவானது. இந்த நிலையில் இந்திய ஆளும் வர்க்கம் மேற்கொண்ட அணுகுமுறைதான் இந்த முரண்பாட்டை கூர்மைப் படுத்தத் தொடங்கியது.

இந்தியா 1975ல் சிக்கிமை பலவந்தமாக இணைத்தது முதற்கொண்டு 2003வரை அதனை ஏற்காமல் இருந்துவந்தது சீன அரசாங்கம். சிக்கிமை இந்தியாவிற்கு வெளியே இருப்பதை போன்றே வரைபடத்தை வெளியிட்டு வந்தது. வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது 2004ல் சீனா சென்றபோது சிக்கிம் இந்தியாவின் அங்கம்தான் என அங்கீகரித்தது. இந்த நிலையில் இந்தியா - அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் ஏற்பட்டபோதுதான் இந்தியா-சீனா முரண்பாடு வேகம் பெறத் தொடங்கியது. இந்த ஒப்பந்தமானது தெற்காசியாவில் அமெரிக்க மேலாதிக்கத்தின் இளைய பங்காளியாக இந்தியா சேவையாற்றி தனக்கு எதிராக ஊறு விளைவிக்கும் என சீன அரசாங்கம் கருதத் தொடங்கியது. அது உண்மையும் ஆகும். அதன் பிறகுதான் சீனா நாம் மேலே பார்த்த அரங்குகளில் இந்தியாவுடன் தீவிரமாக முரண்படத் தொடங்கி குறிப்பிட்ட அளவில் வெற்றியும் பெற்றுவருகிறது. இந்தியா அண்டை நாடுகளில் மேலாதிக்கம் செய்துவந்து தனிமைப்பட்டு உள்ளதால் அது சீனாவுக்கு சாதகமாகவும் உள்ளது. இதனால் பாகிஸ்தானை மேலாதிக்கம் செய்து தோற்றுவந்த இந்தியாவானது இலங்கை, பங்களாதேஷ், நேபாளம் ஆகியவற்றுடன் முன்பு இருந்தாற்போல் மேலாதிக்கம் செய்ய முடியாமல் உள்ள நிலையில்அந்த நாடுகள் சீனாவுடன் மூலஉத்திரீதியான நெருக்கமான உறவை ஏற்படுத்தியுள்ளன. மேலும் அமெரிக்காவானது பொருளாதார நெருக்கடியில் மிகவும் சிக்கி உள்ளதால் அந்தக் காரணியும் சீனாவுக்கு சாதகமாகிவிட்டது.

இனி மைய விஷயத்திற்கு வருவோம். இந்தியா - சீனா முரண்பாட்டின் முதலாவது அபாயகரமான புரிதல் சீன எதிர்ப்பிலான இந்தியதேசிய வெறியை ஊட்டுவது ஆகும்.

இது அண்மைக் காலமாக அதிகரித்து சீனா 2011ல் இந்தியா மீது போர் தொடுக்கும் என பூச்சாண்டி காட்டும் அளவுக்கு சென்றுள்ளது. இதன்





படிப்பகம்

www.padippakam.com



நோக்கமானது இந்தியா-சீனா முரண்பாட்டை தீர்ப்பதற்கு இந்தியா போரைத் தொடுக்க வேண்டும் என்பதற்கு இந்தியாவில் உள்ள மக்களை தயார் செய்யவேண்டும் என்பதாகும். இதன் மூலம் இந்தியாவின் நேரடி நலனும் அதன் எஜமானன் அமெரிக்காவின் நலனும் பாதுகாக்கப்படும் என்பதற்காகவே இந்தப் பூச்சாண்டி காட்டப்படுகிறது.

இந்தப் பூச்சாண்டியை வலதுசாரிகளே மேற் கொள்கிறார்கள். இதன்மூலம் சில பலன்களை அடையலாம் என அவர்கள் எண்ணுகிறார்கள். முதலாவதாக பொருளாதார பலன், அடுத்தது அரசியல் அரங்குகளிலும் பலன்கள் உள்ளன. ஒன்று இந்திய ஆளும் வர்க்கத்தின் மீதான கோபம் சீன எதிர்ப்பிலான இந்திய தேசிய வெறியாக திருப்பப் படும். அடுத்தது சிபிஐ, சிபிஎம் முதல் மா-லெ அமைப்புகள் வரை அரசியல் அரங்கில் ஓரங்கட்டப் பட முடியும் என எண்ணுகிறார்கள்.

ஏனெனில் சிபிஐ, சிபிஎம் ஆகியன சீன அரசாங்கத்தின் பக்கமே நிற்கும். மா-லெ அமைப்புகள் இரண்டு அரசாங்கங்களுக்கும் எதிராக நிற்கும். எனவே இந்த அமைப்புகளை சீன ஏஜெண்ட்டுகள் என முத்திரை குத்தி சீன எதிர்ப் பிலான இந்திய தேசிய வெறியில் மூழ்கடித்து விடலாம் என நப்பாசையில் இருக்கிறார்கள்.

அமெரிக்கா எல்லா அரங்குகளிலும் இந்தியாவை மேலாதிக்கம் செய்து ஆட்டுவித்துவந்தாலும் இந்த வலதுசாரிகள் அமெரிக்காவோடு இந்தியா இணக்கமாக போகவேண்டும்; அப்பொழுதுதான் இந்தியாவின் நலன் பாதுகாக்கப்படும்; அமெரிக்க எதிர்ப்பு என்பது எதற்கும் உதவாத வெற்று வாய்ச்சவடால் என்றே கூறிவருகிறார்கள் என்பதை கவனிக்கவேண்டும். இவர்கள் அமெரிக்க எடுபிடிகள் என்பது இதன்மூலம் தெளிவாகிறது. இந்த எடுபிடிகள் அமெரிக்காவின் நலனுக்காகவே இந்தியா-சீனா முரண்பாட்டை பயன்படுத்துகிறார்கள் என்பதை புரிந்து கொள்ளவேண்டும்.

இந்தியா-சீனா முரண்பாட்டின் அபாயகரமான இரண்டாவது புரிதல் என்பது இந்த முரண்பாட்டை பயன்படுத்தி ஈழச்சிக்கலினை தீர்க்க எத்தனிப்பது ஆகும்.

நெடுமாறன் இதைப் பேசுகிறார். மே 18க்கு முன்பும் இதே அடிப்படையில் பேசினார். அப்பொழுது சீனாவுடன் பாகிஸ்தானையும் சேர்த்துக்கொண்டார். இவர் மட்டும் இவ்வாறு பேசவில்லை. ராமதாசும், வைகோவும், திருமா வளவனும், வ.ஐ.ச.ஜெயபாலன் போன்றோர் இதையே வழிமொழிந்தனர். ஆனால் இந்திய ஆட்சியாளர்கள் அசைந்து கொடுக்கவில்லை. மாறாக, இதே அடிப்படையிலான அணுகுமுறையில்தான்



**இந்தியா ஈழ மக்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று கேட்டு கேட்டு ஓய்ந்து பாதுகாப்பு மைய அணுகுமுறையை காட்டியாவது இந்திய ஆட்சியாளர்களை இணங்க வைக்க முடியுமா என்ற தவறான எதிர்பார்ப்பில். சீன எதிர்ப்பிலான இந்திய தேசிய வெறியே வெளிப்படுகிறது.**

இந்தியாவின் பாதுகாப்பு கருதி இலங்கைக்கு உதவி செய்வதாகவும் இல்லாவிட்டால் சீனாவும் பாகிஸ் தானும் உதவி செய்து இலங்கை அரசாங்கத்திடம் நெருங்கிவிடுமென்று பேசியே இலங்கைக்கு உதவி செய்வதை நியாயப்படுத்தி செயற்படுத்தினர். இப்போது மீண்டும் அவர் தினமணியில் 17.6.2009 அன்று எழுதியே விட்டார். இந்தியா ஈழ மக்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று கேட்டு கேட்டு ஓய்ந்து பாதுகாப்பு மைய (*security-centric*) அணுகுமுறையை காட்டியாவது இந்திய ஆட்சியாளர்களை இணங்க வைக்க முடியுமா என்ற தவறான எதிர்பார்ப்பில் கேட்கிறார். அதில் சீன எதிர்ப்பிலான இந்திய தேசிய வெறியே வெளிப்படுகிறது.

முத்துக்குமார் நண்பர்கள் இயக்கத்தின் சார்பில் வெளிவந்த 'சீனாவின் முற்றுகையில் இந்தியா' என்ற நூலிலும் இந்தத் தொனியே மேலோங்கி நிற்கிறது. இந்தத் தவறான அணுகுமுறையினால் ஈழ மக்களுக்குத்தான் பாதிப்பு ஏற்படும். ஏனெனில் இந்தியா பாதுகாப்பு மைய அணுகுமுறையினால் ஒருக்கால் ஈழத் தமிழர்களுக்கு உதவி செய்து பிறகு திடீரென்று அதே அடிப்படையில் அவர்களுக்கு உதவி செய்யாமல் இருப்பதும் அல்லது அவர்களை நசுக்குவதுதான் நல்லது என தலை கீழாகவும் முடிவை எடுக்கலாம். இந்தியா-சீனா முரண்பாடு தவறான புரிதலினாலும் தவறான காரணத்தினாலும் இவ்வாறு கொம்பு சீவப்பட்டுக் கொண்டிருக்கிறது. ▣




படிப்பகம்

www.padippakam.com



கல்லூரன்

# தொடங்குவதும் முடிப்பதும்



தொடங்குவதும் முடிப்பதும்
முடிப்பதும் தொடங்குவதுமாய்
நகர்ந்து செல்கிறேன்
எதை நோக்கியுமல்ல நண்பனே
ஒரு மதுக்குவளைக்காய்
அதில் என்னைக் கரைத்துத் தொலைத்து
ஒரு செடியில் காற்றாய் அசைவதற்காய்
எந்தச் சுடுகலனும் தேவையில்லை எனக்கு
நான் மெல்ல மெல்ல சாகவேண்டும் என்பதற்காய்

மரணத்தை நினைக்கிறேன்
அதே போல
வாழ்வையும் கொண்டாட முயல்கிறேன்

உண்மைதான் நண்பனே
மனிதன் இப்பிரபஞ்சத்தில் ஒரு அதிசயம் தான்
இதுவரை கொல்லப் பட்டவர்களை
இனிமேல் பிறப்பவர்களை
எண்ணிப்பார்க்க முயலும் ஒரு அதிசயம்தான்

ஒரு உயிர் ஒரு அணுவல்லவே
ஒரு கோடி அணுக்கள்,
ஏன் ஒரு துளி விந்தில் உருவாகின்றன...?

அது இவ்வுலகின் ஒரு மீழ்நீட்சி நோக்கியல்லவா
நான் இருப்பினும் இறப்பினும்
நீ இருப்பினும் இறப்பினும்

நண்பனே,
நம்நாடு எங்கு செல்கிறது ?
அதி உத்தமர்களுடன்
வெளிநாட்டுக்கனவான்கள்
குந்தி எழும்பிச் செல்லும் மல கூடமாயிற்றே
நம் நாடு.

கடத்தப் பட்டவர்களின்
தீனக்குரல்கள் செய்தித் தாள்களில் பிணவாடையாய்
மேய்கின்றனவே
சிறுவர்களைக் கொன்று
அவர்களின் செங்குருதியைப் பொதிசெய்து
விற்பனை செய்கின்றனரே

உன் கடிதவரிகள் எழுப்பிய
மௌனப் பாடல்களிலிருந்து இதை எழுதுகிறேன்
இதனை எழுதுவதற்கு நீ அர்ப்பணித்த
பொழுதின் கணங்களில் கரைந்து இதை
எழுதுகிறேன்
என்னால் மறந்துவிடப்பட்ட அவ்விடத்தில்





படிப்பகம்

www.padippakam.com

ஒரு விழிப்புத்தட்டியபொழுது
கை தட்டி அழைத்தது அக்குரல்

உனக்கும் பரிட்சயமானது அக் குரல்
நினைவிருக்கிறதா ?

தூரத்து மலைமுகட்டிலிருந்து
ஏன் காலடி மண்ணிலிருந்து
அமைதியற்று அவதியுறும் இருண்ட
சமுத்திரத்திலிருந்து
எழுகிறது அக்குரல்

ஒரு அரை இருட்டில்
சமுத்திரத்திரத்திலிருந்து அமிழ்ந்துபோன
ஒரு கப்பலின் அலறல்கள்
இரவுப்பறவையின் அழுகுரல்
அத்துடன்,
நித்திரையாகிப்போன சமுத்திரத்தின்
ஒரு நீண்ட பெரு மூச்சு

மிக ரகசியமாக ஒழித்து
வைக்கப்பட்டதிலிருந்து
கனவில் காலடி வைத்து நடக்கும்
மர்மத்தின் ஆழத்தினுள்ளும்
ஊடுருவுகிறது அக் குரல்

நான் நிற்கிறேன் ஒரு எல்லையில்--
மூடப்பட்ட யன்னலின் ஒரு ஊசித் துளையூடாக
பிரவாகிக்கும் செய்திகளுடன்--

நான் நிற்கிறேன்
வார்த்தைகள் அமுங்கிப்போன
மௌனப் பிரதேசத்தின் ஒரு விழிம்பில்--


தேவைப்படும்பொழுது
எனது கனவுகளிலிருந்து
அடிக்கடி விழிப்பு அவசியமாகிறது

ஏனெனில்
செவிப்புலனுக்கும் அப்பால்
கேட்கிறதேஒரு குரல்
கட்புலனுக்கும் அப்பால் தெரிகிறதே ஒரு காட்சி
இதுதான் நான் அடிக்கடி கேட்கும் செய்தியும்
அடிக்கடி எனக்கு புலப்படும் காட்சியும்

# உடைவுகள்

இன்னும் உடைந்து நொருங்கி விடாதபடி
எனது அல்லது உனது
கோடுகள் சந்திக்கும் இடத்திற்காய்
மிக ஆவலுறுகிறேன்

ஆம் என்பதற்கும் இல்லை என்பதற்குமிடையில்
நான் தூக்கி வீசப்பட்டுக் கிடக்கிறேன்



நடுநிசியில்
இரு கரங்கள் கூப்பி
பிரார்த்திப்பது எதற்காக
என் சுவர் கடிகார முட்கள் ?

வாழ்வின் கொடிய வலிகளுக்கு அப்பால்
பரந்து விரிகிறது
மறக்கப் பட்டவைகள் கொண்ட
ஒரு மௌன வெளி
இருண்டு கிடக்கிறது
ஒரு மின்மினிப் பூச்சிக்கும் வழியின்றி.

வீழ்வின் எரிதணல் காயங்களால்
தழுவிக் கடித்துக் குதறி புசித்து மேய்கிறது
அம் மௌன வெளியின் பசும் புற்றரைகளை
என் மனசு.

கரிய இருட் சமுத்திரத்துள்
காணாமல் போனவைகள் என்பதால்
அவைகள் ஒரு போதும் திரும்பாது
என மிக மின உணர்கிறேன்.

ஆயினும் காலச் சங்கிலியின் கண்கள்
ஒவ்வொன்றாய் அறுந்து வீழ்ந்து
மிகக் களைத்துப்போன விழிகளுக்குள்
ஏன் வந்து நிறைந்து பின் வழிந்து மறைகிறது
சல்லடையிடப்பட்ட என் வெற்றுக்குவளைக்குள்
கனவிலிருந்து உயிர்த்து விழித்தபொழுது

சுட்டுக்கொல்லப்பட்ட பிணங்களின் அலறல்களுடன்
செய்தித்தாள்கள் பார்க்கின்றது
என் ஒவ்வொரு காலைப்பொழுதும்
துப்பாக்கியை வாயில் புகைத்து
செங்குருதி நிறைந்த தேனீர் குவளையை
வாயில் உறுஞ்சியபடி



படிப்பகம்

www.padippakam.com

# Tamil Information Centre (TIC)



"நம்பிக்கையற்ற பண்பைக் காட்டிலும்
கேடுகெட்டது வேறு எதுவுமே இல்லை.
அவநம்பிக்கை மனிதனை
தனிமைப் படுத்துகிறது.
நட்பையும் உறவின் இணக்கத்தையும்
சிதைக்கும் நஞ்சு அது;
எரிச்சலையும் வேதனையையும்
கொடுக்கும் முள் அது;
உயிரைப் பறிக்கும் வாள் அது."

\- புத்தர்

## About TIC

The Tamil speaking community in Sri Lanka has suffered injustice and oppression for a long time and finds it extremely difficult to seek redress in the face of continuing persecution and spurious propaganda and disinformation.

The Tamil Information Centre's mission is to empower people, particularly those suffering persecution and subjected to human rights abuses, valuing the distinct identities and differences among them and to improve the quality of life through access to knowledge.

படிப்பகம்

www.padippakam.com





- அரசியல் தஞ்ச கோரிக்கை, விசா விண்ணப்பம், நாடு கடத்தல் மற்றும் சகலவிதமான குடிவரவு பிரச்சனைகளில் நீண்டகால அனுபவம் மிக்க சட்ட ஆலோசகர்கள்
(Immigration and asylum)

- வீடுகள், வியாபார நிலையங்கள் வாங்க விற்க சட்ட உதவி
(Conveyancing/ Residential and Commercial)

- குற்றவியல் ஆலோசனை, பொலிஸ் பிரச்சனைகள்
(Criminal litigation, Police Station Attendance)

- இலவச சட்ட ஆலோசனை
(இலவச சட்ட ஆலோசனைக்கு தகுதியானவர்களுக்கு மட்டும்)
(Free Legal Help - Subjected to merit and means test)

தமிழில் தொடர்புகளுக்கு: ராஜ்
Tel: 08448 802 323
Fax: 08448 802 322

**Scudamores Solicitors**
132, Snakes Lane East, Woodford Green, Essex IG8 7HZ


படிப்பகம்